A TAMIL NOVEL :

MEGAVARNAN

Published by

ETTA PARTHASARATHY NAIDU

MADRAS

1914

 [illegible]

உ

வேலுமயிலுந் துணை.

மதிமயக்கால் மானமிழந்தோடிய

மேகவர்னன்.

இஃது

ஸ்ரீமத் - தி. சிவப்பிரகாசசுவாமிகள்

மாணவரும்,

ஈகையிலா இரத்தினக்களஞ்சியன், சிரிப்பாருண்ட சிந்தாமணிக்
கவிஞன், வாணனை வீணனாக்கிய வெல்லாளகெண்டன்,
நாஸ்திகனுக்கு நல்வழிகாட்டிய நற்குணச்சுந்தரி
இந் நூதன நாவற்கட்டு நூலாசிரியராகிய

திருநெறிச் செந்தமிழ்க் காதைக் களஞ்சியர்

பா. மாசிலாமணி முதலியாரவர்கள்

இயற்றியுந் திருத்தியுந்தர,

சென்னை - இட்டா

பார்த்தசாரதி நாயுடு

அவர்களால்

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1914.

[இதன் விலை 1-0-0]

உ

வேலுமயிலுந்துணை.

ஆக்கியோன்கருத்து.

அறிவிலுயர்ந்த ஆரிய நேயர்காள்!

கடல்சூழ்ந்த வுலகின்கண் நான்குவேதங்கள், ஆறுசாஸ்திரங்கள், பதினெண் புராணங்களையும் ஐயமறக் கற்றுணர்ந்த பெரியோர்கள் எப்பிறவிக்கும் மிக்க வுயர்ந்தது மானிடப் பிறவிதானென்று கூறுவதைநாமெல்லீருமுணர்ந்திருக்கின்றோமல்லவா. அதுபோல இவ்வரிய மானிடதேகத்தை நரைமூப்புச் சாக்காடு முதலியவைகள் வந்தணுகிப் பாழ்படுத்தாமுன்னும், காலன்பாசத்திற் சிக்குபடாமுன்னும், காயசித்திசெய்வதற்குக்காரணம் மதியே. அம்மதியையுடையோர் விதியைமுற்றும் வெல்லலாகும். ஆகையால் எக்காரணத்துக்கும் மதிதான் முக்கிய ஆதாரம், இதர்க்குத் திருஷ்டாந்திரங் கூறுவேனாக. இக்கதாநாயகனாகிய "மேகவர்னன்" மன்னாதிமன்னன் புதல்வனாயிருந்தும், மாதாசெய்தது மக்களைக் காக்குமெனும் நீதிப்படி தன்மதியைச் சிதறவிடுத்து, ஆணைப் பெண்ணென்றுமதித்து வதுவைசெய்துகொண்டு, அன்றிரவில் தன்னைப்போன்ற ஆணென்றறிந்து, வெட்கி மானங்கெட்டு யாவர் கண்ணுக்கும் புலப்படாமல் அச்சமயமே டிகம்பரியாகி வெளிநாடடைந்து பல துன்பங்கள்பட்டுழன்று, வீணே மதியை வெறுத்து விதியை நொந்து பிறகு அவன் தந்தையின் நல்வினையால் பராசத்தியினருளைப் பெற்று ஜீவரத்தினபுரிக் கரசனாகித் தன்னைப் பெற்றோர் கியாபகமுற்று போகபுரியையடைந்து தந்தைமுதலிய யாவரையுங் கண்டு, தானின்னானென்றும், அன்றுசெய்துவிட்டுச்சென்ற மதிமயக்கை வெளியிட்டுத் தன் குற்றத்தை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு, தன் தாய்தந்தையை ஜீவரத்தினபுரிக் கழைத்துவரும் மார்க்கத்தில், மாறுவேடங் கொண்டு நின்ற கொடிய அரக்கியைக்கண்டு மதிமயங்கி வாடி நின்றவனை சத்தியே அசரீரியாய்த் தோன்றி அம் மதிமயக்கை நிவர்த்தித்தபடியால் பிறகு பெருமையடைந்தனன்.

அன்பர்காள்? இக்காதையைப்பெற்று வாசித் தறிபவ ர்க்குத்தான் மதியின்சேஷ்டை எவ்வழியிற் கொண்டுதள்ளி அலை க்கழிப்பதை நன்கு அறியக்கூடும். சற்கரையென் றுரைக்கில் நாவுக்கு இனிப்புண்டாகுமா. அதுபோல் இச்சிறிய நூலைக்கை க்கொண்டு வாசிப்பவர்க்குத்தா னுண்மை விளங்கும். மேலும் இந்நூல் எழுதுவதற்குக் காரணம் யாதெனில், இக் கலிகா லக்கொடுமையால் சில பிள்ளைகள் பிறந்து வளர்ந்து தாய்தந் தையர்கள் வார்த்தைகளைச் சற்று மதியாமல் கெட்டலைந்து திரிவதைக்கண்ட சில மாந்தர்கள் பரிதாபப்பட்டு அய்யோ! அவர்க ளென்செய்வார்கள் விதியின்பயனை யார் தடுக்கக் கூடு மென்று கூறும் வார்த்தையைக் கேட்ட அடியேன் விதியை வெறுப்பது பிசகென்றும், மதியை யுடையவன் எந்தவிதத்தி லும் மாக்ஷிமைப்பெறுவானென் றுன்னி என் சிற்றறிவிற் றோ ன்றியவாறு கதாரூபமாகச் செய்ததைச் சில அறிஞர்கள் கண் ணோட்டமிட்டு இச்சரித்திர வரலாறுக்கு "மதிமயக்கால் மான மிழந் தோடிய மேகவர்னன்" என்று உரைக்கினும் தகும் தகும் என்று கூறியவண்ணம், அந்நாமத்தையே அடிமை அன் புடன் சூட்டித் தெள்ளிய நடையிற் கற்றோர் மற்றோர் யாவ ரும் மனம்போன போக்கெல்லாம் போகாதபடி யான் எழு தித்தந்தனன். இதனைக் கண்ணுறும் பாவலர்கள் குற்றங் காணில் மதலைச் சொற்களைக் கேட்டு மகிழுறும் பெற்றோர்க ளைப்போல் அங்கீகரிக்க வந்தனம் புரிகின்றேன். யாவரும் சுபம்!!!

பா. மா. மு.

உ

வேலுமயிலுந்துணை.

மேகவர்னன்.

இது

மதிமயக்கால் மானமிழந்தோடியவன் சரிதை.

விநாயகர் துதி.

சீர்சூழ்ந்த பாவலரே சிறியனேன் சிற்றறிவால்
வார்குழலார் மயக்கத்தால் மானமிழந் தோடியதோர்
பேர்வாய்ந்த மேகவர்னன் பெருங்கதையை யுரைப்பதர்க்குப்
பார்வதியார் மகிழ்ந்தளித்தக் கணபதிதாள் போற்றினேனே.

கவி.

மயக்கமெனுமிருளில் மகிழ்ந்துவிளையாடுவோர்
தயங்கிபதிவிடுத்துத் தான்சென்றுழல்வர்.

சரித்திரவரலாறு.

சகலவுயிர்களேயுங் காத்தலழித்தற்குக் காரணக்கர்த்தாவாகியும், ஸ்ரீ மகாலக்ஷிமி சமேதராய் வீற்றிருக்கும் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பதியைச் சகல தேவர்களும் நாடிப் பலதரமுந் துதிசெய்து ஏ! கர்த்தனே! கருணைப்பெருங்கடலே! கருங்கடலிற்றுயின்றோரே! கரியைக்காத்து இரக்ஷித்ததுபோல், மகா கிராதகாளாகியும், துஷ்டாளாகியும், கொடியவஞ்சக நெஞ்சையுடைய அரக்கர் கூட்டத்தை வதைத்து, எங்களை இரக்ஷிக்கவேண்டுமென்று தஞ்சமடைந்த காலத்தில், ஸ்ரீமந்நாராயணர் அபயஸ்தங்கொடுத்தவாறு, அறுபதுநாயிரவருடம் யாவராலும் புகழ்கொண்டாடச் செங்கோலோச்சி செய்துவந்த தசரதமகாராஜர் புத்திரகாமேஷ்டியாகத்தில் அவ்வெம்பெருமானே ஸ்ரீ ராமமூர்த்தியா யவதரித்து சீதாபிராட்டியாருட னுண்டுவந்த அயோத்திமாநகரத்துக்குத் தென்மேற்கிலுள்ளத் தண்டகாரண்யத்தின்கண்ணே பலசீடர்கள் புடைசூழக் காசியாத்திரைச்செய்

துவந்தச் சிவாநந்தச்சுவாமிகள் அங்கோர் கொன்றைமாமரத்தி னடியிற்றங்கி புலியாசனமிட்டுச் சிவயோகஞ் செய்திருந்தனர்.

அவ்வாறு மூன்றுதினம் யோகஞ்சாதித்து பின்னர் எழுந்து நித்தியகடனை முடித்துக்கொண்டு நந்நீராடி நீறணிந்து ஈசனைப்பணிந்து போற்றி, காய், கனி, கிழங்குகளைப் புசித்து இளைப்பாறியிருக்குஞ் சமயத்தில், சீடர்களெழுந்து வாய்பொற்றி கைகட்டி எங்கண்மீதருட்சுரந் தடிமைகொண்ட மெய்யரே? சரணம், நான்குதினத்துக்கு முந்தி நாமெல்லீரும் வரும்மார்க்கத்தில்,'சிரிப்பாருண்ட சிந்தாமணிக்கவிஞன்'சரிதையை யுரைத்து வந்ததில்,சில திருஷ்டாந்திரத்துக்காக 'மதிமயக்கால் மானமிழந்தோடியமேகவர்னன்'காதையைக் குறிப்பிட்டீர்களே யொழிய, அவனது சரிதையை விரித்துரைக்காமல் வேறு பலவிஷயங்களை எடுத்துக்கூறினீர்கள். ஆகையால் அடியோங்கண்மீது தயையிட்டுக் குறிப்பிட்டுவிட்டதைத் தெளிவாய் எடுத்துப் பிரசங்கிக்கக்கோருகிறேம், சற்குருவேயென் றடிபணிந்தார்கள்.

சீடர்கள் பணிந்து அன்புடன் கேட்டக்கேள்விக்குச் சற்குருநாதர் அகமகிழ்ந்து சீடர்களே? அக்காதையை விபரமாய்க் கூறுவேன், அதனைக் கேட்பீர்களாக. பாகீரதி நதிக்கரைக்கடுத்த போகபுரியெனும் ஓர் பட்டினமிருந்தது. அப்பட்டினம் இந்திரபுரிக்குச் சமதையாய்ப் புகழ்பெற்றிருந்தது. அப்பட்டினத்தை நீதியுடன் புவநேந்திரனென்றொரு அரசன் முப்பத்திரண்டு அமைச்சர்களோடு ஆண்டுவந்தனன். அந்நாட்டில் காலமழை தவறுமல் பெய்து மச்சநாட்டைப் பழிக்கத்தக்கனவும், யாவராலும் மெச்சும் நாடாயிருந்தது. காலவிதிப்படி சிவாலயங்கட்கும், விஷ்ணுவாலயங்கட்கும், அபிஷேக வாராதனைகளை நடத்தி, பிர்மவுச்சவங்களையும் வெகு விமரிசையாய்ச் செய்து கண்குளிரக் கண்டு மனமகிழப் பூரித்து தினைதினே யாசகர்கட்கு வேண்டிய தானங் கொடுத்து வாழ்ந்துவந்தனன்.

இத்தகைய நற்குணமுடைய புவநேந்திரராஜன் ஓர் தினம் மந்திரிகளைநோக்கி ஆ! எனதறிவுள்ள மந்திரிகளே! எனக்கோ வரவர திரேகந் தளர்ச்சிகொடுக்கின்றது, வயதும் எழுபதாயிற்று. எனக்குப்பின் இந்நாட்டை யாள்வதற்கும், என் குலத்தை விளக்க ஓர் சற்புத்திரனைக் காணேமே! இனி யாது செய

ப்போரேன்! மகப்பேறில்லானுக்கு நற்பதவி கிட்டாதென்று பல்சாஸ்திரங்களும் கூறுகின்றதே! அந்தோ! முந்திய ஜெனனத்தில் ஏதுபாவஞ் செய்தேனோ! எந்த சிசுவை கோபித்தடித்துத்துறத்தினேனோ! அல்லது இச்சென்மத்தில் கடவுளுக்கு என்ன தீங்கு செய்தேனோ! எந்தமகானிடந் தவறுதலான வார்த்தையாடினேனோ! எக்காரணத்தால் யான் மலடனாகிவிட்டேனோ! யாதுந் தெரியவில்லையே! ஏ! முதன்மந்திரியாரே? உமக்கும் புத்திரனில்லாக்கொடுமை மேலிட்டு வருத்தமுறுகிறதாகத்தெரியவருகின்றதே! ஆ! ஆ! இந்நாட்டை யாள்வதைவிடக்கானகம்புக்கித் தவவேடம் பூண்டு தவமியற்றி ஐயன் பாதஞ் சேருவதே யுத்தமமென்று துணிந்தேனென்றான்.

மன்னன் துயருற்றுரைத்தவார்த்தையைக் கேட்ட முதன் மந்திரி வெகு கெம்பீரத்துடன் அரசன் முகம்நோக்கி, கன்னனுக்குப்பின்னுயவதரித்த மன்னாதி மன்னரே! இனித் தாங்கள் துயருறவேண்டாம், சென்ற இரவுக்குப் பரமன் சந்நிதிக்குச்சென்று துதிசெய்திருக்குஞ் சமயத்தில், ஐயன் திருமுடிமீது சாற்றப்பட்டிருந்தச் செந்தாமரைப்புஷ்பம் வீழ, அதனை யர்ச்சகர் எடுத்து எனதுகரத்தில் வைத்து, இனி இச்செங்கோலைத் தாங்கியரசாள்வதற்கு ஓர் ஆண்குழந்தை யுதிக்குமென்று வாழ்த்தினர். பிறகு, அப்புஷ்பத்துடன் எனதரண்மனைக்குச் சென்று உண்டு பகவானைப் பூசித்துப் பள்ளியறைக்குட் பிரவேசித்து நித்திரைபுரியுஞ் சமயத்தில், ஓர் ஆண்டி என்கினவிற்றோன்றி, ஏ! அன்பா! உனக்கும் உனதரசனுக்கும் புத்திரனில்லா திருப்பதால், நீங்களிருவரு மொன்றுசேர்ந்து புத்திரகாமேஷ்டியாகஞ் செய்வீர்களாகில், தடையின்றி புத்திரர்கள் பிறப்பார்களென்று வாக்குத்தந்து ஜெயாவிஜீபவாவென் றுரைத்துக்கொண்டே சென்றுவிட்டனர். எனது கினவு ஒருக்காலும் பொய்க்காது. ஆகையால், தாங்கள் ஊக்கம்வைத்துத் தங்கள் குருநாதராகிய மச்சமுனிவரை விரவழைத்து அவரால் அவ் யாகத்தைப் பூர்த்தி செய்துகொள்வீராகில், தடையின்றி புத்திரசம்பத்தை யடையக்கூடும் அரசேயென்று பணிந்துரைத்தனன்.

பிறகு, அதனைக்கேட்ட மன்னன் மகிழ்ந்து அப்படியா! சரி, நம்பினேன். முதன்மந்திரியாரே? நீருரைத்தவண்ணம் அத்தச

ரத மகாராஜரும் யாகஞ் செய்துதானே நான்குமக்களை யடைந்தார். அதுபோல் நாமும் செய்து புத்திரப்பலனை யடைவதற்குத் தடையேயில்லை. ஆனதால் நமது சமஸ்த்தான சோதிடரை வரவழைப்பீ ரென்றுத்திரவு பிறந்தவுடன், முதன்மந்திரி ஓர் சேவகனால் அச்சோதிடரை வரவழைத்தனன். உடனே சோதிடர் மன்னன்முகம்நோக்கி, மகாராஜபூஜித மன்னாதி மன்னரே! பராக், வந்தனம் வந்தனம் என்று கைகூப்பி தெண்டனிட்டனன்.

சிம்மாசனத்தி லமர்ந்திருக்கும் மன்னன், ஏ! சோதிடக்களஞ்சியரே? யான் ஓர் பெரிய காரியத்தை நடத்தவேண்டியிருப்பதால் நன்னாளைக் குறிப்பிட்டுரைக்க வும்மையழைத்தேன், சீக்கிரம் ஓர்நாளைக் குறிப்பிடவேண்டுமென் றுரைக்கக்கேட்டச் சோதிடர், மன்னரே! தாங்களுரைத்த லக்கினத்தைக்கொண்டு நன்கு ஆராய்ச்சி செய்து சோதித்தேன். புத்திரனில்லாவறுமையால் பலருங் கொண்டாடத்தக்க யாகமொன்று இயற்றப் போகிறதாகத்தெரியவருகிறது. இன்று எட்டாநாளாகிய சுக்கிரவாரங் காலை நான்குமணிக்கு அந்நன்குள்ள யாகத்தை யாரம்பிப்பீராகில் தடையின்றி நடைபெறும், தங்கள் கோரிக்கையுமீடேறும் என்றுரைத்தனன்.

மன்னன் தன்னைத்தான் மறந்து திரேகம் புளகாங்கிதங்கொண்டு சோதிடக்களஞ்சியரே! என்மனதிடங்கொண்ட கருத்தை மிகவும் ஆராச்சி செய்ததைப்பற்றி, மெச்சினேன், மெச்சினேன்! இதோ என்னாற் கொடுக்கப்படும் பல வெகுமதிகளைப் பெற்றுச்செல்வீர். (சோதிடர் வெகுமதி பெற்றுச்செல்லல்.) அய்யா முதன்மந்திரியாரே? நமது சோதிடர் நாளைக் குறிப்பிட்டுரைத்ததைக் கேட்டீரல்லவா, இனித் தாமதிக்காமல் யாகஞ்செய்வதர்க்கு ஓர் பெரிய கொட்டகைப் போடுவித்து யாகத்துக்கு வேண்டுஞ் சாமான்களைச் சித்தப்படுத்துவதுடன் நமது குருவாகிய மச்சமுனிநாதருக்கு ஓர் கிள்ளாக்கு அனுப்பிவைப்பீர் என்றுரைத்தனன்.

சீடர்களே? (இதர்க்குள் நாளேழாயிற்றென் றறிவீர்கள்.) அதேதினத்தில் மச்சமுனிநாதரும் வந்துசேர்ந்தனர். அரசன் கண்டு அடிவணங்கி, நந்நீரால் அவர் பாதம் விளக்கிப் பூஜிதை

செய்து ஓர் ஆசனத்தி லிருக்கவைத்துத் தொழுது நிற்கும் மன்னனை மச்சமுனிவர் ஆசீர்வதித்து, ஏ! மன்னா? எனைவிரும்பி யழைத்தக்காரணம் யாது? என்று கேட்டனர்.

மன்னன் வாய்பொத்தி நின்று எனது சற்குருநாதரே? அடிமைக்கும், இம்முதன் மந்திரியாருக்கும் புத்திரசந்தானமில்லாமல் வருத்தமுற, பரமன் இவர் கனவிற்றோன்றி தங்களைக் கொண்டு புத்திரகாமேஷ்டியாகஞ் செய்துகொள்ளும்படி வாக்களித்தவண்ணம், தங்களை வரவழைத்தேன் தேவா, என்றுரைத்துச் சிரம்வணங்கிப் பணிந்து நின்றனன்.

முநிநாதர் பணிந்த மன்னனைநோக்கி, அப்படியா! மகா சந்தோஷமுற்றேன். உங்களிருவர் கோரிக்கையை யீடேற்ற ஈசன் காத்திருக்கிறார். அவர் பெருமையை யென்னாற் கூறமுடியாதே! என்று மழியாப்பொருள். பிறப்பிறப்பில்லாப் பொருளாயிற்றே! அவர்வாக்குக் கெதிர்வாக்குண்டா! சரி அப்பரஞ்சோதி வாக்குப்படி நீங்கள் யாவரும் நீராடிப் பட்டுபீதாம்பரந் தரித்துத் திரிகரண சுத்தியுடன் கொட்டகையில் ஸ்தாபிக்கப்பட்ட யாகசாலைக்கு நாளைய காலை நான்குமணிக்குச் செல்வீர்கள். யானும் அவ் யாகசாலைக்கு வந்திருப்பேன் என்று வாக்களித்தனர்.

அதற்குள் கதிரோனும் மேற்குத்திசையைநாடிச் சென்றான். உடனே கொலுகலைந்து அவரவர் அரண்மனைக்குச் சென்று, தங்கள் தங்கள் காரியத்தைக் முடித்துக்கொண்டு அரசனும் அவன் தேவியும், மந்திரியும் அவன் தேவியும் நீராடி, நீறணிந்து, பட்டுபீதாம்பரந் தரித்து, யாககுண்டத்தருகில் வந்தமர்ந்தனர்கள். அக்குண்டத்தருகிலிருந்த தர்ப்பாசனத்தின்மீது முநிநாதர் எழுந்தருளி யாகமந்திரத்தை யுச்சரிக்க, மன்னனும் மந்திரியுங் கொழுந்துவிட்டெரியும் குண்டத்தில் நெய்யை ஓயாமல் விட்டுக்கொண்டே யிருந்தனர்கள். இவ்விதமாக நாற்பதுநாள் இரவும் பகலும் நித்திரையன்றி யாகத்தை நிறைவேற்றிவருஞ் சமயத்தில், அதினின்று ஓர் பொற்கலசந் தோன்ற, அதை முநிநாதர் கண்டு மகிழ்ந்து தனது கரத்திற்றாங்கி அதனுளிருந்த அமிர்தத்தை பகிர்ந்து மன்னனுக்கும் முதன்மந்திரிக்கும் அதிவிசுவாசத்துடன் கொடுத்தனர்.

சீடர்களே? அவ்வமிர்தத்தை மன்னன் அகமகிழ்ந்து, தன் பத்தினியிடங் கொடுக்க, அவள் அதைப்பெற்று மன்னனு திருமுகத்தைப் பார்த்து மோகித்துக்கொண்டே யுண்ணச் சற்றுத் திகட்டினவுடன் கிஞ்சிற்று மிச்சமிருந்தது. மந்திரியினாற் கொடுக்கப்பெற்ற அவன் மனைவி எகிரிஹதிக்குவரும் சந்திரனைத் தரிசித்துக்கொண்டே யுண்டனள். பிறகு யாவரும் யாகசாலையைவிட்டு நீங்கித் தத்தம் அரண்மனைக்குச் சென்று அன்றிரவைக்கழித்து மன்னனும் மந்திரிகள் யாவரும் காலக்கடனைக் கழித்து, அரனைப்பணிந்து கொலுமுகம் வந்துசேர்ந்தனர்கள். உடனே மன்னன் முதன்மந்திரியைநோக்கி அய்யா முதன்மந்திரியாரே? நீர் சகலருக்கும் வேண்டியதானங் கொடுத்தனுப்புவீர். இதோ நமது முநிநாதர் பிரயாணப்படுகின்றார். அவருடன் நல்வார்த்தைபாடி வழிவிட்டு வருகிறேனென்று சென்றனன்.

பிறகு, அரசன் மனைவி மிச்சமாகிய அமிர்தத்தை மறுநாட் காலை அருணனைத் தரிசித்து உண்டனள். அவ்வாறு உண்ட அரசன் மனைவியும், முதன்மந்திரி மனைவியும் தங்கள் தங்கள் பதியுடன் மனங்கலந்து வாழ்ந்துவர, திங்கள் பத்தில் அரசன் மனைவி ஸ்ரீபாலசுப்பிரமணிய னழகையொத்த மகனையும், முதன்மந்திரியின் மனைவி மதியைப்பழிக்கும் புதியவழகுடைய சுந்தரனையும் பெற்றனர்கள். அன்று கார்மேகங்கள் நீரை வருஷித்தன. அப்போது நாடெங்குஞ் செழித்தது மறுநாள் காலை ஆறு மணிக்குச் சூரியவொளியையொத்த ஓர் பெண்குழந்தையை அரசன்தேவி சுகமுடன் பெற்றனள். தன்மனைவி பிள்ளையையும் பெண்ணையும் பெற்றெடுத்த சேதியைக்கேட்ட அரசன் பேரானந்தக்கடலில் மூழ்கி இன்றல்லோ மலடனென்னும் வசையை நீக்கினேம்! ஆ! மாசிலாமணியீசனே! சரணம், சரணம் என்று பலநாமத்தால் துதித்துப் பலவிததானங்கள் செய்தனன்.

சீடர்களே? இனிவருமாற்றைக் கவனிப்பீர்கள். மன்னன் தன் சபையிலிருக்கும் சோதிடர்களைநோக்கி ஏ! சோதிடர்களே? நேற்று மாலை நான்குமணிக்கு ஓர் ஆண்குழந்தையும், இன்று காலை ஆறுமணிக்கு ஓர் பெண்குழந்தையும் எனக்குதித்திருக்கிறபடியால், அவைகளின் பலாபலன்களையும், அச்சிசுக்

களுக்கு என்ன நாமதேயம் கொடுத்து அழைக்கக்கூடும்? யாவை[illegible] நன்கு ஆராய்ந்து எடுத்துக்கூறுங்கள் என்று கட்டளையிட்டனன்.

சோதிடர்கள், இராஜபூஜித பூலோகவிந்திரரே! பராக்! அய்யனே? நாங்கள் தாங்களுரைத்த லக்கினத்தைக் குறிப்பிட்டுக்கொண்டு, சோதிட நூலை நன்கு ஆராய்ச்சிசெய்தோம். ஆ! ஆ! என்னபெருமைபெற்றீர்! அகத்தினழகு முகத்திற் காட்டுகின்றதே! கீர்த்திமானென்றால் உமக்கேதகும், ஆண்குழந்தையின் வரலாற்றைக் கவனிப்பீர், தாங்கள் யாவராலும் மெச்சத்தகுந்த யாகம் வளர்த்தும்போது, அதினின்று தோன்றிய அமிர்தத்தை எங்களன்னையாகிய தங்கள் தேவியார் கரத்திற்கொடுக்கும் சமயத்தில் மாலைப்பொழுதாயும், கதிரவன் மேற்குத்திசையைநாடுஞ் சமயமாயும், அவனது கிரணத்தால் ஆகாயம் பஞ்சவர்னத்துடன் ஜொலித்தக்காந்தி யுமது திருமுகத்தில் தாக்கக்கண்ட தேவி, வியப்புற்று அகமகிழ்ந்து அவ்வமிர்தத்தில் பாகியுண்ட பெருமையாலுதித்த பாலனென்றறிவீர். அப்பாலகனே பஞ்சவர்னத்தோடுங்கூடி சதாயிருப்பான். உமது தேவியார் அச்சமயம் வியப்புற்ற நிலவரத்தால் எதைக்காணினும் சற்று பயங்கி வாடியோடி பின்வருவன். அவன் வல்லமைக்கு ஸ்ரீபரசுராமனும் நிகராகான். அச்சிறுவனுக்கு ஆயுட்பிரமாணம் எழுபத்தைந்தென்று கூறவேண்டும். அய்யனே? மேற்கூறிய அம்ஸத்திற்பிறந்த குழந்தைக்கு "மேகவர்னன்" என்று அழைப்பது ஒக்கும். அச்சிறுவனுக்குப் பதினைம்வயதாரம்பத்தில் ஓர் கெண்டமென்று கூறவேண்டும். ஆனால் ஜீவபயமில்லை. பல ஹிம்சையடைந்து பிறகு மன்னனாகுவன் என்றறிவீர் வேந்தே என்று கூறினார்கள்.

மன்னரேறே? தங்கள் தேவியார் மறுநாட்காலையில் மிச்சமிருந்த அமிர்தத்தைத் தன்கரத்திற்றாங்கி அருணனைப் பூசித்து அவன் எதிரிலுண்டமையால், என்றும் அப்பெண்குழந்தை கதிரவனொளியைப்போல் பிரகாசித்து, நீடுற்று வளர்வள். அக்குழந்தைக்குக் காந்தாமணியென்று நாமஞ்சூட்டவேண்டும். மகா பதிவிரதையாயிருப்பள். அருமைமக்களைப் பெருவள். அப்போதுதான் தங்கள் குமாரனது மதிமயக்கத்தின் காரணம்

நன்குவிளங்கும் தங்கள் கீர்த்திக்குக் கிஞ்சித்துந் தாழ்மை கிடைக்கும் பூபதியென்றுகூறி முடித்தனர்கள்.

இவையனைத்தையுங் கேட்ட மன்னன் சற்று ஆயாசமுற்று, அவரவர் நிழல் அவரவரிடமே தங்கியிருப்பதுபோல், வினையையனுபவித்துத்தான் தீரவேண்டும். சரி, அய்யா சோதிடர்களே? இதோயானளிக்கும் பரிசைப் பெற்றுச் செல்வீர்கள் (பரிசளித்தல்) முதன்மந்திரி அய்யா சோதிடர்களே ? மன்னருக்கு ஆண் குழந்தைபிறந்த லக்கினத்தில் எனக்கும் ஓர் மகன் உதித்தனன். அதன் விஷயமாகச் சற்றுக் கவனித்துரைக்கவேண்டும். அதிலும் அனுபோகத்துக் கொட்டியிருக்கவேண்டுமென்று கேட்டனன்.

சோதிடர்கள், அய்யா முதன்மந்திரியாரே? உமையவளுரைத்த சோதிட சாஸ்திரத்தை நன்றாய்ப் பரிசோதித்தோம். உங்கள் திசையை என்னென்று கூறுவோம்! பிள்ளை பிறந்தால் இப்படிக்கல்லோ போகம் வரவேண்டும்! யாங்கள் அநேகபிள்ளைகட்கு ஜாதகமெழுதியிருக்கிறோம். இச்சாதகன் கோடியைப போலென்றுங் கண்டெழுதவில்லை! அப்ப! என்னபெருமையுள்ள ஜாதகம் சற்று கவனிப்பீர். இக்குழந்தை சந்திர அம்சத்திற் பிறந்தவன், சந்திரனைப்பார்த்த மனம் எவ்வாறு குதூகலிக்கின்றதோ அதுபோல் யாவர்பார்க்கினும் மோகங்கொள்ளாதவர்களில்லை. இவன் பதினாறாம்வயதில் பெண்ணுருவமெடுக்கப்பட்டு, பிறகு ஆணாகி, விவாகத்தை முடிப்பித்துக்கொண்டு சிலநாட் கழித்து மன்னர்கள் வணங்க செங்கோல்தாங்கி அரசாள்வான். இவனுக்கு ஓர் பிள்ளை பிறக்கும். அப்பிள்ளையாற்றான் இந்நாட்டு மன்னர் கீர்த்திபழியும். இச்சாதகனுக்கு ஆயுட்பிரமாணம் அறுபதென்று களங்கமற்றுக் கூறுவோம். இவனுக்குச் சந்திரகாந்தனென்று நாமமிட்டு அழைப்பீராக. இப்போது யாங்களுரைத்தப் பலனை யொருவருக்கும் உரைக்கவேண்டாமென்று கூறி முடித்தனர்கள்.

முதன்மந்திரி, அ! அப்படியா! அய்யா சோதிடர்களே? இச்சன்மானத்தை மனமகிழ்ப்பெற்றுச் செல்வீர்கள் (செல்லல்.) பிறகு மன்னன் மகனும், மந்திரி மகனும் காலொத்தமேனியும்-

பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வயது ஐந்தாயினதைக் கண்ட அவர்கள் தந்தையர்கள், வித்தையை விருத்திசெய்யும் நன்னாளாகிய தைபூசத்தினம் நற்குருவை வரவழைத்து வித்தியாப்பியாசஞ் செய்தனர்கள். அவ்விரு ஆண்குழந்தைகட்கு வயதேறவேறச் சகல வித்தைகளையுங் கற்றுக்கொண்டனர்கள். வயதும் பதினைந்தாயிற்றென் றறிவீர்கள். ஆனால் அச்சிறுவர்களிருவரும் மனமொத்து நேசித்து இணைபிரியாமல் கலந்தாடிவந்தனர்கள். அரசன் பெண்மணியோ இல்லறசாஸ்திரம் பலவித நன்னூல்களைக் கற்றுணர்ந்து வித்வசிரோன்மணியென்று யாவராலும் அழைக்கப்பட்டுப் பனிரண்டாம்வயதிற் பிரவிடையாகி கன்னியாமாடத்திற் பனிரண்டு தோழிகள் ஏவற்புரிய வெகு சம்பிரமத்துட னிருந்தனள்.

சீடர்களே? அரசன் மைந்தனாகிய மேகவர்னன் நாடோறும் தனியே காட்டுக்குச்சென்று வேட்டையாடி மகிழுடன் தன் அரண்மனைக்கு வருவதுவழக்கம். அதுபோல் ஓர் தினம் கானகஞ்சென்று சிம்மம், புலி, கரடி, காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி இவைகளின்மீது பாய்ந்து வேட்டையாடி இளைப்புற்று, அங்கோர் தடாகத்தைக்கண்டு நீரருந்தி, மாலைப்பொழுதுக்குக் குதிரையேறி தன் அரண்மனைக்குத் திரும்புங்கால், மந்திரிகள் வாழும் வீதியோடுவருஞ் சமயத்தில், முதன்மந்திரியார் வீட்டின் மாடிமீது மந்திரி புத்திரனாகிய சந்திரகாந்தன் நன்நீராடி நான்கடிநீளமுள்ள தன் தலைமயிரை கோதிக்கொண்டிருந்தான். அப்போது மாலைவேளையானதாலும், சந்திரன் மேற்குத்திசையிலுதித்தக் குளிர்ச்சியுள்ள ஜொலிப்பினாலும், இயற்கெனவேபெண்கள்நாணும் அழகுடைய முகத்தையுடையவனாயும், மேனகை நடையையொற்றவனாயும் இருப்பவனாதலால், அக்கொற்றவனை பெண்ணென்று கண்டு மதிமயங்கி, அன்று சோதிடர் உரைத்த வாக்குப்படி மோகித்துத் திக்கற்றவன்போல் அலறி, ஆ! அளியே! கிளியே! ஒளியே! அடிமானே! தேனே! ஐயோ! இப்படியும் என்மனதைக் கொள்ளையிடலாகுமா! ஆ! என்ன அழகுள்ள கேசமடீ! அடீ ஆனந்தத்தைத்தந்த என் ஆருயிரே! உன் அழகை எழுதினவனே பிரமன்! அவனுக்கெதைத் தருகினும் ஒக்காதடீ! ஆ! என்செய்வேன்! நீயோ மாடிமீதிருக்கிறாய்! யானோ கீழிருந்து

தவிக்கின்றேன்! என்னைச் சற்றுத் திரும்பிப்பாராயா! பாபியாகிய யான்கொண்ட அபிப்பிராயத்தை உன்மனங்கோணாமல் நீக்காயா! யானிவ்வாறாசை யுனக்குத் தக்கஞ்செய்திடினும் உன் முன்னழகுக்கு ஈடாகாதே! அடி என் கண்ணே! எப்போதும் ஆடவர் ஓர் பெண்மீது வலியமோகிக்கில், கிஞ்சிற்று நாணமடைந்தவள்போலிருப்பது சகசியமே. அதுபோல் நீயிருக்கலாகுமா? உன்னை யானணையாவிடில், என்னாவி மேனோக்கிவிடுமே! அப்பொழுது நீ பாவத்தை வீணாய்த் தேடிக்கொள்வது சரியல்லவே! அடி நாஜினி! என்று உன்கரத்தைப்பற்றிக்கொஞ்சிவிளையாட இடந்தருவையோ! என்று தன் குதிரைமீது சொக்கிச் சாய்ந்தனன். அன்று பதினாறும்வயது ஆரம்பமென்றறிவீர்கள்.

பிறகு, அவன் குதிரை வழக்கம்போல் அரண்மனைவாயிலில் வந்து நின்றது. அங்குள்ளவர்கள் மேகவர்னனைக் கண்டு, அய்யோ! ஈதென்னகொடுமை! யார்செய்ததிங்கு! என்று பெருந்துயரத்துடன் அவனைக் கைலாகுகொடுத்து அசையாமலெடுத்துக்கொண்டு சென்று ஓரறைக்குளிருந்த சோபாமீது வளர்த்தினார்கள். மேகவர்னன் வேட்டைக்குச்சென்று வருஞ் சமயந்தோறும் அவனது தங்கை காந்தாமணி அண்ணன் வேட்டையாடிவந்த சேதியைக்கேட்டு மகிழ்வதுவழக்கம். அதுபோல் தன் அண்ணான்வந்த சேதியைக் கேட்டு ஓடோடிவந்து, அண்ணன் கிடக்குங்கோலத்தைக் கண்டு மெய்மறந்து, மிகுவியசனமுற்றுக் கிட்டநெருங்கி, தேகமெங்குந் தடவிப்பார்த்து வியர்வையைத் துடைத்து, ஏ! எனதன்பார்ந்த சோதரரே! இதென்னவிந்தை! என்றும் இப்படிக்கு நீர் வந்தவரல்லவே! எக்காரணத்தால் இக்கோலமானீர்! சற்று வாய்திறந்துகூறீரா! எனக்கோ துக்கமதிகரிக்கின்றதே! என்னசெய்வேன் என்று அதிதுக்கத்துடன் பிரலாபித்தனள்.

அச்சமயம் மேகவர்னன் சற்று கண்விழித்துப் பார்த்து, ஆ! நாம் கண்டமாது, நமது குறிப்பறிந்து நம்மைக் கடைத்தேற்றுவதற்கு நாடி இங்குவந்துவிட்டாள்! நாம் நாடின பெருமையே பெருமை! சபாஷ்! வெகு சந்தோஷம்! அடடா! நாமிக்கோலமாய்க் கிடப்பதைக் கண்டு மனந்தாளாமல் இவள் வருந்துகிறாள்போலிருக்கின்றது. அய்யோ! நம்மால் என்வரு

த்தூறவேண்டும் நமக்குப் பெண்தோஷம் சித்திக்கும். நாமிவளுடன் வார்த்தையாடி மனதைத் திருப்திசெய்வோம். சரி, மோகத்தைத்தந்த மாயக்கிளியே! மின்னலொளியே! மோகன அளியே! அங்கு மாடிமீதிருந்த நீ எவ்விதக் குறியால் எனதெண்ணத்தைத் தெரிந்து இங்குற்றனை! பெண்கள் நினைந்தால் எக்காரியந்தான் முடிவுபெறாது! ஆ! யான்கொண்ட மோகத்தைத் தெரிந்துகொண்ட மோகனாங்கி! அய்யோ! நீ உன்கால் நோக நிற்பது என்மனந் தாளவில்லையே! என்னருகிலிருந்து உன் முத்தான வாயைத்திறந்து சற்றுப் பேசுவாயடீ! மேனாட்டிலிருக்கும் அந்நான்குமாதர்களும் உன்பவழநிறத்தையொற்ற வுதடுக்கு நிகராகார்களடீ! அந்தோ! நிற்குஞ் சாயலைக்குறித்து என்னென்று புகழ்வேன்! ஆ! அவ் இரதிக்கும் மிக்க அழகைப்படைத்த இரத்தினாங்கி! நீ இருந்த இடத்தைவிட்டு மனந்தாளாமல் இங்குற்று யான் படும் அவஸ்தையைக் கண்டும், என்னிலுந் திகைத்தவள்போல் முகவாய்க்கட்டின்மீது அழகுள்ள விரலைவைத்து நீ அங்குமிங்குங் கண்டு விழிப்பதேனோ! அடீ மாசிலாக் குணத்தினளே! போதும் போதும் யான் ஆணாய்ப்பிறந்தசுகம்,—

சிந்து.

வாயைத்திறந்தொரு வார்த்தைசொன்னால்பெண்ணே
வர்ணமணிமுத்து சிந்திடுமோ
பாயுமொளிமுத்துச் சிந்திவிட்டால்கண்ணே
பதறியெடுத்துனக்குத் தருவேனே.

ஆ! ஒருவன் வருத்தமுறுங் காலத்தில் குலதேவதை முன்நின்று தீர்த்தாள்வதுபோல் நீ என்மோகவருத்தத்தைத் தீர்த்தாண்டருளவந்த கோமளாங்கி! அடீ எனதெண்ணத்தை பூர்த்திசெய்யவந்த சொர்ணக்கிளியே! ஏனின்னமும் என்மனதைச் சோதிக்கின்றாய்! இப்பிடிவாதம் உனக்குதவாதடீ! எட்டுவித விவாகத்தில் காந்தர்வ விவாகம் மிக்கப்பெருதடீ! ஆ! தேடக் கிட்டாத்தேவியே என்று அயன்று சக்தியற்றுப் பிறகு தேறி மாடிமீது ஆணைப் பெண்ணுருவென்று மதித்த மயக்கத்தால் எதிரில் மனம்வாடி நிற்குந் தன் சோதரியின் கரத்தைப் பிடித்திழுக்க எழுந்தனன்.

அக்குறிப்பையறிந்த அவன் தங்கை காந்தாமணி ஆ! ஈதென்ன அநியாயம்! நமது அண்ணன் காட்டுக்குச் சென்று வேட்டையாடி வரும் சமயத்தில் மோகினிவாடைத் தாக்கியிருக்கவேண்டும். அம்மோகத்தால் நம்மை பின்னையென்றுணராமல் வாய்குளறி பேசுகின்றார். நாமிங்கு சற்றுத் தங்கியிருப்போமாகில் வீணாய்க் கற்பழியநேரிடும், பிறகு இருவருக்கும் அபக்கியாதியான பெயர் வந்தேவிடும் என்று நினைத்து ஓடிவர வாரம்பித்தனள். அக்குறியைக்கண்ட அவள் அண்ணன் ஆ! இம்மாதுசிரோன்மணியேய்க்க என்னைக்கொண்டு ஓடத்தலைப்படுகிறாள். இனி யிம்மாதை விடாமற் பிடித்து நமது காரியத்தை முடித்துக்கொள்வதே சரியென்று பின்னேடி அவள் சேலையைப் பிடித்திழுக்கத் தலைப்பட்டான். (இது எவ்வாறிருந்ததெனில் மச்சநாட்டின்கண்ணே மறைபுற்றுவாழ்ந்துவந்த துரோபதையைச் சண்டாளனாகிய கீசகன் மோகத்தால் பின்தொடர்ந்து சென்றதுபோலொத்திருந்தது) பிறகு, காந்தாமணி அதிக பயமுற்றுத் திகிலடைந்து, ஓவென்றுகதறி, அண்ணன் பிடித்திழுக்குந் தன் சேலையின் முந்தானியை அதுவரையிற் கிழித்துக்கொண்டு ஓடோடிவந்து தன் தாய்மடிமீது வந்து வீழ்ந்தனள்.

அதனைக்கண்ட அவள் அன்னை குணபூஷணி, ஆ! மகளே! என்னடியம்மா! இத்தன்மையா யோடிவந்து வீழ்ந்தகாரணம் யாதோ! நீ யுத்தவயதடைந்திருப்பதால், எதைக்கண்டு பயந்து ஓடிவந்தனை! இதென்ன உன்சேலையுங் கிழிந்துண்டிருக்கின்றதே! யார்செய்த தீங்கடி கண்ணே! நீ யாதொன்றுக்கும் பயப்படாமல் உரைப்பாயம்மா! உனதண்ணனறிந்தால் எவராயிருந்தாலும் விடானே! உன்மீது மிகுபாசமுடையவனாயிற்றே! அய்யோ! அவன் வேட்டைக்குச் சென்றவன் வந்தானோ, என்னவோ தெரியவில்லையே! அடியம்மா இரக்கினங்கி? சிற்றன்னடி கெஞ்சிற்றுங் கொணர்வாயடீ! என்று பலவாறாகக்கதறித் துக்கித்தனள்.

அத்தன்மையாய்த் தன்னைக்கண்டு கதறும் அன்னைமுகம் காந்தாமணி நோக்கி, விம்மிக்கொண்டே அடியம்மா! என்னைப் பெற்றதாயே! இன்று நான் ஆபத்தினின்று நீங்கித் தப்பித்தோடி வந்து இவ்விடம் விழுந்தேன். ஆ! நாத்தனாகிய பாசிலாமணி

பிசனே! இன்று என்மானத்தைக்காத்த மகாதேவா! இதோ உன்கிருபாதத்துக்குப் போற்றினேன் சரி, அம்மா? தாயே? என்று அண்ணன் வேட்டைக்குச்சென்று இங்ஙனம்வரில், யான் சென்று வேட்டையின் பிரதாபத்தைக்கேட்டு மகிழுறுவது வழக்கம். அதுபோல் இன்றுஞ் சென்றிருந்தேன். அஃ அம்மா! அங்குநடந்த சேதியை எவ்வாறு கூறுவேன்! எனதண்ணன் காட்டுக்குச்சென்று வேட்டையாடிவந்த சேதியையுரைக்காமல், தான் வரும்வழியில் மோகினிவாடைத் தாக்கினதுபோ லிருக்கிறது, வெகு மோகத்தால் அம்மோகினியே எனையென்று நினைத்துக் கொண்டு மோகபித்து பிடித்தவன்போ லுளறி யென்னை யணைய வந்தனர். அச்செய்கையைக்கண்ட யான் ஓடிவர எனைத்தொடர்ந்து என் சேலையைப்பிடித் திழுக்க அதுவரையிற் கிழிந்தெரிந்துவிட்டு உன்னைநாடி யோடிவந்து விழுந்தேன். உலகில் ஆடவர்க்கு மோகம்பெருகில் 'செத்தநாயையும் பெத்தபெண்ணையும்' விடாரென்றும் நீதிமொழி எனதண்ணனாற்பாற் கண்டேன். இன்னேரம் அவர் ஆவி என்னமாய் முடிந்ததோ! அவரிடம் நீ சென்று காண்பாயம்மாவென்று கூறினள்.

அவ் விபத்தைக்கேட்ட மன்னன்தேவி குணபூஷணி, அய்யோ! மகனே! நீ வரும்வழியில் அப்பாழும் மோகினி யெங்கு தோன்றினளடா! இதற்கென்செய்வேன்! உன்னை யெப்பாடுபட்டு பெற்றேன்! தேவனளித்தச் சுதன் நீயல்லவா! ஆ உன் ஆவி எவ்வாறு தவிக்கின்றதோ! (இங்கு அழுதுகொண்டேவந்து மேகவர்னனைக்காணல்) அடா மகனே! என்னடா இப்படி விழுந்து கிடக்கிறாய்! நீ யாரைக் கண்டு இப்பாடுபடுகிறாய், தைரியம் புருஷலக்ஷணமாயிற்றே, எதனையோகண்டு இப்படியுமிறண்டு கிடக்கலாகுமா! வழியிற்செல்லும் பெண்கண்மீது மோகிக்கலாகுமா! மோகத்தால் மாண்டவர்கள் எத்தனையோ நபராயிற்றே! அதனை நீ சற்றும் உணர்ந்தாயில்லையே என்று பலநீதிமார்க்கங்களைத் தெரிவித்துக்கொண்டுவருஞ் சமயத்தில், மேகவர்னன் கண்விழித்து தன் அன்னையை நோக்கி யுரைக்கலானான்.

எனைப்பெற்ற தாயே! கிஞ்சிற்று என் வாய்மொழியைக் கவனிக்கவேண்டும். யான் இன்று காலைவேட்டைக்குச் சென்று மாலைப்பொழுதாயிற்றென்று வரும்மார்க்கத்தில் மந்திரிகள்வா

ழும்; விதியாகவா, முதன்மந்திரியார் மேன்மாடிமீது நின்றுகொண்டு தலைமயிரையாற்றிக்கொண்டிருந்தாள் ஓரழகியபெண்; அவளழகைக் கற்றுணர்ந்தக் கவியாளிகட்கே வர்ணித்துக்கூற முடியாதெனில் மோகவெறி தலைகொண்டிருக்கும் பாவியாகிய யான் இச்சமயங்கண்ட பெண்ணின் அழகையெடுத்துக்கூற முடியவில்லையே தாயே. யானங்ஙனே தயங்கி நின்று வந்தகுறிப்பறிந்து, அச்சுந்தரி யிங்குவரக்கண்ட யான் நேரில் வெகுசாய் மன்றாடினேன், அவள் கண்ணீர்விட்டு ஓடத்தலைப்பட்டாள். யானும் பின்னோடி அவள் சேலையைப் பிடித்தேன். அவள்கோபங்கொண்டவள்போல் யான்பிடித்திருந்த பிடிவரையில் கிழித்துவிட்டு எனதன்னைக் கொள்ளையிட்டுச்சென்றே விட்டனள். ஆனதால் அம்மணீ! என்மீது யாதொருவருத்தம் வையாமல் அப்பெண்ணையேபேசி திர்மானித்து மணம் முடிப்பிராகில் எனதாவி பொந்தியிற் றங்குமென் றழுதுரைத்தனன்.

மைந்தன் உரைத்த மொழியைக் கேட்டத் தாயாகிய குணபூஷணி, மனந்தியங்கி தன் வயிற்றைப் பிசைந்துகொண்டு அடா மகனே! நீ கண்டு மோகித்த பெண் முதன்மந்திரி வீட்டிலில்லையே! நீ கண்டு மோகித்தது யோகினியென் றறிவாயடா, உன்மனதில் அங்கு நின்றோடினவள், உன்னருமைத் தங்கையடா மகனே. உலகில் அறிவில்லானுக்கு மோகமே துக்கக்கடல். அப்படி மோகத்தால் மாண்டவர்களைச் சிலரைக் குறிப்பிடுகிறேன், கேட்பாயடா கட்டிக்கரும்பே,—

விருத்தம்.

மோகத்தால்மாண்டவர்க ளனந்தமுண்டு
மொழிகுவேன்சற்றுநீ கேட்பாயப்பா
வேகமாய்ச்சீதைதன்னைக் கொண்டுசென்று
பேதினியிலரக்கனுந்தான் மாண்டானந்நாள்
ஏகபலங்கொண்டதொரு கீசகன்றான்
இசையாதத்ரௌபதையால் மாண்டான்விணில்
ஆசையினால்நீயடைந்த பெண்ணாந்தன்னை
அப்பனேயகற்றிடுவா யறியச்சொன்னேன்.

அடா! என்னருமைக் குழந்தாய்! மோகமென்பது யாரையும் விடாது. ஆகிலும் பெண்ணில்லாவீட்டில் பெண்ணுண்டெ

ன்று நீ கண்டுரைத்தது வீண்மயக்கமே! இனி நீ உன்னறிவைச் சிதைவிடாமல் சுகமுடனிருப்பாய்க் கண்ணேயென்று கூறினாள்.

மேகவர்ணன் அம்மணீ! ஈதென்னகோரம்! நீரேஎனதிடம் கடைசியாயுரைத்த மொழியே போதுமான சாக்ஷி. அதாவது மோகம் யாரையும் விடாதென்றுகூறித் தாங்கள் சமாதானவார்த்தையாடினீர்கள். அதற்குமாத்திரம் என்மன மிடந்தராது, ஒப்பேன். நீர் அம்மாதைப்பேசி முகிவுகட்டி யெனக்கு மாலை சூட்டி வைக்காவிடில், வீணில் மாள்வது திண்ணம் திண்ணம். அலது யான் அப்பெண்ணைக்கண்டது பொய்யா? அய்யோ பொய்யேயென்று மண்மீது மரணமூர்ச்சையடைந்தான்.

அவன் கோரிக்கைக்கண்ட குணபூஷணி, அந்தோ! இதற்குத்தானா யாகம் நடத்தி யதி நின்று தோன்றிய அமிர்தத்தையுண்டு நீ கருதரித்து உனைப் பெற்றெடுத்து, இதுகாறுங் காப்பாற்றினேன்! அடாகிளியே! நீயெழுந்திருப்பாய். இச்சேதியை உன் தந்தைக் கறிவித்து அதன்மீது யுக்தா யுக்தப்படி நடத்துகின்றேன் என் இருகண்ணேயென்று தேற்றினாள்.

மேகவர்ணன் கிஞ்சிற்று மோகந்தெளிந்து, எனைப்பெற்று அருமைபாராட்டி வளர்த்தத் தாயே! பெற்றவளுக்கேதெரியும் பிள்ளையினருமையென்பதுபோல், எனதவஸ்தையைத்தாங்கள் நன்றாய்த் தெரிந்துகொண்டவ ராதலால் தாங்கள் கூறியவாறு எனது தந்தையிடந் தெரிவித்து எனதெண்ணத்தைப் பூர்த்திசெய்துவைப்பீர், இதோ போற்றிசெய்தே னம்மணி யென் றடிபணிந்தான்.

குணபூஷணி, சரி சரி. அப்பா கண்ணே! யாவும் தெய்வச்செயலின்படிதான் முடியும். சுகமுடனிருப்பாய், இதோவுன் தந்தைபாற் செல்கின்றேன். (செல்லல்) சரணம் சரணம் பிராணேந்திரரே! அதற்கு மன்னன்மகிழ்ந்து கட்டியணைத்து முத்தமிடுஞ் சமயத்தில் அவள் முகத்தை நோக்கி, அடிமாதே! எனைக்காண வந்த முகம் வேறுபட்டிருப்பானேன்! எதானுனக்கு இவ்வித வருத்தம் நேரிட்டது? சரி, உன்மகனுக்கு வயது பதினாறாகியும் யான் மாலைசூட்டி வையாமலிருப்பது வருத்தமா? யானும் முயற்சி செய்துகொண்டுதா னிருக்கின்றேன். அலது எதற்காகவுன்முகம் வாட்டமாயிருக்கின்றதென்று கேட்டனன்.

குணபூஷணி, என் அருமைத்துணையே! சற்று கவனிப்பீர். நமது மகன் மேகவர்னன் இன்று காலையில் வேட்டைக்குச்சென்று, மாலைப்பொழுதில் மந்திரிகள்வாழும் வீதியோடு வரும்பொழுது முதன்மந்திரியார் மேன்மாடிமீது யாரோ ஒருபெண் தன் தலைமயிரை யாற்றிக்கொண்டிருந்தாளாம், அவளழகைக் கூறமுடியாதென்றும், அப்பெண்மீது மிகு மோகங்கொண்டு பித்துப்பிடித்தவன்போல் வாய்குளறி அலறி அலறித் தன்னைத் தான்மறந்து விழுந்துகிடக்கிறான். அய்யோ! ஈசன் கொடுத்தது ஒரு ஆண்குழந்தை. அவன் இவ்வாறுகிடக்கில், அடியாள்மனந் தாளுமா? இப்போது அவன் ஆவி பொருந்தியிருக்கின்றதோ இல்லையோ! அப்பா! அவனவஸ்தையைக் கண்ணுற் பார்க்கமுடியவில்லையே! இதற்குத்தானா இத்தேசகாலஞ் சென்று என்கருவிலுதித்தனன். இனியென்செய்வேன் மன்னா? மோகங்கொண்டோனுக்கு அவுடதம் மங்கையல்லவா?

ஆ! எனதாசைக் கண்ணாளரே? தாங்கள் வாலிபதிசையையடைந்திருந்தபோது, எனதிடம் கொஞ்சிக்குலாவி மகிழ்ந்தாடினது நாமிருவரும் அறிந்தவிஷயமே. அதுபோல் உம்மில் பேர்பாதியாகினு மீரானா? தாங்களே யோசிக்கவேண்டும். யான் மகன்படும் அவஸ்தையைக் கண்டுவந்ததுபோல், தாங்களும் அவனைக் காணுவீராகில் அப்போது தங்கள் மனம் என்னமாய்த் துடிக்குமோ! அய்யனே! சீக்கிரம் நமது மகனைப்பற்றியெதைமுடிக்கவேண்டுமோ அதனை முடித்துவிட்டு மறுவேலைப் பார்க்கவேண்டுந் துரையே என்று தன்கணவன்மீதே சாய்ந்தனள்.

பிறகு, மன்னன் தன் மனைவியைத்தேற்றி, அடிபாதகீ! அத்திமரத்திற் பூ பூத்ததுபோ லுரைக்கின்றாயே! நமது முதன்மந்திரியாருக்குப் பெண்பிறந்ததில்லையே! அவர் மாடிமீது மாலைப்பொழுதாகையால் யாதோ ஓர் உருவு தோற்றப்பட்டிருக்க வேண்டும். அதனை முழுமையும் நம்பி பெண்ணென்றே மோகித்திருக்கவேண்டும். நமது மகனும் பொய்யுரையான். எதற்கும் நமது முதன்மந்திரியாரை இப்போதே வரவழைத்து விசாரிக்கின்றேன். அப்படியிருக்கில் மணத்தைக் குறைத்துடன் நடத்தத்தடையேயில்லை. ஒருசமயம் நமக்குப் பெண்பிறந்தவாறபோ

ல், அவருக்குப் பின்னிட்டுப் பிறந்திருக்கலாம். அதனைத் தீரவிசாரித்துனதிடந் தெரிவிக்கின்றேனடி சொர்ணமே. நீ சென்று நமது மகனுக்குத்தக்க தைரியங்கூறுவாய் மாதேயென்றுரைத்துவிட்டுத் தன்பள்ளியரைக்குட் சென்றான்.

குணபூஷணி தன் பதிவாக்குப்படி தன்மகனிடஞ் சென்று அப்பா குழந்தாய்? உன்கருத்தை உன்தந்தைபாற் றெரிவித்தேன். அவரும் வெகுசிரத்தையுடன் பாடுபடமுயன்றேவிட்டார். இனி நீ துயரமுறவேண்டாமடா கண்ணே யென்று இனியமொழியால் தேற்றிச்சென்றனள்.

மன்னன், மனைவிதெரிவித்ததை நினைத்துக்கொண்டு, ஓர் சேவகனை விடுத்து முதன்மந்திரியை வரவழைத்து, அய்யா முதன்மந்திரியாரே! மன்னனுக்குற்ற மனவியாகூலத்தை மந்திரியினிடங்கூற விதியிருப்பதால், இப்போது சற்று கவனிப்பீர். அதாவது யான் இங்கு பெருந்துக்கக்கடலி லாழ்ந்திருக்கின்றேன். அக்கடலினின்று எனைக் கரையேற்றிவைப்பது உம்மையல்லால் உற்ற துணைக்காணேன். நாமிருவரும் மக்களையடையவேண்டி புத்திரகாமேஷ்டி யாகஞ்செய்து ஈசன்கிருபையால் மக்களை யடைந்தோமல்லவா, எனது மகன் மேகவர்ணன், இன்று காலை வேட்டைக்குச் சென்று மாலைப்பொழுதாயிற்றென்று திரும்பிவருங் காலத்தில், நீர் வாழும் வீதியோடு வந்தானாம். அச்சமயம் உமது அரண்மனையின் மேன்மாடிமீதிருந்து உமது மகள் தலைமயிரை யாற்றிக்கொண்டிருக்கக் கண்டானாம். அப்பெண்ணினழகைக்கண்டு மோகித்துத் தான் ஏறிவந்த குதிரைமீது சாய்ந்தானாம். அக்குதிரை வழக்கப்படி எனதரண்மனைவந்துசேர, அங்குள்ளார் யாவரும் என்மகனைத் தாங்கிக்கொண்டுவந்து ஓர் சோபாவின்மீது கிடத்தினார்களாம்.

அய்யா முதன்மந்திரியாரே? இன்னுங் கேட்பீர். இச்சேதியையறிந்த என்மனைவி மேகவர்ணனிடஞ் சென்று, முழு சங்கதிகளைத் தெரிந்துகொண்டு எனதிடந் தெரிவித்தாள். அதனைக் கேட்ட என்மனம் என்னமாயிருக்கும். அவன்சேதி யின்னேரமென்னாயிற்றோ! அய்யோ! என்மகன் இவ் வற்பகாரியத்தைக் குறித்து வீணேமாண்டால், யானென்செய்வேன்! அய்யன் என

க்குக்கொடுத்த மகனை யேதுசெய்து விடுவரோ! தெரிய வில்லையே! இதர்க்குத்தானா எனக்கு மகனாய்த்தோன்றி வளர்ந்தான்! இதற்குக் காரணம் உமது மகளாயிருப்பதால், நீர் என்மீது கிருபைவைத்து உமது அழகுள்ளகிளியை என்மகனுக்குத் தந்து எனை மகிழச் செய்யவேண்டுமென்று மந்திரியின் தாளைப் பிடிப்பதுபோல் அவர் முகவாய்க்கட்டையைப்பிடித்து வேண்டினன்.

முதன்மந்திரி, ஆ! இதென்னவிந்தை! நமக்குப் பெண்குழந்தை யில்லாதிருக்க, உண்டென்று எவ்விதங் கூறுவேன்! இதைக்குறித்து நமது மன்னர் வெகு தாபந்திரியப்படுகிறார். இத்துன்பத்துக் கேதுசெய்தால் நமது மன்னர்படு மவஸ்தை நீங்கும். ஆ! கங்காதரக்கடவுளே! யாவும் உன்செயலே. சரி, மன்னர் கோமனே? இப்போது தங்கள் வார்த்தையைக்கேட்ட அடியேன் மனம் புண்ணாய்விட்டது. ஏனெனில் தாங்கள் வருந்திகூறியபடி யென்மனையிலிருந்தால் தடைசெய்பவன் கூட இங்கிருக்கின்றானா! தங்கள்குமாரன் கண்டவேளை மாலைப்பொழுதாகையாலும், அவன் யுக்த வயதடைந்திருப்பதாலும், என்மாடிமீது தோற்றப்பட்டது மோகினியென்றே தீர்மானிக்கின்றேன். அம்மோகினியோ காற்றுருவங் கொண்டவள். அவளெங்கும் வியாபிப்பவள். வாலிபர்களைமிரட்டும் ஓர்விதபைசாசி. தங்கள் மகன் கண்டரூபசவுந்தரியுள்ளபெண் எனதிடமில்லையே யென்றுண்மை கூறி யயர்ந்தான்.

மன்னன் ஆ! முதன்மந்திரியாரே? என்மகன் ஆவியையும் எனதாவியையும் போக்கடிப்பதர்க்கே நீர் மறைத்துக் கூறுகின்றீர். உமது மனைவியோடு ஒக்கப்பிறந்த தமயனும், உமக்கு மைத்துனனாகியிருக்குஞ் சீமான்மைந்தனுக்கு, உமது பெண்கிளியைக்கொடுக்க நீர் இசைந்திருக்கிறீர்போற் காணப்படுகின்றது. தில்லைப்பெண் எல்லையைத் தாண்டாதெனுங் கருத்தால் தடுத்துரைக்கலானீர். யான் மன்னனல்லவா? நீர் எனக்குமுதன் மந்திரியல்லவா? நாமிருவரும் நகமுந் தசையும்போலும் ஒத்து வாழ்ந்து வருகின்றோமே. பங்காளியும் பனங்காயும் பதம்பார்த்துவெட்டுவதுபோல் இச்சமயத்தில் காலைத்தட்டி விடுகின்றீரே. அய்யோ! இப்போது சுத்த ஏழைபோல் தவிக்கும் என்னைக்

தை தூக்கியாளீரோ, இப்படிக்கு யான் தேகியென்று கேட்டும், நீர் மனம்வைத்து நடத்தாவிடில் யானும், என்மனைவியும், ஏங்களருமைமகனும் வீணிலிறப்போம். அப்போது அத்தோஷங்கள் உம்மைவிடாதே! ஆ! இனி யென்செய்வேன் என்று வாய்விட்டு அழத்தொடங்கினன்.

அதனைக்கண்ட முதன்மந்திரியார், இதர்க்கோருபாயமான வார்த்தையாடிவிட்டு, நம தரண்மனைக்குச்சென்று யோசிக்கவேண்டுமென்று தீர்மானித்து, ஏ! கோமானே? இதர்க்காகவா நீங்கள் மூவரும் ஆவியை விடப்போகிறீர்கள்! வேண்டாம் வேண்டாம். ஆய்ந்தோய்ந்து பாராதான் தான் சாகக்கிடப்பன் எனும் நீதிவாக்கியத்தை நாமிருவரு மனுசரிக்கவேண்டும். ஆக்கப்பொருத்தவன் ஆரப்பொருக்கவேண்டும். இதோ யான் அரண்மனைக்குச்சென்று என தில்லறக்கிழத்தியுடன் கலந்து வார்த்தையாடி யான்காலையில் சபைக்குவரும்போது முடிவுகூறுகின்றேன். தாங்களதுவரையில் மனம்பொருப்பீர் மன்னுவென்று கூறிவிட்டு முதன்மந்திரி தன் அரண்மனையை யடைந்தனன்.

முதன்மந்திரி மனைவி, தன் நாதனைக்கண்டு என தருமைக் கணவரே? இப்போது மணியோ பதினொன்றாயிற்று. இச்சமயத்தில் உம்மை யேன் அரசர் அழைக்கலுற்றனர். அப்பேர்க்கொற்ற அவசரசங்கதி யாது? அடியாளுக்குச் சற்றுக்கூற விரும்புகின்றேனென்று கேட்டனள்.

அதர்க்கு முதன்மந்திரி, தன்மனைவியை நோக்கி, (டம்பன் தன்பரிசனக்கூட்டத்தைக் கண்டு பலவிதச் சிரிப்பால் சிரிப்பதுபோல் சிரித்து), அடீ மாதே! யான் சென்று கேட்டுணர்ந்துவந்த விந்தையை எவ்வாறு கூறுவேன்! அதனைக்கூறத் துணிகில் பெருஞ்சிரிப்பே வருகின்றது. என் சிரிப்படங்கினபின் உரைக்கின்றேன்மாதே.—சரி, இனி கேட்பாய் சுந்தரமொழியுடையாளே? எனை நமது மன்னர் அழைத்ததர்க்குக் காரணம் யாதெனில், என்னமோ தன்புதல்வன் மேகவர்னன் காலையில் வேட்டைக்குச்சென்று இம்மாலைப்பொழுதுக்கு நமது வீதியோடுவந்தானும். அச்சமயம் நமது மேன்மாடிமீதிருந்து தலைமயிரையாற்றிக்கொண்டிருந்த நமது குழந்தை சந்திரகாந்தனைப் பெண்ணென்றே தீர்மானித்து, அதிமோகமுற்றுத் தன் அரண்மனைக்

குச் சென்று படாதபாடு படுகின்றனும். பிறகு ஆணைப் பெண்ணென்று மதிமயக்கங்கொண்டு தவிக்கும் அம்மேகவர்னனுக்கு இங்ஙனம் மாதைப்போற்கண்ட நமது சிறுவனை மாலைசூட்டி வைக்கவேண்டுமாம். இது எங்ஙனமடுக்கும்! ஆணுக்கு ஆணை வதுவைசெய்து வைக்கலாகுமா! யான் நமது அரசருக்கு எவ்வளவோ தடுத்துரைத்தும், அவர் கேட்டாரில்லையே! அடே மாதே! அந்தோ! அடுக்காதகாரியம் புரியில், பிறகு முடுக்காய் முடியுமே விஷயம்! இவ்வவதிக்கு யாதுசெய்வேன் மாதேயென்று துக்கித்துத் தவித்தான்.

மூகன்மந்திரி மனைவி, தன் கணவன்முகம் நோக்கி, எனதன்பார்ந்த துரையே? இதற்காகத் தாங்கள் வருத்தமுறவேண்டாம். வருவது வழியிற்றங்காது, நமது மன்னர் குமாரனைப் பற்றி ஆதியில் சோதிடர் எதைக்காணிலும் மோகித்துத் தியங்குவானென்று கூறியிருப்பதுபோல், பெண்கட்குறிய நடைநொடி யழகுடைய நமது சுதனைக்கண்டு மோகித்ததிற் குற்றமென்பதில்லையே. ஆகையால், தாங்கள் நாளை காலையில் மன்னரைக்கண்டு தந்திரவார்த்தையாடிக் காரியத்தை முடித்துவைப்பதே நம் நல்லகாலத்துக்கு இதுதான் குறியென்றறிவீர். தைரியம் புருஷலக்ஷணம் எனும் நீதியை யனுசரித்து நடப்பது உத்தமம். அப்படிக் கில்லையேல், மன்னர்மகன் மோகத்தா லிறக்கில் அவன் தாய்தந்தையரும் உடனே பிறப்பார்கள். அம்மூன்று தோஷமும் நமது குடும்பத்தை விடாது. நமக்கோ இருப்பது ஓர்மைந்தன். பிறகு எக்கதியாவானோ. ஆகையால் யாவையும் சீர்தூக்கிப் பார்த்துத் தக்கபடி முடிப்பதுதான் பெருங்காரியமென்று தந்திரத்தூண்டில் அகப்படச்செய்தனள்.

மூகன்மந்திரி, ஏ! மாதே? நீ உரைத்ததுஞ் சரியே, விதிப்படியாவும் முடியும், சரி, காலையிலங்குசென்று யோசிக்கின்றேன். நீ சற்று நித்திரைபுரிவாய். எனக்கும் நித்திரைவருகின்றது என்றுரைத்து இருவரும் பள்ளியறைக்குட் சென்று நித்திரைபுரிந்து காலையில் மந்திரியெழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு நன்நீராடி நெற்றியில் நீறணிந்து, ஈசனைப்பணிந்து, கொலுமுகம்வந்து சேர்ந்தனன்.

முதன்மந்திரி வரவை யெதிர்பார்த்திருந்த மன்னன் அய்ய முதன்மந்திரியாரே? நீரெனதிடம் வாக்களித்துச் சென்ற காரியம் பழமா? அல்லது காயா? தயவிடவேண்டுமென்று கேட்ட மன்னன் முகம் மந்திரிநோக்கி, அன்புடனர்சாக்ஷிசெய்து யாவரையுங் காத்துவரும் இறைவா? வந்தனம், வந்தனம். யான் தங்களைவிட்டுச் சென்று எனதரண்மனைச் சேர்ந்து, எனதில்லாளைக்கண்டு மனமகிழ வார்த்தையாடி பிறகு தங்கள் சேதியையெடுத்துக்கூற, அவள் கடுஞ்சினமடைந்து முடியாதகாரியத்தில் முயல்வது வீண்பிசகென்று வெகு ஞாயநுட்பங்களை யெடுத்துக்கூறித் தடுத்தனள். யான் மிகவும் நொந்து வாடி அமடமாதே? உலகில் யாவரும் உண்டுகளிக்கும்வாறு நமது மன்னர் மகன் மேகவர்னனும் கோரியபழத்தைத்தின்று உருசிபார்த்து மகிழ்ந்து வாழவேண்டுமல்லவா. அப்படிக்கு மேகவர்னனெண்ணப்படி நாம் நடவாவிடில் * கோயிலில்லாவூரிற் குடியிருக்கலாகுமா! வீணாய் பாவத்தைத் தேடிக்கொள்ளாதேயென்று பல நீதிகளை யெடுத்துரைத்ததின்மீது சரி, சரி, உமது மனம்போல் இனி நடத்தத் தடையேயில்லை. ஆனால் நாமொன்று நினைத்திருக்கத் தெய்வமொன்று நினைத்ததல்லவா என்ற ஆயாசத்தைக் கிஞ்சிற்றடைந்தனள்.

ஆனால் இரண்டொரு விசேடங்கூறினள். அவ்விடயம் எனக்குஞ் சம்மதமே. அதாவது தங்களுக்கு ஈசனளித்தவாறு, தனக்கும் ஓர் மகனும் மகளும் பிறந்தனர்களாம். அவ்விருவர்களையும் சமகருத்துடன் வளர்த்தவளாம். அதிலும் தன் பெண்குழந்தையைப் பாதுகாத்து வளர்த்ததுபோ லெவரும் வளர்த்தறியார்களாம். ஒவ்வொரு சமயம் அப்பெண்குழந்தையினழகைக் கண்குளிரக்கண்டு வேளைக்குவேளை உண்ணும் உணவின்மீது கூட மனம்வைக்கிறதில்லையாம். ஆகையால் இக்காரியம் முன்பு இனிக்கும் பின்பு கசக்கும். இவ்வார்த்தை பிறகு அனுபோகத்திலறியப்போகிறீர். என்மீதிற் குற்றங்கூற வொண்ணாது. எதற்கும் அறிவேதான் முக்கியகாரணம். மதியிருந்தால் விதியை வெல்லலாம்.

மதிமோசத்தால் மோகங்கொண்டலையும் மேகவர்னனைப் பெற்ற மன்னரே? இன்னொரு விந்தையான மொழியையுங் கவ

* இங்ஙனம் கோயில் என்று குறித்தது அரசன்வீடென்பதே.

ணிப்பீர். ஓர் கிராமத்தில் வன்னியர்குலத்தில் ஓர் பெண்ணைத் தேடி ஒருவன் விவாகத்தை முடித்துக்கொண்டு, தன் ஊரையடைந்து சிலவருடஞ் சென்றபின், தன் மாதுலரையும், மாமியையும், மைத்துனரையும் பார்த்து மகிழ இச்சைகொண்டு அப்பெண்ணின் புருடன் இலச்சையிலாமல் அவ்வூரையடைந்து மாமியைக்கண்டு அச்சமுற்று நின்றான்.

மாப்பிள்ளையைக் கண்ட மாமி, "மருமகனே திருமகனே எங்கடா வந்தாய்? ஆ! இதென்ன அவமரியாதையுள்ள வார்த்தையாடுகிறாள்! இவளைச் சரிப்படுத்திக்கொண்டு சென்று அலையவிடவேண்டுமென்று தீர்மானித்து, அடிபோடி மாமியாரே உன்னைப்பார்க்கவந்தேன், பார்க்கவந்த முறியனுக்குச் சோறெங்கடா? அடிபோடி மாமியாரே ஓர் ஹோட்டலாகுது, பூண்ட சோறு தின்னும் முறியானுக்குத் தண்ணீரெங்கடா? அடிபோடி மாமியாரே தெருகுழாவாகுது, குழாத்தண்ணி குடிக்கும் முறியனுக்குப் படுக்கையெங்கடா? அடிபோடி மாமியாரே ஓர் திண்ணையாகுது, திண்ணைத்தூங்கி கடியனுக்கு பெண்ணெங்கடா? அடிபோடி மாமியாரே நீதான் வாடி என்றுரைக்கவுடனே ஆ! இவ்வளவு கற்ற மருகனை விடலாகாதென்று அன்புற்று, மருகன் கையை மாமியார் பிடித்துக்கொண்டு வெளியிற் சென்றுவிட்டாள்."

அதுபோல் அளவுகடந்த மோகத்தை தங்கள் புத்திரன் எனது அருமைப் பெண்மீது இச்சித்திருக்கிறபடியால், விவாகஞ்செய்த நாளின் இரவில் என் பெண்ணின் அழகைக்கண்டு அவள் புத்தியை மயக்கி யிருவரும் எங்ஙனாகிலுஞ்சென்று அகமகிழ ஆடிப்பாடி வெறிதீர்ந்தபின், அங்ஙனே யென்மகளை விடுத்துத் தாய்தந்தையரிடம் மேகவர்ணன் வந்துவிடில், தாங்கள் அவனைச் சேர்த்துக்கொள்வதற்குத் தடையில்லை. என்மகள்கெதியென்னாகும்? அவள் எனது வீட்டுக்குவரில் யானும் என் இனத்தாரும் சேர்ப்போமா! இலைபழிபாவனையும் குலபழிப் புதவாதாதலால், தாங்கள் வருந்தியென்னைக்கேட்பதால், தங்கள் தயவுக்காக என தருமை புத்திரியைக் கொடுப்பதற்குத் தடையில்லை. ஒருசமயம் தங்கள் புத்திரன் பலதானஞ்செய்யும் இரவுக்கு மறுநாள் காலையில் என்மகளை யான் காணாவிடில் என்னையுறும் மண

மும் தீக்கொண் டெரியுமே. அப்போது என் மனைவி சற்றும் உயிர் தரிக்காளே.

ஆகையால் என்மகனை அன்று யான் காணுவிடில் தங்கள் புத்திரியை யென் புத்திரனுக்கீய்ந்து எனதரண்மனையி லிருக்கச்செய்வீராகில் தடையின்றி இன்றே தங்கள் புத்திரனுக்கு விவாகத்தை முடித்துக்கொள்வீர் அரசேயென்று உரைத்தனன்.

அரசன், ஆ! இதென்ன கிணறுவெட்டப்புகில் பூதம்புறப்பட்டவாறு நமது மந்திரி தகுந்த முடிபோட்டு உரைக்கின்றனரே! இவருக்குப் பதிலுரைக்காவிடில், இவர் அருமைப் பெண்ணைத் தரப்போகிறதில்லை. நாமும் நமதுமைந்தனைக்காணப்போகிறதுமில்லை. பெண்ணைப்பெற்றோர் அப்பெண்ணுக்கு யுக்தவயதுவந்தவுடன் எவனுக்காகிலுங் கொடுக்கும் விதியிருப்பதால் நமது புத்திரியைக் கொடுத்துத்தான் தீரவேண்டும். அதிலும் நமது மந்திரிமகன் அதிகுணசாலியென்றும், அழகில் மிக்கோனென்றும் நாம கேள்விப்பட்டே யிருக்கிறோம். சரி, அய்யா முதன்மந்திரியாரே? நீருரைத்தபடி யுமது மகனை நீரும் மற்றவருங் காணுவிடில், என் புத்திரியை யுமது புத்திரனுக்கீவது தடையில்லை. இதோ மச்சமுனிநாதர் பாதமறியக் கூறினேன். இனி யுமது அபிப்பிராயம் யாதோ.

முதன்மந்திரி, ஒப்பினேன் ஒப்பினேன். (அந்தோ! மேகவர்னன் ஜாதகக் கூற்றே கூற்று.) இன்று மாலை ௪ - மணிக்கு முகூர்த்த மிருக்கிறபடியால் என் புத்திரியைச் சிங்காரித்து இங்ஙனங் கொணர்வேன். நீரும் உமதுபுத்திரனுக்கு நலங்குமுதலிய சடங்குகளை நடத்தித் தங்கள் சித்திரகூடமண்டபத்தி லிருக்கவேண்டும் இதோ சென்று வருகின்றேன் என்றுரைத்துவிட்டுத் தன் அரண்மனைக்குச் சென்றனன்.

சந்திரகாந்தன் தன் தந்தையாகிய மந்திரியைநோக்கி எனதருமைக்குரிய தந்தையே? மன்னர் சபைக்குச்சென்ற நீரிவ்வளவு சீக்கிரமாக வந்ததர்க்குக் காரணம் யாதோ? மந்திரி அப்பா சுதனே! அவசரகலியாணம் அள்ளிதெளியெனும்வாறாய் உன் நேசனாகிய மேகவர்னனுக்கு இன்றிரவில் முகூர்த்தம்நடக்

கப்போகின்றது. ஆதலால் உனதிடஞ் சிலவிஷயந் தெரிவித்து இட்டுச்செல்ல வந்தேனடா கண்ணே.

சந்திரகாந்தன் அப்படியா, தந்தையே? அரசர் மைந்தனுக்கு முகூர்த்தமானல் எனதிடந் தெரிவிக்கவந்த சேதி யாது? யானங்கு என் வரவேண்டும்? அம் மேகவர்னனுக்கும் எனக்கும் யாது சம்மந்தமிருக்கின்றது? அய்யோ இன்று யான் நித்திரைவிட்டெழுந்த வேளைபின்பலனே! இதென்ன கொடுமை! யான் என் வலதுகரத்தில் சுவர்னமிழைத்தசெங்கோலைத் தாங்கியிருக்கும் பாவனையாய்க் காண்கின்றேனே! ஆ! தந்தையே! எனை எதற்குத்தான் தாங்கள் பெற்று வளர்த்தீரோ! ஆ! எங்குகாணினும் சபைநிறைந்தகூட்டமாய்க் காணப்படுகின்றேனே! இதனால் நல்வினை வருமோ! தீவினை வருமோ! ஒன்றுமறியக்கூடவில்லையே என் தந்தையே என்று வாடினன்.

மந்திரி, அப்பா மகனே! நீயாதொன்றுக்கும்பயமுறாதே. பின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை. நீ இன்று நித்திரைவிட்டெழுந்த திசை உக்கிரதிசை. நீ கரத்திற்றாங்கியிருக்கக் காணப்படுகின்றது யாவராலும் மதித்து வணங்கப்பெற்றச் செங்கோல். சபைநிறைந்தக் கூட்டமாய்க் காணப்பட்டதே ஓர் இராஜசபை. அச்சபையின்கண் மத்தியில் சிம்மாசனத்தின்மீதிருந்து பலரும் புகழ நீ அரசாளப்போகிறாய். ஆனல் யானுரைப்பதுபோற் கேட்பாயாகில், உண்மையாய் நீ அரசாளுவாய், உன் ஜெனன விதியும் அப்படியே யிருக்கின்றது.

அப்பா சந்திரகாந்தா! இனி வருமாற்றைக் கவனிப்பாய். நேற்று மாலைப்பொழுதில் நமது மேன்மாடிமீதிருந்து உன் கருமயிரையாற்றிக்கொண்டிருந்த வுன்னை வேட்டைக்குச் சென்று நமது வீதியாய்வந்த மேகவர்னன் ஊழின்வலியா லுனைக்கண்டு பெண்ணென்றே மோகித்து மயக்கங்கொண்டு, யாதொன்றுந் தோன்றாமல் அவனரண்மனைசேர்ந்து, உனைநினைந்து துக்கித்தழுவதைக்கண்ட அரசன்தேவி அவன் கருத்தை முழுமையுந் தெரிந்து மன்னருக் குரைக்க, பிறகு என்னை வரவழைத்து அவரும் உன்னைப் பெண்ணென மதித்து, உனைத் தம் புத்திரனுக்குக் கொடுக்கும்படி மிகவும் வணங்கிக் கேட்டனர்.

அடா அப்பா மகனே? நீ பிறந்ததினத்தில் ஜோதிடபண்டிதர் கூறியவாக்கின்பலன் எனதறிவிற்றங்கி தேகியென்று மன்றாடிய இறைவர்க்கு வாக்களித்துவிட்டேன். நீ யாதொன்றுக்குஞ் சங்கோசப்படாமல் பெண்களணியும் பூஷணங்களைப்பூண்டு நற்பீதாம்பரப் பட்டுச்சேலையைத் தரித்து, நீயும் உன் தாயும் சித்திரக்கூடமண்டபத்துக்கு வரவேண்டும். அங்கு நீ மேகவர்ணனருகிலிருப்பாயாகில் உடனே மாங்கல்யம் உன்கழுத்தில்தரித்து உண்டுகளித்து உன்கரம்பற்றிப் பள்ளியறைக்குட் செல்வான். அப்போது இன்னானென்றறிந்து வெட்கி மதிகெட்டு பிறரறியாவண்ணம் எங்கேனுகிலுஞ் சென்றேவிடுவன். அச்சமயம் ஒருவரறியாமற்படி நமது அரண்மனைக்கு நீ வந்துசேருவாய். இனி தாமதிக்காதே மகனே யென்றுரைத்துவிட்டு, தன்மனைவியை நோக்கி அடீ மாதே! இன்று இரவு 8-மணிக்குள் நீ உன் மகனுக்குப் பெண்வேடந்தரித்து நீங்களிருவரும் முத்துப்பல்லக்கேறிச் சித்திரகூடமண்டபத்துக்கு வந்து சேருவீர்கள். மற்ற சங்கதியைப்பின்னிட்டுரைப்பேனென் றுரைத்துச் சபைக்கு வந்துசேர்ந்தான் முதன்மந்திரி.

மன்னன் மந்திரியை நோக்கி, அய்யா முதன்மந்திரியாரே? தங்கள் மனைவியுடன் என் மகன் திருமணத்தைக்குறித்துத் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறீர்போற் காணப்படுகின்றது. இனியென்ன தாமதம்? நமது புரோகிதரை வரவழைப்பது தங்கள் கடமை. யான் அந்தப்புரஞ் சென்று வருகின்றேன் என் புத்திரனை மணமகிழச்செய்த புண்ணியவானே என்று புகழ்ந்து வார்த்தையாடிச் சென்றான்.

பிறகு, அந்தப்புரமடைந்த மன்னன், தன்மனைவியைக் கண்குளிரக்கண்டு அகமகிழ்ந்து செந்தாமரைப்புஷ்ப நிறத்தையொத்த பூவையே! யான் இன்று கஷ்டப்பட்டு நமது முதன்மந்திரியார் அருமைப்புத்திரியை மேகவர்ணனுக்குக்கொடுத்து, மாலைசூட்டிவைக்கும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டதின்மீது, கடைசிவாக ஓர் ஏர்ப்பாட்டின்மீது ஒப்புக்கொண்டார். இனி தாமதிக்காமல் இன்றிரவு 8 - மணிக்குள் நமது மைந்தனைச் சிங்காரித்து அழைத்துக்கொண்டு சித்திரகூடமண்டபம் வந்துசேருவாய் என்றுரைத்தனன்.

அரசன் பத்னி சற்றுலோசித்து என்துரையே! ஓர்வித ஏர்ப்பாடென்று தெரிவித்தீர்களே தவிர, விபரத்தைக் கிஞ்சிற்றுங் கூறவில்லையே, அதனை விடிக்கவேண்டுகிறேன் நாதாவென்றடிபணிய, மன்னன் மற்றொன்றுமில்லை, நமது மகன்கொண்டிருக்கும் மோகத்தால் மந்திரிமகளை இன்று பள்ளியறையிற் செவ்வனேகண்டு நமது மோகத்துக்கு மருந்து இவள்தான் என்று யோசித்து, இருவரும் வெளியிற்சென்று தங்கள்மனம் போலிருக்க வெண்ணங்கொண்டு தன்மனைவியையிட்டுச்சென்றுவிட்டால், மந்திரி தன் மகளை யிழந்ததற்காக, நமது குழந்தையை தனது மகனுக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று வாதிட்டார். நமது மகன் பிழைத்திருந்தால் போதுமென்று நினைந்து நமது குருநாதர்பத மறியக்கொடுப்பதாகச் சத்தியஞ் செய்துவிட்டேன். நமது மகனுக்கோ ஈதோர் பெரிய ஆபத்தென்று நினைப்பாய் மாதேயென்றுரைத்தனன்.

அரசன் தேவி என்பிராணவல்லபரே! நமது முதன்மந்திரியின் குமாரன் அதி அழகுடையவனென்று யான் கேள்விப்பட்டிருக்கிறேன். நமது மகளுக்கேற்ற மாப்பிள்ளைதான். அதாயிருக்கட்டும், இதோ நமது மகனை வெகு சிங்காரிப்புடனழைத்து வருகிறேன். தாங்கள் சித்திரக்கூடமண்டபஞ் சேருவீர்கள் — அடா மகனே! நீ கொண்டிருக்குங் கருத்தின்படி உன் தந்தை முதன்மந்திரியின் மகளைத் தீர்மானித்து முடிவுகட்டி, யாவரும் நமது சித்திரக்கூடமண்டபம் வந்திருக்கின்றார்கள். நீ எழுந்து நீராழிமண்டபஞ் சென்று நீராடி, நீறணிந்து பட்டுமஞ்சள் உடுப்பு உடுத்தி, மாப்பிள்ளைகட்குரிய ஆபரணங்களைப் பூண்டு சீக்கிரம் வருவாய் சுதனேயென் றழைத்தனள்.

மேகவர்னன் தன் அன்னைபாதம் பணிந்து, என்தாயே! இன்றுதான் புனிதனானேன். என் தந்தை அடிமைகருத்தின்படி முடித்ததற்குப் பலதரம் வந்தனஞ் செய்கிறேன். சரி, இதோ தங்கள் கட்டளைப்படிச் சிங்காரித்து வருகிறேன். (சிங்காரித்து வரல்) அம்மா! இதோ தங்களுத்திரவின்படிச் சர்வசித்தமாய் வந்துவிட்டேன். இனி தாமதிக்காமல் நீர்முன்செல்லீர், யான் உம்மைப் பின்பற்றிவருகிறேன். ஆ! என்பாக்கியமே பாக்கி

யம். அம்மா! எப்போது அவ்வன்புடையாளின் கரத்தைப்பற்றி மகிழ்வேனோ! அய்யோ! ஓர் விநாடி ஓர் யுகமா யெண்ணுகிறேனே! என்று பலவாறு புன்மதியாற் பேசிக்கொண்டே கலியாணமண்டபம் இருவரும் வந்து சேர்ந்தனர்கள்.

மன்னன் தன்மகன் வந்துவிட்ட சேதியையறிந்து, ஏ! முதன்மந்திரியாரே! இனி தாமதமென்ன இருக்கின்றது? உடனே அருமைமகளை என்மகன்பக்கலி லிருக்கவைத்து, நடக்கவேண்டிய சடங்குகளை நமது புரோகிதர்களைக்கொண்டு தடையின்றி நடத்தலாமென்ற வார்த்தையைக்கேட்டமுதன்மந்திரி தன்மனைவிக்குக் கண்ஜாடைசெய்ய, உடனே சந்திரகாந்தமென்னும் பெண்பாவையை ஆறுகாற்பீடத்தின்மீ திருக்கவைத்தனள். அச்சமயம் பெண்வடிவம்பெற்று மிகு குளிர்ச்சி பொருந்திய சந்திரபிம்பத்தைபோற் பிரகாசிக்கும் மிகுஅழகுடைய முதன்மந்திரி (போலி) மகளைக்கண்டு, மன்னன்முதல் புரோகிதர்கள் வரையில் சொக்கிவாடாதவர்களில்லை. சிலபிராமணர்கள் மந்திரபோதனை முழுமையுமறந்து அக்கல்யாணப்பெண்ணைப் பார்த்து மயங்கி வாய்குளறி வாயைத்திறந்துகொண்டே யிருந்தனர்கள். மன்னன் ஆ! இவ்வித அழகுடையபெண் நமக்கு அக்காலத்திற் கிடைக்காமல் போயிற்றல்லவாவென்று சொக்கிவாடினன்.

பிறகு புரோகிதர் அப்பெண்ணின் மயக்கத்தால் சில மந்திரங்களை விடுத்து, மாங்கல்யத்தை மாப்பிள்ளைகரத்திற் கொடுத்துப் பெண்ணின் கழுத்தில் தரிக்கும்படி உரைக்க, மேகவர்ணன் தன்னருகில் பெண்வேடந் தரித்திருப்பவன் கழுத்தின் பின்புரம் பிர்மமுடிபோட எத்தனித்தவன் அவனது ஜாதகக் கூற்றால் மதிமயங்கி முடியிட்டபாவனையாய்க் கருதி, மாங்கல்ய கயிற்றை விடுத்தனன். அம்மாங்கல்யம் பெண்ணின் மடியில் வீழ்ந்ததை, அதனை யொருவருங் கண்டவரல்லர். பிறகு, பிள்ளையையும் பெண்ணையு மெழுப்பி உண்டுகளிக்க ஆசாரக்கட்டுக்கனுப்பினர்கள். மன்னன்கிடக்கும் ஸ்திதியைக் கண்டு, முதன்மந்திரி சிரித்துப் பிராமணர்கட்கும், புரோகிதர்கட்கும், பூரிமுதலிய தானங்கொடுத்துத் தானும் தன்தேவியும் தங்கள் அரண்மனைக்குச் சென்றனர்கள்.

அப்பாவீரர்களோ! உலகமாய்கையை இன்னுங்கவனிப்பீர்கள். பெண்ணும் பிள்ளையையும் உண்டுகளிக்கச்செய்து, மன்னன் அரண்மனைக்குப் பின்புறமுள்ள நந்தவனஞ்சூழ்ந்த விசித்திரப் பங்களாவில் விடுத்து, அனேகக் காவற்காரர்களை நித்திரைசெய்யாமல் காவல்புரியக் கட்டளையிட்டு மன்னன்தேவி திரைத்துச் சென்றனள்.

பிறகு மேகவர்ணன் மந்திரிமகனைப் பெண்ணென்றே மதித்து மதிமயக்கால் பெண்ணின் கரத்தைப்பற்றி யறைக்குட்சென்று, மஞ்சத்தின்மீதிருக்கவைத்து, அடீ மன்மதக் கிளியே! எனதாருயிரே! உன்னை மாடிமீது கண்டதுமுதல் எனக்குச் சரியான வுணவு கிடையாது! உண்மையாய்க் கூறினேன். ஆனால் உன் அண்ணனுக்கு யான் பொய்யுரையாடேனென்று நன்றாய்த்தெரியும். இனி யெனதன்பை நன்றாயறியப்போகிறாய். நானும் நீயும் பாலும் நீரைப்போலும், நகமுந் தசையைப்போலும், ஒத்து விளையாடுவதற்கு இதுதான் வேளை. யான் இவ்வளவு கூறியும் சற்றுந் தயவுவையாமல், அய்யோ மவுனஞ் சாதிக்கின்றனையே! என்று கரத்தைப்பற்றி யிழுத்து அதனழகைப் பார்த்துவருஞ்சமயத்தில், அக்கரத்தில் சந்திரகாந்தன் என்று பச்சைகுத்தி யிருப்பதைக் கண்டு, அச்சமுற்று அவன் முகத்தைக் கவனித்தனன். அம்முகத்தில் மீசை அரும்பிட்டு முளைத்திருப்பதைக்கண்டான்.

அ! ஈதென்னவிந்தை! நாமும் மந்திரிமகனும் ஒரே தினத்திற் பிறந்தோம், சரிவரவளர்ந்தோம்! ஐந்தாமாண்டில் வித்தையைக் கற்றுக்கொள்ள ஒருபள்ளியில் விட்டார்கள். வாசித்துவரும் நாளில் ஓர் தினம் இருவரும் ஓர் குறத்தியா லவரவர் நாமதேயத்தை அவரவர் கரத்திற் பச்சைகுத்திக்கொண்டோம் அக்குறி இக்கரத்திற் காணப்படுவதால், இவன் மந்திரிமகன் சந்திரகாந்தனென்பதற்குத் தடையில்லை. அதன்றியில், நமக்கு இதோ மீசை அரும்பிட்டு முளைத்துவருகின்றது. இவன் முகத்திலும் மீசை முளைத்துவருகின்றது. இவனை இவனது மேன்மாடிமீது பெண்ணெனக்கண்ட பெரும் பித்தானது, நமது குலத்தைக் கெடுத்தது. அய்யோ! நாம் சற்றும் ஆய்ந்தோய்ந்து பாராமல் அறிவை வீண்வழியிற் செல விடுத்தோமே! ஆசைநேச

னைப் பெண்ணென்று மதித்து மதியை அனியாயநெறியில்தூண்டுகோலிட்டத் துஷ்டமாய்கையின் குற்றமே கூற்று.

அய்யோ! இனி யாரை நோகக்கூடும். உலகில் மாய்கையெனும்பேய் எங்கும் வியாபித்து, இளைஞர்கள் மனதைப்பேதித்து இவ்வுலகத்தி லில்லாததை யுண்டென்று தூண்டிப் பலரா லவமானப்படச் செய்துவிடுகிறதல்லவா! நமது அன்னை மாய்கையா லனேகர் அவமானப்பட்டு ஆவிதுறந்தனர்கள் அப்பா மகனேயென்றும், மாய்கைவலையிற் சிக்குண் டுழலாதேயென்றும் உரைத்ததைக், கவனிக்காமலிருந்தது நம்மீது பெருங்குற்றமே. நேற்று அன்னையுரைத்த நீதியை நாமனுசரிக்காமல் நடந்த தீங்கே அவமானத்துக் கிடந்தந்தது. இனி யெவ்வா றுயிர்தரித்துப் பிற கிந்நாட்டை யாளக்கூடும். நாம்கொண்ட மயக்கால் பெண்வேடந் தரித்து மயிலைப்போல் நிற்கும் இவனும், இவன் அன்னை தந்தையும் நம்மைப்பற்றி என்னதான் மதிப்பார்கள். உலைவாயைமூடினும் ஊர்வாயைமூட யாரால் தரம். ஆ! மதியே! இப்படியும் இக்கெதிக்காளாக்கிச் சிரிப்பாச் சிரிக்கச் செய்தனையல்லவா! இனி யேதுவரினும் சற்றும் மயங்கேன்.

ஆ! இப் பாழும் மாய்கையால் மானத்துக்கஞ்சி, இதோ வேறுதேயம் செல்கின்றேன். காருங் காரும் பவநாசா! மாசிலாமணி ஈசனே! சரணம் சரணம் என்று போற்றி யேற்றி, யாவையுங் களைந்தெரிந்து வில்லும் அம்புராப் புட்டியுடன் வெளியில்வந்து அன்னை தந்தை யிருக்குந் திசையைநோக்கி, மானத பூசைசெய்து காட்டுக்குள் நுழைந்து அருணோதயத்துக்குள் இரண்டுயோசனை தூரஞ் சென்று, அங்கோர் ஆலமரத்தடியில் தங்கி சற்றிளைப்பாறினன். இனி இவன் சரிதையை பின் கூறுவேன்.

சீடர்களே? இனி வருமாற்றைக் கவனிப்பீர்கள். அங்கு பள்ளியறையை விட்டு மன்னன்புதல்வன் மதிகெட்டு வெளியிற் சென்றபின், பெண்வேடந் தரித்திருந்த சந்திரகாந்தன் தன் தந்தைவாக்கியம் பலித்ததென்று சந்தோஷித்து, என தையனே! யென்மீதில் யாதொரு குற்றமுமில்லை. அடாதுசெய்யில்படாதுபடுவன் எனும் நீதி அரசன் புத்திரனை யொற்றுவிட்டது, இப்ப

ஷுமூலமாயிருக்கிறதல்லவா! பாவிபோநுயினை! ஐயோ! அறியாயுமாய் பாழும்மாய்மையால் சிக்குண்டு அன்னைதந்தை, இன்னும் மற்றுமுள்ளவர்களையும்விடுத்து, மகா பேரன் யங்கனுற் சென்றுவிட்டாயோ! அறிவுவிளக்கிய காள்கொட்டு மினமாரியத்திரம் அழிட மாய்மைக்கு இடங் கொடாமல் வாழ்வதுதான் நல்வினை. நாம் இங்கு தியக்குவதில் யாதொருபிரயோசனத்தையடையப்போகிறதில்லை. சரி, நாம் நமதரண்மனைக்குச் செல்வோம் என்று தான் பெண்வேடத்தை நீக்கி, ஆண்வேடந் தரித்துப்பிறர் அறியாவண்ணம் தன் அரண்மனைப்போய்ச்சேர்ந்தான்.

அன்றிரவுசென்று, அருணோதயகாலையில் யாவரு மெழுந்து காலைக்கடன்களையொழித்து, அரனைப்பூசித்து, அரசசபைக்கு வந்து சேர்ந்தார்கள். மன்னவன் நித்திரைவிட்டெழுந்திருக்குமுன், சேவகர் தன்மகன் சேதியை யறியவேண்டி நந்தவனத்தினுள்ள விசித்திரங்களைவைத்தானென்று தன்மகனையும் மாட்டுப்பெண்ணையுங் காணாமல் தியங்கி, வயிற்றைப் பிசைந்துகொண்டு, இக்கொள்ளைக்கு என்செய்வேன்! ஆ! மகனே! மேகவர்ண! எங்குற்றாய்! நாற்குக்காறு தவமாதவமியற்றி, அயிர்த மகிமையால் உன்னைப்பெற்று வளர்த்தேன்! உன்னைப்பறிகொடுக்கு நிமித்தம் கோரிய வெவ்வாப்படி யுனது தந்தையால் தெரிவிக்கப் பாழுங்கலியாணத்தை முடிக்கச்செய்தேன்! என்று உன்னழகிய முகத்தைக் காண்பேனடா!

அப்பா குழந்தாய்! நீ பசிகொயுற்றபோது கண்குழைந்திதெரியாமல் ஓடோடிவந்து தன்னாதுக்கன்னாடி என்படியிருந்து கொச்சமொழிகளால் இல்லையியாமல் சிற்றுண்டியைக்கேட்டு அருந்தி களிப்பையே! உலகில் உன்னைப்போல் கலியாணஞ்செய்துக்கொண்டவர்கள், இப்படியும் பெற்றோரைத் தியக்கி வெளியச் செய்துவிட்டுச் சென்றவர்களைக் கண்டதில்லையே! இப்போது நீங்களிருவருமெங்குதவிக்கின்றீர்களோ! அன்று யான் பெண்ணையும் பிறந்தவிட மண்ணையும் பிறந்தியும், இத்துன்பமுறுவிக்கேனே! (அறிவு) சீ-சீ நிந்தாபிடித்தபாவமே, வைவி யானைவிட்டதுவின் என் பெண்ணுனத்தை நீத்திக்கின்றாய், சற்று கவனிப்பாய்,—

விருத்தம்.

ஆதிசத்தியுமையவளும் பெண்ணேயாகும்
அருந்ததியுமாகாய வாணிபெண்ணே
ஜோதியுளலட்சுமியும் பெண்ணேயந்தச்
சுருதிபுகழ்கலைமாதும் பெண்ணேயம்மா
வேதிலுமிப்பெண்ணுருவே யுயர்ந்ததென்று
எண்ணியல்லோமாமொருநாளெடுத்துக்கொண்டாள்
நீதியொடுதவமிழைத்தத் தாயேதேவி
நின்ஜெனனம்புனித மென்றெண்ணிப்பாரே.

ஆகையால் நீ வீண்ஜோஷித்துக் காலாகாதே. இட்டதெல்லாம் பயிராகுமா? பெற்றதெல்லாம் பிள்ளையாகுமா? இன்னுங் கவனிப்பாய், உன்னை வயிறெரியச்செய்துபோன உன்மகன், உயிருடனிருந்தால், எவ்விதத்திலும் உன்னையும் உன்நாதனையுங் காணுவன். இனி வேறு யோசிப்பாயென் றுரைக்கச் சரிசரி, ஆ! நீங்களிருவருஞ் சென்றுவிட்ட செய்தியை முதன்மந்திரியறிந்தால், தன்மகளுக்காக ஆவியைவைக்காரே! உங்களிருவரையும் எங்கு கண்டுபிடித்து அழைத்துவர ஆட்களை விடுவேன். ஆடுமாடு சென்றால் சுலபமாய்க் கண்டுபிடிக்கக்கூடும். பராரியாய்ச் சென்ற உங்களை எவ்விடங்கண்டு பிடித்துவர ஆட்களை விடுப்பேன். அந்தோ அரிதேயென்று துக்கித்து மண்மீது சாய்ந்து பிறகு தேறி, சரி, இங்ஙனமிருந்து நாம் தவிப்பது பிரயோசனமில்லை. நமது மன்னனிடந் தெரிவிப்பது உத்தமமென்று தீர்மானித்துத் தலைவிரிகோலமாய் ஓடோடிவந்து, படுக்கையறையிலிருக்கும் மன்னன்மீது விழுந்து கதறிப்பதறி யழத்தொடங்கினள்.

ஆ! துரையே! நமது மகனையும், மருமகளையும் காணோமே! எவ்வளவோ காவலும் வைத்தேன். பலவித தட்டுகளில் வைத்த நானாவித பலகாரங்களைக்கூடத் தின்னாமல், நமது முதன் மந்திரி யுரைத்தவாறு நம்மை வயிறெரியச் செய்துவிட்டுச் சென்றுவிட்டனர்களோ! மைந்தனைப்பெற்றும் மலடியானேனே! இன்னேரம் எங்குசென்று தின்ன வுணவுக்கலைகிறார்களோ! அய்யோ இங்ஙனேயிருந்து அவர்கள் கருத்திற்கொண்டபடி ஆடிப்பாடி அகமகிழ்ந்திருக்கொணாதா! முதன்மந்திரியார் தன்மகளைப்பற்

றியும்மைக் கேட்கில் யாதுரைக்கப்போகின்றீர்! அவர்மனது இலேசில் ஆறுதே! இச்சேதியைக்கேட்கில் யாருக்குத்தான்வருத்தந்தோன்றாது. ஆ! இதென்ன வாய் பேசாமலிருக்கின்றீர்! இப்படியும் மௌனஞ்சாதிக்கலாகுமா! என்று வயிற்றில் மோதியடித்துக்கொண்டு கீழ் வீழ்ந்தாள்.

இதைக்கண்ட மன்னன், அடி மாதே! நீ ஏன் வீணாய்வருத்தப்படுகிறாய். இதெல்லாம் உலகமயக்கென்றுணர்வாய். இது நல்முட்டையாயிருக்கில் ஒருவன் தாங்கக்கூடும். வினைமூட்டையை அவனவனே யனுபவிக்க வேண்டும். தான்செடின கோந்திவனமந்தா செடிப்பிந்தி என்பதுபோல், மாய்கையெனும் மரத்தின்மீதேறியிருக்கும் உன்மகன் மந்திரி மகளையும் ஏன் இட்டுச்செல்லவேண்டும்? மந்திரியும் மனைவியும் தங்கள் மகள் இல்லாத சேதி அறிவார்களாகில், உயிர் தரிக்கார்களல்லவா! அப்பெண்மணி என்ன காந்தி! என்ன அழகு! என்ன ஒயிலான நடை! உன்மகன் அப்பெண்ணையெவ்வளவு அவசரத்திற் கொண்டுசென்றனே, அவ்வளவு சிக்கிரத்திற்றனே கைசோரவிடுத்து தன்னந்தனியாய் நிற்கப்போகிறான். பிறகு அப்பெண் எங்கையோ அவனெங்கையோ. அவர்கள் விதிக்கு யார் என் செய்வார்கள். நாம் அவர்களை உண்டு உறியெனும் அறையிலிருக்கவைத்தோம் மதிமயக்கால் கீழ்விழ்ந்துடைவதுபோல், வெளியிற் சென்றுவிட்டார்கள். ஆகையால் நீ தைரியத்துடனிருப்பாய். யான் சபைக்குச்சென்று வருகின்றேனென்று கூறி சபைக்குவந்து சிம்மாசனத்தின்மீது வியசனமுற்று வீற்றிருந்தனன்.

இதனைக்கண்ட முதன்மந்திரி, எங்கள் கோமானே! தங்கள் விருப்பத்தின்படி சென்ற இரவு, தங்கள் தவப்புத்திரனுக்குத் திருக்கலியாணம் நடந்தேறியிருக்க, இன்னும் ஏதுகுறை தங்கள் மனதை வாட்டுகின்றது. தங்கள் முகமோ வேறுபட்டிருக்கின்றது. அதனால் அடியேனுக்கும் வருத்தந்தோன்றுகின்றது. அம்முகவாட்டத்தின் கொடுமையைச் சற்றுத் தெரிவிக்கவொண்ணாதா. தாங்கள் கொண்டிருக்கும் வருத்தக்குறியானது ஏதோ குலபழிப்புக் கிடந்தவாறாய்த் தோற்றப்படுகின்றது. எக்காரணமாயிருக்கினும் தயவிடவேண்டும் பூமானே என்று கேட்டனன்.

மன்னன் வெகு துக்கத்துடன் சபையைநோக்கி மந்திரிமார்களே! சபையோர்களே! நமது முதன்மந்திரியார் குறிப்பறிந்து எனக்கேட்டவண்ணம் அதை விரித்துரைக்க என்திரேகம் நடுக்கமுறுகின்றதே! ஆ! பரஞ்சோதி! எங்கும் நிறைந்தோனே! சரணம், சரணம். சரி, நேற்றிரவுக்கு என் மைந்தன் பட்டபாட்டைக்கண்டு மனந்தளர்ந்து, நமது முதன்மந்திரியார் செல்வப்புத்திரியை வதுவைசெய்தோமல்லவா, அவர்களிருவரும் பள்ளியறைக்குட் சென்றார்களாம், பிறகு என்தேவி இருபதுநாழிகைக்குமேல் அங்குசென்று பார்க்க, இருவரையுங் காணோமாம்! இத்தீவினைக்கென் செய்வேன்! சண்டாளன் என் மகன் சென்றுவிட்டதைப்பற்றி எனக்குச் சற்றும் வியாகுலமில்லை. மகளைப்பூத்த இம்முதன்மந்திரியாருக்கு யாதுசமாதானங் கூறுவேன்! இவர் மனைவி யுயிர் தரிக்காரே! இருவருந் தலத்தில்வந்த பிண்டமாயிற்றே! அந்தோ! இன்னேரம் எங்கு சென்றலைகிறார்களோ! இப்படியும் யாவரையும் வயிறெரியச் செய்துவிட்டு, அப்பெண்ணைவிட்டுச் செல்லலாகுமா! என்றுரைத்து வியாகுலமுற்றனன்.

முதன்மந்திரி, ஐயோ! மகனே! இவ்வநியாயம் எந்த நாட்டில் நடக்கும்! யான் அந்த மதிமயக்கங் கொண்டதையும் மேகவர்னனைக்குறித்து அரசரிடம் எவ்வளவோ எடுத்துரைக்கும் சிஞ்சித்தும் அவர் கேளாததால், என்மகளை அவன் வாயில்போட்டுக்கொண்டு சென்றான்! ஆ! என் கிளியே! காக்கைக் கரைந்தால் அதிபயமுற்று, உனதன்னையைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு வாய்குளறுவையே! அப்பேர்க்கொற்ற வுன்னை எந்த மொழியால் உன் மனதைப் பேதிக்கச்செய்து இட்டுச்சென்றான்! இதற்குத்தானோ நீ உன் அன்னைவயிற்றில் பெண்ணாய் வந்துதித்தாய்! இச்சேதியை உன்னைப் பெற்றவளறிந்தால், என்னபாடுபடுவாள். ஐயோ! நேற்றியதினமே உன்தாய் பலவாறு தடுத்ததைக் கேளாமல், மன்னன் தயவுக்காக முகத்துக்கஞ்சி மூக்காரிடஞ் சென்றதுபோல், உன்னைப் பறிகொடுத்தேனே! ஆ! ஈசா! கொடுத்தவனும்நீயே, அவர்கள் மனதைப் பேதித்துக்கொண்டு சென்றவனும் நீயாயிருந்தால், உனைத் தடுப்பவர் எம்மண்டலத்திலுமில்லையே ஈசா,—

அறிவுக்கு வித்துபோன்ற கோவே! தங்களிடம் யான் எவ்வளவு நீதி யெடுத்துரைத்தும், பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்பதுக் கிணங்க, எனதிடம் தாங்கள் பிடிவாதஞ்சாதித்துக் கெஞ்சி மன்றாடியபலனை நீருங் கண்டீர், யானுங்கண்டேன் அரசமைச்சர் பிடித்தபேய் வெம்மையும் பிடித்துக்கொள்ளச் செய்துவிட்டீரே. சுகமாய் என் இல்லறத்தில் இருந்த அந்த ரத்னத்தைக் கொன்றுமேலும் அஞ்சா நெஞ்சையுடைய தங்கள்குமாரன் மிஞ்சி செய்த காரியத்துக்கு நீரே பாத்திரமாகையால், தாங்கள் ஆக்கிரகத்துடன் நாக்கிரமுடைய தங்கள் குருநாதர் பாதத்தின்மீதிட்ட சத்தியவாக்குப்படி யொத்து நடத்துவீரேல், அப்போது மகனையிழந்த என்மனைவி கிஞ்சிற்று ஆறுதலுக்கு இடந்தரும். இதைவிடுத்து மீறித் தாங்கள் நடக்கில், இருவிதத்திலும் தோஷம் தங்களைச்சூழ்ந்து வாட்டும். அதனால் வெகு துன்பத்தையடைவீரென் றுபாயமான வார்த்தையாடினன்.

அப்போது மந்திரியுரைத்த மொழியைக்கேட்டு, அய்யா! முதன்மந்திரியாரே! நீர் யாதொன்றுக்கும் துயரமுறவேண்டாம்! யான் உம்மிடம் உரைத்தபடி நடத்துவதற்கு யாதொரு தடையுமில்லை. சென்றவர்கள் கெதியை யாவர் அறிவார். இனி அவர்களைப்பற்றி யோசிப்பதிற் பிரயோசனம் ஒன்றுமில்லை. இன்று ஆதமான சோமவாரதினங் காலை ஆறுமணிக்குள் தங்கள் குமாரனுக்கு என் புத்திரியைக்கொடுத்து, மணத்தைமுடித்துவைப்பேன். அண்டம் பிரண்டாலும், ஆதித்தனிருண்டாலும் என் சத்தியமொழி பிறழாது. ஆகையால், தாங்கள் கலியாணத்துக்கு வேண்டும்பொருளை நமது பொக்கிஷசாலையிலிருந்தெடுத்து வெகு விமரிசையாய்ப் பகற்போடுவித்து, நமதுகுடிகள் யாவருக்குந் தெரிவிப்பது தங்கள் கடமையென் றுரைத்தனன்.

முதன்மந்திரி, சரி, சரி, நம்பினேன். இனி யாதொரு வார்த்தையுமில்லை. இதோ தங்கள் கட்டளைப்படி சகலமுஞ் சித்தப்படுத்திவைக்கிறேன், போற்றி போற்றி மன்னாதி மன்னனே யென்று புகழ்ந்து பொக்கிஷசாலையைத் திறந்து, திருக்கலியாணஞ்செய்து முடிப்பதற்கு வேண்டும்பொருளையெடுத்துக்கொண்டு, வீதிகளெங்கும் பச்சைப்பந்தற் போடும்படி திட்டஞ்செ

ய்து, பின்பு தன் அரண்மனைச்சேர்ந்து மனைவியைக்கண்டு வார்த்தையாடத் தொடங்கினன்.

அடி மாதே? இன்று மன்னர்சபைக்குச்சென்றிருந்தேன், அங்கு பெருந்திக்குடைய நமதுமன்னர் சிம்மாசனத்திலிருந்து சென்ற இரவில் பள்ளியறைக்குட்சென்ற தன்மகளையும், மருமகனையுங் காணமற்போனதைப்பற்றி வெகு வருத்தத்துடன் சபையில் தெரிவித்தனர். அப்போது யான் நமது மகன் சேதியைத் தெரிவிக்காமல் அய்யோ! என்மகள்விதி யிப்படியு மிருக்குமாவென்றும், இனி யெப்படி யுயிர்தரிப்பேனென்றும் உண்மையாய்த் துக்கிப்பவன்போ லபினயித்தேன். எனை வெகுபேர் சமாதானப்படுத்தியும், ஆற்றொணாத் துக்க முடையவன்போலிருக்கக்கண்ட நமது மன்னர், உள்ளபடியே யென் துக்கத்தை யாற்றி இன்று ஆறாம்நாள் சோமவாரங்காலை ஆறுமணிக்குச் சுபலக்கின மிருப்பதால் என் சத்தியவாக்குப்படி உமது குமாரனுக்கு என்மகளைக் கொடுத்துத் திருமணஞ் செய்துவைப்பேனென்றும், வீதிகளெங்கும் பந்தற்போட்டு வைக்கும்படி யுத்தரவுசெய்தனர். அவ்வாறே அதிவிமரிசையாய்ப் பந்தற்போடும்படி ஆட்களைவிடுத்தும் வந்துவிட்டேன். இனி நமக்கென்ன தாழ்வு இருக்கின்றது! நமது மகனுக்கேற்ற பெண்கிளி வலிய கிடைத்தது நம்பாக்கியமென்று நினைப்பாய் மாதேயென்றுபுகழ்ந்துரைத்தனன்.

முதன்மந்திரிமனைவி, ஆ! அப்படியா! மெத்தசந்தோஷம். யான் நமது மகனுக்கேற்றபெண் எங்கு கிடைக்கப்போகிறாள் என்றும் ஏக்கம் ஒன்றிருந்தது. அது தங்களால் நீங்கிற்று. அதிலும் தாங்கள் கற்றிருக்கும் தந்திரோபாயம் யாருங் கற்றிரார்கள். நீங்களென்ன இலேசான பேர்வழியா. சகலமுந் தெரிந்திருப்பதினால்தான் முதன்மந்திரிபட்டம் பெற்றிருக்கிறீர். எனக்கென்ன உங்கள்சங்கதி தெரியாதவளா. சரி, சரி யென்றானந்தக்கடலி லாழ்ந்தினவள்போ லிருந்தனள்.

அப்பா சீடர்களே! மன்னன் கட்டளைப்படி ஐந்துநாளைக்குள் பணியாளர்கள் அந்நாட்டை இந்திரலோகம்போற் சிங்காரித்து, முதன்மந்திரிக்குத் தெரிவித்தவுடன், முதன்மந்திரி யெங்குஞ்சுற்றிப்பார்த்து அகமகிழ்ந்து தன் புதல்வனுக்கு நன்றா

ட்டி, நலங்கிட்டு மஞ்சளுடுப்பு உடுத்திப் பூஷணாதிகள் பூட்டிப் பல வாத்தியத்துடன் மன்னனரண்மனைக்கு யாவரும்வந்துசேர்ந்தனர்கள்.

அவ்வாடம்பரத்தைக்கண்ட மன்னன் தன் மகனை நினைந்து சற்றுநேரந் துக்கித்து, அடா மகனே! நீயும் உன் மனைவியும் எங்கிருக்கின்றீர்கள்! இங்கு நீங்களிருவருமிருப்பீர்களாகில், நீ உன் தங்கையின் மணத்தைக்கண்டு எவ்வளவோ பூரிப்பையே.—சரி உனைநினைந்து துக்கிப்பதிற் பிரயோசனமில்லை. (அப்போது இரவு இரண்டுமணியாயிற்றென்றறிவீர்கள்) அடி மாதே? இனி நீ தாமதிக்காமல் நமது புத்திரியை அதி விமரிசையாய்ச் சிங்காரித்து காலை நான்குமணிக்குள் பலதோழிகளுடன் மணப்பந்தலுக்குவந்து சேருவாய். (அவ்வண்ணமே மன்னன் தேவி பலதோழிகள்சூழத் தன்புத்திரியுடன் மணப்பந்தலுக்கு வந்து சேர்ந்தனள்.)

பிறகு, மன்னன் புத்திரியையும், முதன்மந்திரி புத்திரனையும் ஆறுகாற்பீடத்தி லமரச்செய்து, பிரணவமூர்த்தியாகியவிநாயகக்கடவுளைப் புரோகிதர் பூசித்து, ஓமம்முதலிய சகலவிதஜதீகங்களையும் நடத்தி, பல பிராமணர்களாலும், அச்சமயம் வந்திருந்த பெரியோர்களாலும், ஆசீர்வதிக்கப்பெற்ற அத்திருமாங்கல்யத்தைத் தொட்டுப் பூசிக்க. உடனே புரோகிதர் தேங்காய்மீதிருந்த மாங்கல்யத்தை யெடுத்துச் சந்திரகாந்தன்கரத்திலீய புரோகிதராற் குறிக்கப்பட்ட இலக்கினத்தில் மன்னன் புத்திரி கழுத்தின் பின்புரத்தில் பிரமமுடி மூன்று போட்டுத் திருநீற்றையும் அதன்மீதழுத்தினன். சபையோர்யாவரும் ஜெயா விஜீபவாவென்று வாழ்த்தி மலரைத்தூவினர்கள். (ஆரியநேயர்களே? இங்கு திருமணச் சிறப்பை யேன் எழுதாமல் விடுத்தேனெனில், மன்னன் தன் மைந்தனிலாக் கொடுமையால் அதிகவியாகுலமுற்றிருப்பது, அடிமை மனதிலும் அவ்வருத்தம் வாட்டியதைப்பற்றியேயென்றறியவும், வந்தனம்.)

ரீடர்களே? சந்திரகாந்தனுக்கும், மன்னன் புத்திரி காந்தாமணிக்கும் விதிப்படி முகூர்த்தம் நடந்தேறியபின், மன்னன் தன் முதன்மந்திரி கரத்தால் பிராமணர் முதலியோர்கட்கும், புலவிக் தானம் நிதானத்துடன் கொடுக்கச்செய்வித்து, குடிகட்

ரும் இன்னும் மற்றுமுள்ள பிரபுக்களுக்கும்; அறுசுவையுடன்
விருந்தளித்துத் தாம்பூலங்கொடுத்து வெகு மரியாதையுடன்
அவரவர் அரண்மனைக்கனுப்பித் தன் புத்திரனை நினைந்தே வரு
ந்தமுற்றிருக்கினும், தன் புத்திரிக்குக் கொடுக்கவேண்டிய
சீதனமுங்கொடுத்து முதன்மந்திரியா ரரண்மனைக்குப் பலவித
சங்கீதவாத்தியத்துட னனுப்ப, பெண்ணும் பிள்ளையு மனமொ
த்து அகமகிழ்ந்து வாழ்ந்துவர, அச்சந்திரகாந்தனுக்குத் துப்
பாக்கிவயிற்றிற் பிரங்கிபிறந்ததுபோல், அவ்வளவு அழகோடுங்
கூடிய ஓர் ஆண்குழந்தை பிறந்தது.

அவ் வைபவத்தைக்கேட்ட முதன்மந்திரி ஜோதிடரை வர
வழைத்து இலக்கினஸ்படனஞ்செய்து, ஆயுட்பாகத்தையும் நிர்
மானித்து, அச்சிசுவுக்குச் சுந்தரவர்ணனென்று திருநாமத்தால்
அழைக்கப்பெற்று தினேதினே அன்புடன் சீராட்டி வளர்க்க,
அச்சிறுவனுக்கு வயதும், இரண்டாயிற்றென்றறிவீர்கள். ஆனல்
அச்சிறுவன் இரண்டுவயதுவரையில் அவன் பாட்டனாகிய மு
தன்மந்திரி அரண்மனையில் வளர்ந்து, பிறகு மூன்றுவதுவயதில்
தன் அன்னையைப்பெற்ற தந்தையாகிய மன்ன னரண்மனையில்
அதி செல்வாக்குடன் வளர்ந்துவர, மன்னன் தன் புத்திரன்செ
ன்றுவிட்ட துக்கத்தைத் தன் பௌத்திரனாகிய சுந்தரவர்ணன்
அழகைக்கண்டும், அவன் கொச்சச்சொல்லையுங்கேட்டுத் தினம்
மருவதால், பையெனத் தன் புத்திரசோபத்தைக் கண்டிப்பாய்
நீக்கினனென் றறிவீர்கள். இனி மேகவர்னன் சரித்திரத்தைக்
கூறுவேன் கவனிப்பீர்களாக.

மாய்கையால் மதிகெட்டு மானத்துக்கஞ்சி காடேகியெ
ன்று சென்ற மன்னன் புதல்வனாகிய மேகவர்னன் ஓர் ஆலமர
த்துநிழலில் தங்கி யிளைப்பாறியிருந்தவரையில் முன்கூறி னிறுத்
தினேனல்லவா, அவன் மதியை சிந்தித்து விதி யிப்படியு மிருந்
ததல்லவா! ஆ! பரம்பொருளே! உன்னருளால்வந்த பெருமை
யையுடைய அடியேனை இவ்விதச் சிறுமையடையவைத்துக்கண்
குளிர்ப்பது நீதியோ! பலநாசா! மணிக்குள்மணியே? மாசிலா
மணிப் சனே! உன் அருளால்வந்த என்னை யாருமற்றபாவியாக்கி
விட்டு, யாதொன்று மறியாதவர்போல் இருப்பது நின் கருணை
க்கழகா! இனி என்னை நற்கதிக்கு ஆளாக்கவேண்டும் உமை நே

சா! காருங் காருங் காலனைக்காய்ந்தோனே! என்று பலநாமங்களால் துதித்துக்கொண்டு வழிபிடித்து அன்று நாள் முழுதும் நடையாய் நடந்து காட்டைக்கடந்து நிர்ஜீவிபட்டினஞ்சேர்ந்து வீதிவீதியாய்ப் பார்த்துவந்தும், ஒருவனையுங் காணாமல் அ! ஈதென்னபட்டினம்! ஒருமனிதனையுங்காணோமே! இப்பட்டினத்துக்கு அரசன் இல்லையா! அடடா எறும்புகூட இறந்தஜெந்துவாய்த் தோற்றப்படுகின்றதே! ஓ! ஹோ! இந் நாட்டுக்கு யாதோ ஒருநாசம் நேரிட்டிருக்கவேண்டுமென்று யோசித்து, ஓர் வீட்டுக்குள் நுழைந்தான். அப்போது மாலை ஆறுமணி யாயிற்று. அவ்வீட்டிலுள்ள ஓர் கிழவி நித்திரைவிட் டெழுந்தவள்போ லெழுந்து கண்ணீர்விட்டுப் புலம்பி, இன்னு மிப்பொழுதும் விடாதது எத்தனைநாளைக்கு இருக்குமோ என்று துக்கித்து, பிறகு தீபமேற்றி சமயல்செய்ய ஆரம்பித்தனள். இதைக் கண்டுங் கேட்டுக்கொண்டுமிருந்த மேகவர்னன் யாதொன்றுந் தோற்றாமல் வீதியை யங்கிருந்தபடியே திரும்பிப் பார்த்தனன்.

அ! இதென்னபுதுமை! சற்றுநேரத்துக்குமுன் ஒருவரோனுங்காணோம்! தீபம் சரியாய் வைத்தனரோ இல்லையோ! புற்றினின்று ஈசல் புறப்படுவதுபோல் போகிறதும் வருகிறதுமாயிருக்கின்றார்களே! அ! மன்னனரண்மனையில் நகார் சப்தமுங் கேட்கின்றது! ஆகையால் இம்முதறியாட்டியிடங் கேட்டுத்தெளியவேண்டுமென்று தீர்மானித்து, அம்ம அம்மா பாட்டி? உனதிடத்தில் அடியேனுக்குக் கிஞ்சிற்று உணவுகிடைக்குமா? அப்படிக்கிருக்கில் தயவிடவேண்டுந் தாயே என்று பரிதாபத்துடன் கேட்டான்.

அவ்வீட்டுக்கிழவி, அப்பா? நீ யார்பெற்றபிள்ளையோ! நீயேன் இந்த நிர்ஜிவிப்பட்டினத்திற்குவந்தாய். அய்யோ! உன் முகத்தைக்காணில் இன்று பகல்முழுதும் அன்னம்புசிக்கவில்லை போற் காணப்படுகின்றதே! இப்பொழுதுடலுக்கு அன்னமே பிரதானம் ஆகையால் இதோ என்னாற்கொடுக்கப்படும் உணவைப் புசிப்பாயப்பா. (புசித்தல்.)—அம்மணி! உன் கருணையுள்ள எண்ணத்தால் உயிர்பெற்றேன். ஆகிலும், தீபம் வைக்காமுன் மாடமாளிகை, கூடகோபுரம், மன்னனரண்மனையுள்ள இப்பட்டினம்வந்தேன், ஒருவரையுங் கண்டேனில்லை. தீபம் சரியாய்

லைக்குள்களோயில்லையோ? பெரும் ஆர்ப்பாட்டமாய் ஜெனங்கள் நடப்பாடக் காண்கிறேன், இதனது ஆந்தர்யம் உனக்கு நன்றய்த் தெரிந்திருக்குமல்லவா, அதனை விபரமாய்த் தெரிவிக்க வேண்டும் அம்மணியென்று கேட்டான்.

கிழவி, அப்பா மகனே! இந்நாடுபடும் அவஸ்தையை யென்னென்று கூறுவேன்! இந்நாட்டையாளும் மதிவல்லபமகாராஜர் அதிபுத்தமர், இக்குடிகளிடத்தி லதிவிசுவாசமுடையவர், பனிரெண்டு மந்திரிகளோடு சிம்மாதனத்திலிருந்து மநுநீதிப்படியாளுந் தன்மையுடையவர். அவ்வித நற்குணமுடைய மன்னருக்குக் இரதியைப்பழிக்குமோர் பெண்ணுதித்தனள். அப்பெண்ணரவளர அழகும் பிரகாசித்துவந்து யுத்தவயதடைந்து கன்னியாமாடத்திலிருந்து அரி அரனை அனுதினமும் தவறாமல் பூசித்துவருபவள். அவள் நாமதேயம் சௌந்திரவதியென் றழைப்பதுண்டு. அவள்செய்யும் பூசைக்கு யான்தான் புஷ்பங்கொடுப்பவள். என்மீது அதிவிசுவாசமுடையவள். அப்படிக்கொற்றவனை ஓர் இராக்ஷசன் சென்றவருடத்தில் ஆகாயமார்க்கமாய் வந்தவன் அச்சிறுமி தன் தோழிகளுடன் நந்தவனத்தில் பந்தாடிக்கொண்டிருந்தவளைக்கண்டு, சீதாதேவியை இராவணன் எடுத்தேகுஞ்சமயத்தில் ஜடாயுவினால் யுத்தம்நடந்தவாறு அவள்தோழிகளால் கேள்விப்பட்ட மன்னன் அச்சண்டாளனுடன் பத்து நாள்பரியந்திரம் போர்புரிந்து சோர்வையடைய, அச்சமயம் அவ்வரக்கன் கோபித்து பகல்முப்பதும் நிர்ஜீவியாய் இப்பட்டினமிருக்க மாய்கையாற் செய்துவிட்டதோதோன்றும் அறைமயில் தூரத்திலுள்ள மலைக்குகையில்வைத்து அவளுக்குவேண்டும் உணவையுங்கொடுத்துவருகிறான். ஆனால் அவள் சிவபத்தி விஷ்ணுபத்தியிற் சிறந்தவளா யிருப்பதால், அப் பெரும்பொருளின் சொல்லால் அவனைக் கிட்ட நெருங்கவொட்டாமல் இன்றுஞ் செய்துவருகின்றதென்று கேள்வி.

ஆகையாலதான் அடா மகனே! பகலெல்லாம் அரசன்முதல் எறும்புவரையில் இறந்தப் பிரேதம்போ லிருந்து, மாலையில் தீபம்வைத்தவுடனே நாங்களெல்லாம் உயிர்பிழைத்துச் சமையல்செய்து உண்பதும் உலாவுவதுமாக யிருக்கின்றோம். பொழுதுவிடிந்தால் யாவரும் மறைந்துபோனதுபோ லிருக்கின்

றேம். ஆனதால் (முன்பு தெய்வப்புலமை வகித்த * நற்கீரருக்குப் பரஞ்சோதியால் நேரிட்டச் சாபநிவர்த்திக்காக இமயமலைக்கருகிற் செல்லும்போது, ஓர் தடாகத்தில் நீராடி அந்நீர்க்கருகிலுள்ள ஆலவிருக்ஷத்தினிழலில் சிவயோகஞ் செய்துகொண்டிருக்கையில், அச்சமயத்தில் அவ்வாலமரத்திலிருந்து ஓர் பழுப்பு இலையொன்று பாதி நீரிலும், பாதி நீர்ப்புறத்திலுமாக விழ, நீரிற்படிந்த பாதி பழுப்பு மச்சவடிவாகவும், நீர்ப்புறத்துத் தங்கிய பழுப்புப் பறவைவடிவம் அடைந்து, மச்சம் பறவையையும், பறவை மச்சத்தையும் இழுக்க, அம்மகானுபாவர் அவ்வாச்சரியமுள்ள செய்கையிற் றமது கருத்தைக் கிஞ்சிற்றுச் செலுத்த, அதனால் சிவயோகத்துக்குத் தவறுதலுண்டாயிற்று.

அப்பா மகனே! அதன்முன்பு அத்தடாகத்தினிடத்துச் சிவயோகத்தில் வழுவினவர்களாகிய தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்பதின்மர்களை யொருமலைக்குகையில் அடைத்து, இன்னும் ஒருவன் வேண்டுமெனக் காத்திருந்த கற்கிமுகியெனும் பூதமானது நற்கீரரை யெடுத்துப்போய் அக்குகையிலடைத்து ஆயிரவராக்கித் தன்னியமப்படி அகப்பட்ட அவ்வாயிரவரையும் தின்னும்படிக்கு நீராடப்போயினன். அப்போது, அக்குகையிலிருந்தவர்களால் அப்பாபியெண்ணத்தைத் தெரிந்துகொண்ட நற்கீரதேவர் ஸ்ரீமுருகக்கடவுளைப் பிரார்த்திக்க, அக்கருணாகரக் கடவுள் தன்கரத்திலிருந்த சத்திவேலைவிடுத்து அக்கற்கிமுகியை இருகூறாக்கி அக்குகையின்கண்ணிருந்த யாவரையும் இரக்ஷித்தாண்டதுபோல்,) அத்துர்மார்க்க அரக்கனைக் கொன்று அப்புண்ணிய சுசிலியாகிய செவந்திரவல்லியைக் காத்து இந்நாட்டிலுள்ளவர்களை முன்போல் வாழவைக்குஞ் சூரன் என்று தோன்றுவானோ தெரியேனடா கண்மணியென்று துக்கித்தனள்.

இவ்விசேடத்தைக் கேட்ட மேகவர்ணன் அப்படியா! அப்பு அம்மா பாட்டி? நீ யாதொன்றுக்கும் வியசனமுறாதே, ஈசனிடப்பாகத்திலமர்ந்த பராசத்தி காப்பாள். உண்ட இளைப்புத்

* நற்கீரர் பிரதாபத்தைத் திருமுருகாற்றுப்படையில் விசிதமாயறிந்துகொள்க, இதனை மேற்கோளுக்காக எடுத்துக் கூறினதென் றறிவீர்கள்.

டாகிறது, நித்திரையும்வருகிறது, சற்றுப்படுத்து எழுந்தபின் யோசிப்போம், நீயும் உறங்குவாயம்மாவென் றுரைத்துவிட்டு, அவ்வீட்டின் தெருத்திண்ணையின்மீதிருந்து தான்நாட்டைவிட்டு மதிமயக்கால் ஓடிவந்துவிட்டச் சிறுமையை எண்ணியெண்ணி மனம் புண்ணாகி சற்றுநேரம் துக்கித்து, ஆ! மதியே! இன்னும் எனையாது செயக்காத்திருக்கின்றனையோ! ஏ! ஜெகதீசா! மதியானது இவ்வளவுகெதிக்கு ஆளாக்கி யிங்குகொணர்ந்துவிடுத்தும், இந்நாட்டின் கொடுமையையுங் கேட்கலானேனே! அய்யோ! ஈது பாபும் பாபம், என்று பரிதாபித்துப் பராசத்தியைத் துதித்தனன். எவ்வாறெனில்:—

ஓம் அம்மணீ! ஈரேழுபதினான்கு லோகங்கட்கும் ஆதியாகியும், அநாதியாகியும் உள்ள பராசத்தீ! சகலவுயிர்களையும் நினது கர்ப்பத்தினிடம் வைத்து அன்புடன் ஆதரித்துவரும் ஓம் ஆநந்தசொரூபீ! ஈசனிடம் வாதிட்டு திருநடனம் புரிந்த ஓம் காளிகாதேவி! சூக்ஷமத்திலாடும் சுந்தரி! மானிலம் புகழும் ஓம் மாயாசொரூபீ! ஓம் அர்தனர் ஈஸ்வரி! ஓம் உமையபார்வதி! மகிடனைவென்ற ஓம் மனோன்மணீ! சரணம் சரணம், தாயே! இந்நகரிலுள்ள சகலவுயிர்கள் பிழைக்கவும், மன்னன் புத்திரியை அக்கிரமமாகக் கொண்டுசென்று வைத்திருக்குந் துட்ட அரக்கனைக்கொன்று வெல்வதற்கு ஓர்வாளுந் தந்து, எனையினி யெத்துயரமுந் தொடராமலிருக்க நல்வரந்தரவேண்டுஞ் சங்கரீ என்று மானத பூசைசெய்து சற்றுப் படுத்தனன்.

உடனே தோத்திரப் பிரியாளாகிய பராசத்தி மகிழ்ந்து மேகவர்னன்முன் எழுந்தருளி, எனதன்பிற்கினியபாலா! இனி உனக்கு யாதொரு துன்பமும் வாராதென்றறிவாய். இதோயானளிக்கும் பஞ்சாக்ஷரத்தை வீதிவீதியாய் அருணோதயத்துக்கு முன் தூவுவாயாகில் சகலவுயிரும் தினே தினே பிழைத்துவாழும், அப்பா மகனே! என்னால்தரப்படும் இவ்வரியவாளை நின்கரத்திற்றாங்கி அவ்வரக்கன்முன் செல்கில், அவனிடமிருக்கும் மாய்கை சற்றும் நில்லாது. அவன் உன்னிடம் ஆக்ரமித்து உனை விடாமற் போர்செய்வன். பிறகு இப்பஞ்சாக்ஷரத்தை அவன் மீது தூவி, இவ்வாளால் ஓங்கிவெட்டுவாயாகில், தப்பாமல் இறப்பான். உடனே இந்நகர் மன்னன் உனை தெய்வமாகப் பாவித்

துத் தன் அருமைமகளைக் கொடுத்து மன்னாதிமன்னனாக்குவான், வாழிவாழி மைந்தாவென் றாசீர்வதித்துச் சென்றனள். (அவள் யாரெனில் எங்கும் நிறைந்த சத்தியென்றறிவீர்கள்.)

பிறகு, மேகவர்னன் பலதரம் போற்றிசெய்து, ஆ! எங்கும் நிறைந்த ஏகசொரூபி! எனைப்பெற்றதாயீ! இன்றுதான் சுகமுற்றேன் என்று புகழ்ந்து, மன்னன் கொலுமுகஞ்சென்று ஏ! மண்டலேஸ்வரா? போற்றிபோற்றி, யான் வெளிதேயத்திலிருந்து இந்நாட்டுக்குவர, இந்நாடு அடைந்துவரும் பெருந்துக்கத்தைக்கேட்டேன். இனி அத்துக்கம் நீங்கிற்றென்றறிவீர். அய்யனே? உமது அருமைத் திருமகளைக் களவாடிச்சென்ற துட்ட அரக்கனை இவ்வாளுக்குப் பலிகொடுத்து உமதுமனமகிழத் தங்கள் புத்திரியைக் கொணர்ந்துவிடுவேன் என்று கெம்பீரவார்த்தையா லுரைத்தான்.

மேகவர்னன் உரைத்த வார்த்தையைக் கேட்ட மன்னன், ஏ! மந்திரிமார்களே! சபையோர்களே! ஆ! ஈதென்னவிந்தை! நமது அருமைத் திருமகளை மீட்பதற்கு அத்துர்மார்க்க அரக்கனுடன் எத்தனையோதடவை போராடியும் சற்றும் முடியாமற்போயிற்று, கடைசியாக நம்மெல்லோரையும் படைத்துக்கஞ்சாமல் காலைமுதல் மாலைவரையில், அவன் தன் மாய்கையால் பிணமாய்க்கிடக்கவும், தீபம் வைத்தவுடன் உயிர்பிழைத்து ஜீவித்திருக்கச்செய்த கொடியோனை, இதோ நமெதிரில் நிற்கும் 16-17-வயதுடைய இச்சிறுவன் யாதொரு துணையுமின்றி எவ்வாறு சாதிப்பன்? அந்தோ! பஞ்சவர்ன அழகுபொருந்திய இச்சிறுவனைக் காணில் என்மனந் தயங்குகின்றதே! இவன் ஓரரசன் புத்திரனாக விருக்கவேண்டும். ஏதோ ஓர் காரணத்தால் மீறிவந்திருக்கவேண்டும். அங்குதப்பியிங்குதப்பி யகப்பட்டுக்கொண்டான் அம்மட்டிக்கா முத்தன் என்பதுபோல், இவன் ஏன் வீணில் அப்பாவிமுன் சென்று யுத்தம் புரியவேண்டும். அவனோ மாய்கையில் வல்லவனாயிற்றே. ஐயோ! இச்சிறுவன் இம்மண்ணையா கொடுத்துவைத்தான். நாம்தடுக்கினுங்கேளான்போலிருக்கின்றதே! என்று பலவாறு துக்கித்தனன்.

மந்திரி, ஏ! இராஜப்பிரபூ! நீர் யாதொன்றுக்கு மஞ்சற்க. இச்சிறுவனை நன்குற்று நோக்குவீர். இவன் கரத்திற் றாங்கிய

ருக்கும் வாளின்முனையில் பராசக்தி தாண்டவம்புரிகிறாள். இவன் திருமுகத்தைக்காணில் வீரலக்ஷ்மிபிரகாசிக்கின்றாள். இவன் பூரணக்கிருபையுடையவன். எவ்விதத்திலும் அக்கொடிய அரக்கனை வெல்லுவன். பிறகு, உமது புத்திரியை இங்களிந்து கொணர்ந்துவிடுவானாகில், இவனுக்கே நீர் மனமகிழ்ந்து தங்கள்புத்திரியைக்கொடுத்துத் திருமணமுடித்துவைக்க வேண்டுமென்றுரைத்த மொழியைக்கேட்ட அரசன் துள்ளியெழுந்து ஏ! சபையோர்களே? நாம் படும் ஆபத்தை நீக்கினவனுக்குக் கைம்மாறு செய்யவேண்டுமல்லவா, அப்படிக்கு எனது புத்திரியைக் கொடுப்பதன்றியில், இந்நாட்டையாளவுஞ் செய்வேன். இதுவே "சத்தியம் சத்தியம்" இனிதவறேன். அப்பா சிறுவனே! இனி உன் காரியத்திற் பிரவேசித்து வெற்றிபெற்றுவருவாய், வாழ்வாழி என்றனுப்பினன்.

மேகவர்னன், யாவருக்கும் வந்தனஞ்செய்து வெளியில் வந்து அந்நாட்டுவீதிகடோறும் பராசக்தி கட்டளைப்படி பஞ்சாக்ஷரத்தைத் தூவிக்கொண்டே அரக்கனிருக்கும் மலைக்குகையருகில் வந்துசேர்ந்தனன். அதற்குள் அருணன் ஒற்றைச்சக்கரமுடையதும் ஏழுபச்சைப்புரவிகள் பூட்டிய இரதத்தின்மீதாரோகணித்து அரக்கனின்றுடனெழுந்தனன் என்றுரைக்கும் வாறாய்த் தன் கிரணங்களை வீசி, கீழ்த்திசையில் வெளிவந்தனன். அந்நகர்வாசிகள் யாவரும் உயிர்பெற்றிருந்தார்களேயொழிய, இறந்தவர்களல்லர். இவ்வாச்சரியத்தைக்கண்ட மன்னன் மந்திரிமுதலிய யாவரும் பேரானந்தக்கடலிலாழ்ந்தி அ! இங்குற்றச்சீராளன் மகா அருட்பொருட்பெற்றக் கன்னியன்! சித்தபுருடனே மானிடவுருவெடுத்திருக்கவேண்டும். இல்லாவிடில் நாம் தினந்தோறுங் காலையிற் பிழைத்திருந்தோமா! இனி தடையின்றி அவ்வரக்கன் இப்புண்ணிய பாலன் கரத்திலிருக்கும் வாளாலிறப்பது திண்ணம், திண்ணம் என்றுரைத்து மனமகிழ்ந்து மந்திரிகளைநோக்கி ஏ! மந்திரிமார்களே! இனி தாமதிக்காமல் நமது வீதியெங்கும் விசித்திரப்பந்தற்போடச்செய்வீர்கள். அப்பரமசண்டாளனாகிய அரக்கன் மாண்டவுடனே, எனது புத்திரியையும் வெற்றிபெற்றுவருங் குமரனையும், அற்புதக்காட்சியுடனிங்கு வரவழைத்து இருவருக்குந் திருக்கல்யாணமுடிக்கவே

ண்டுமென்று கட்டளையிட்டு மன்னன் முதலியோர் யாவரும் போர்புரிவதைக்காணச் சென்றனர்கள்.

சீடர்களே! பிறகு மேகவர்னன் பராசத்தியைத் தியானித்துக்கொண்டே அரக்கனிருக்குங் குகையருகிற் செல்ல, அச்சமயத்தில் அரக்கன் மன்னன்புத்திரியைநோக்கி, "விநாசகாலே விபரீதபுத்தி" யென்பதுக் கிணங்க அடீ பெண்ணே! இன்னுமெத்தனைநாள் உனக்காகக் காத்திருப்பேன். அய்யோ! உன்னழகுக்கேற்ற வுருவனை யெடுக்கக் கட்டளையிட்டால் என் மாய்கையால் உடனே உன்மனமகிழ வெடுத்து வருவேனே. அடீ கண்ணே! இலவங்காற்றக் கிளிபோலென்னை யாக்கிவைப்பதற்கே யெண்ணங்கொண்டனையே. எனை எப்போர்க்கொற்றச் சூராதிசூரர்கள் காணில் உயிர்பிழைத்துச் செல்வாருமுளரோ! நானென்ன இலேசான பேர்வழியா! ஆ! உலக மயக்கெல்லாம் உனதிடத்திற் காண்கின்றேனே! நீ இடும் வேலைகளையாவும் வெகு அன்புடன் செய்துவருவதை நீ யறியவில்லையா! என்னால் இந்நகர்வாசிகள் அடைந்திருக்கும் நன்மை துன்மைகளை நீ கண்டதில்லையா! எனிப்படி எனைக்காக்கவைக்கிறாய். இன்னும் உனக்கு எவ்வளவோ சவுக்கியந் தேடிவைக்கப்போகின்றேனே!

அடீ பிடிவாதமானே! யான் உனதிடங் கிட்டநெருங்கிவராமென்றெண்ணில், அக்கினிசுவாலை வீசுகின்றதே! ஈதென்ன காரணமோ எனக்குத் தெரியவில்லையே! ஆ! எனது பதிநேராம்பாட்டனாகிய கற்கிமுகியின் மாய்கை முற்றும் யானடைந்திருந்தும், இப்பெண்ணினிடம் வைத்தக்கருத்து ஒன்று முடியவில்லையே! இனிச் சற்றுந்தாளேன் அடீ சுகிர்தரஞ்சிதபொற்கிளியே! உனையின்று கூடி என்கருத்தை முடிக்காமல்விடேன். இத்திரேகத்தை உனக்கே தத்தஞ்செய்தேன் பாரென்று கிட்டநெருங்கினான். அத்தருணம் யாவும் பார்த்தும் கேட்டுமிருந்த மாசற்றக்குணமுடைய மேகவர்னன் அதிகோபத்துடன், அடா அடா இராக்ஷதப்பயலே! நீதானா இந்நகரை அனியாயப்படுத்தினவன்! இதோ திரும்பிப்பார், நீ யடையப்போகுங் கெதியைக்காண எவ்வளவு பிரஜைகள் வந்திருக்கிறார்கள். இதனால் உன்மாய்கைப் பாழாய் விட்டதென்றறிவாய். அடே துன்மார்க்கா? முழுதேங்காயை நாய் என்செயக்கூடும். இனி நாமிருவ

றும் அம்பலத்திற் கூத்தாடவேண்டும். வெளியில் வருவாயடா பாவி. காலனிடஞ்சிக்கிய ஆவி அவனையேமாற்றித் தப்பிப்பது முண்டா! அடே கொடியதுஷ்டா? என்பார்வைக்ககப்பட்ட உன்னையுயிருடன் விடுவேனா! யான்விடினும் இதோ என்கரத்திலிருக்கும் வாள்விடாதே பள்ளம் மேடு, மேடு பள்ளமென்று அறியாயா. சி-சி, வெளியில் வாடாவென்றும், ஒருவன் ஈசனிடத்தில் நல்வரம் பெற்றிருக்கினும் அவன் செய்யுமக்ரமத்தால் வீணேயொருசமயம் மழிந்துபோவன் என்று அட்டகாசஞ் செய்தழைத்தனன்.

அவ்வாறு மேகவர்னன் அட்டகாசஞ்செய்தழைத்த கெம்பீரமொழியைக்கேட்ட அரக்கன் அடங்கார் சீற்றங்கொண்டு குகையைவிட்டு வெளியில்வந்து அங்கு நிற்குஞ் சிறுவனைப் பார்த்து, அடா அற்பப்பயலே? நீயா என்னுடன் போர்புரியவன்! இராஜேந்திரனை ஓர் முயல் எதிர்த்துவந்ததுபோ லிருக்கின்றதே! நீயோ பாலகனயிருக்கிறாய், உன்னைப்பிடித்துமென்று தின்றுவிடலாமெனில், என்கடைபல்லுக்குப் போதாதவனாயுமிருக்கிறாய். அப்படிக்குண்டும் பசியாறுமலிருப்பானேன் என்றல்லோ, உன்னைவிடுக்கலானேன். சி-சி, உயிர்தப்பியோடிப்பிழை. அடே உன் நிறத்தைக்காணில் ஜலிதவர்னத்தோடுமிருக்கிறாய், நீ யாரடாபயலே என்று அதட்டிக்கேட்டனன்.

மேகவர்னன், அடேபாபீ துஷ்டப்பூச்சே? நீயோர் சிம்மமென்றும் என்னை யோர்முயலென்றும் மதித்துக்கூறினையல்லவா! சபாஷ் மெச்சினேன். அன்று ஆயிரத்தெட்டு அண்டத்தையாண்டுவந்த அதிசூரனை சிறுகுழந்தையா யுருவெடுத்துவந்த சண்முகன் எப்பாடுபடுத்தி, அவனையும் அவனுக்குத் துணைவந்தவர்களையும் வேருடன் களைந்து, இந்திரன் புத்திரனை மீட்டு பாவரையும் இரக்ஷித்ததுபோல், இங்கு உன்னைக்கொன்று அரசன் புத்திரியைக்கொண்டு செல்ல வந்திருக்கிறேன். தேன்மீது முடவன் ஆசைப்படில் கிடைக்குமா? இதோ உன் மாய்கையால் நேற்றுவரையில் பிணம்போற் கிடந்தவர்கள் அருணன் தன் கிரணங்களை வீசி இரண்டுஜாமமாகிய முயிருடனிருக்கின்றர்கள்பார். நீ என்னைற் படப்போகும் பாட்டைக்கண்டு சந்தோஷிக்கவந்திருக்குஞ் சனக்கூட்டத்தைப் பாரடா மூடா. அடே துன்மார்க்கப்பூச்சீ? கிட்டாதாயின் வெட்டெனமறக்க

வேண்டும். நீ தகாதகாரியஞ் செய்தபடியால் இவ்வாளுக்கு உனைப்பலிகொடுக்கவந்தேன். இனி நீ எங்குசென்றாலும் இவ்வீரியவாளென்னமோ சற்றும்விடாது என்றுகோபித்துரைத்தனன்.

பிறகு, அங்கு நின்று வேடிக்கைப்பார்க்கும் ஜனக்கூட்டத்தைக் கண்டும், அச்சிறுவன் மொழிந்த வீரவார்த்தைகளைக் கேட்டும் அவ்வரக்கன் விநாசகாலே விபரீதபுத்தியென்பதுபோல், அங்கிருந்த பனைமரத்தை வேருடன் பிடுங்கி மேகவர்னன்மீது தாக்கினான், உடனே மேகவர்னன் வில்லைவளைத்து டங்காரவோசையுடன் ஓர் அம்பைவிடுத்து அம்மரத்தை வெட்டித்தள்ளினான். அடடா! இவனைக்காணில் சிறுவனாகத் தோற்றப்படுகின்றது! இவன்செய்கையைக்காணில் சாக்ஷாத் சுப்பிரமணியன் செய்கையையொத்திருக்கின்றது. இவன் சக்திமகனாயிருப்பானோ! சீ-சீ, நமன் என்பதற்குத் தடையில்லை. ஏனெனில் சண்முகனாயிருந்தால் ஆறுமுகமும், வீரவாகுதேவன் இன்னும் மற்றுமுள்ள படைகளிருக்கவேண்டுமே, ஆனதால் இவன் சம்மாத்திரம் நமக்கு என்று அங்கிருந்த சிறுமலையைப்பிடுங்கி வீசினான். அம்மலை வருவதைக்கண்ட மேகவர்னன் சத்தியை நினைந்து ஓர் தண்டத்தால் புடைத்துத் தூள்தூளாக்கினான்.

அதனைக்கண்ட அரக்கன் ஓ! வேறா! இவன் வில்வித்தையிற் சற்றுக் கற்பனையுடையவனாய்க் காணப்படுகின்றான். இவனைச் சற்றும் விடப்படாது என்றாக்ரமித்து, மாய்கையால் அச்சிறுவனைச் சபிக்க ஆரம்பித்தான். தான்கற்றமாய்கை தன்முன் நில்லாததைப்பற்றி மிகவும் வருத்தமுற்று, அங்குமிங்கும் ஓடிநின்று வாடினான். அய்யோ! இதென்னகொடுமை! இதோ நமதெதிரில் நின்று நம்மை சட்டைசெய்யாமல் போர்புரியும் சிறுவன் அதிபால்யன். எவ்வளவோ மகுடாதிபதிகளை நாசஞ்செய்த நாம், இவனிடத்தி மோசம்போய்விடக் காண்கின்றதே. கடலைத்தாண்டின நாம் சிறுகால்வாயாகிய இப்பயலை வெல்லாமற்போவோமா! சிற்றரவமாயிருக்கினும் பெரியதண்டங்கொண்டு புடைக்கவேண்டும். சரிசரியென்று தீர்மானித்துத் தனக்குப் பின்வருங்கதியைபுன்னிப்பாராமல் ஆகாயத்திற்கிளம்பி அட்டகாசஞ்செய்து, பூமியிலிறங்கி ஓர் பெரிய ஆலமரத்தைப்பிடுங்கி அடே பயலே! உனைபின்னென்று நினையாமல்

என்பொருட்டு கேவலமென்னுடன் வந்து போர்புரியத்துணிந்தாயல்லவா! ஆ! ஆ! அடே மடப்பயலே இவ்வாலமரத்தால் உன்னைச் சரிப்படுத்திவிட்டு, உன்னைக் காகசமென்று மென்றுதின்று ஏப்பமிடப்போகிறேன் பாரடாவென்று சுழற்றிவிடுத்தனன்.

அதைக்கண்ட மேகவர்னன் கலகலவென்றுசிரித்துப் பராசக்தியை நினைத்து மானதபூசை செய்து, தனதிடமிருந்த பஞ்சாட்சரத்தைக் கிஞ்சித்தெடுத்து ஊதினன். உடனே, அவ்வாலமரம் திக்கென்று பற்றி யெரிந்துவிட்டது. இதனைக்கண்ட அரக்கன், அடடா! இம்மரத்தால் சற்றுந் தப்பிக்கானென்று நினைத்தோமே, அய்யோ! அம்மரத்தை பாழ்படுத்தி விட்டானே! இனி இவன் எதனால் இறப்பானோ தெரியவில்லையே! அல்லது நம்மைக்கொல்லவந்த எமனோ! தசகண்ட இராவணனை ஓர் மனிதன் கொன்றான். சூரபத்மனை ஆறுமுகமுடைய ஓர் சிறுபயல் தன்கரத்திலிருந்த சொற்றைவேலால் கொன்றான். இங்கு ஒருமுகமுடைய இத்துஷ்டனுகாளை தன்கரத்திலிருக்கும் வாளுக்குப் பலிகொடுப்பான்போற் காணுகின்றது. நாம்கற்றிருக்கும்மாய்கை இப்போது சற்றும் உதவக்காணோமேயென்று பல்வாறு யோசித்துத் துக்கித்து நின்றிருந்தனன்.

அப்போது மேகவர்னன் ஓ! ஹோ! இவ்வரக்கன் சேவகம்யாவுங்குன்றிற்று, இனித்தாமதிக்கப்படாதென்று வெகுதுணிவுடன் அவ்வரக்கனிடஞ்சென்று நின்று அடே பாபி! அரக்கனே! நீ செயத்தகாத வேலையைச் செய்து அகங்கரித் திருந்தமையால் இதோ உன்னை வெட்ட வாளை ஓங்கினேன் என்று பஞ்சாட்சரத்தைத்தூவி வெட்டினன். அவ்வெட்டால் அவ்வரக்கன் இருகூறாகி கீழ் விழும்போது அண்டத்தோரும் மண்ணுள்ளோரும் திடுக்கிட, ஓர் பெருங்கூச்சலிட்டு ஆவிநீங்கிற்று. இக்கொடிய அரக்கனது தேகத்தைப் பார்ப்பது பாபமென்றெண்ணி அருணனும் மேற்குத்திசையைநாடிச் சென்றான். உடனே மாலைப்பொழுதுவர, மேகவர்னன் வெற்றியையும், இனிநடக்கும் விந்தைகளைக் காணக் குளிர்ச்சிபொருந்திய சந்திரனும் அதிபிரகாசத்துடனுதித்தனன்.

அங்கு போரின்வேடிக்கையைப் பார்க்க வந்திருந்த மன்னன் மந்திரிமார்கள்இன்னும் மற்றப்பிரசைகளியாவருங்கண்டு

அப்பா! இன்றுடன் நம்மையாவரையும் பிடித்தபீடை தொலைந்தது. இனி பிழைத்தோம். ஆ! இச்சிறுவன் பிரதாபமே பிரதாபம்! இக்கொடிய அரக்கனும் மாண்டானல்லவா! என்று யாவரும் பலவாறு புகழ்ந்துகொண்டாடினார்கள். அப்போது மன்னன் அய்யா மந்திரிமார்களே! நமது புத்திரியைக்கொணர்வதற்கு முத்துப்பல்லக்கும், பஞ்சவர்ணத்தோடுங் கூடியவனும், அரக்கனைக்கொன்று ஜெயங்கொண்ட அசகாயசூரனை வெகுமரியாதையுடன் நமது அரண்மனைக்கழைத்துச் செல்லவேண்டும். இவ்வெட்டாநாள் சுக்கிரவாரங் காலை ஆறுமணிக்கு மணத்தை முடித்துக் கண்குளிரக்கண்டு, மனமகிழப் பூரிக்கவேண்டியிருப்பதால், சீக்கிரம் யான் ஏறி பவனிவரும் இரதத்தை தேவேந்திரன் இரதத்தினைப்பனைப்போல் சிங்காரித்து இங்ஙனம் கொண்டுவந்து நிறுத்துங்கள் என்று கட்டளையிட்டான் (உடனே பல்லக்கும் இரதமும் வந்து நின்றனவென் றறிவீர்கள்.)

அச்சமயம் பலவித வாத்தியமுழக்கத்தையும், பிரசைகளினார்பாட்டத்தையுங் கேட்ட மன்னன் மகளாகிய சௌந்திரவல்லி ஆ! இதென்ன பெருமுழக்கங் கேட்கின்றதே! இக்காலையில் நம்மைக் கெஞ்சிச்சென்ற சண்டாளனாகிய அரக்கன் இதுகாறும் வாராமல் எங்குற்றனன். அப்பாவி யொருசமயம்வந்துவிடுவானாகில் வெளியிற் சந்தோஷங்கொண்டாடுபவர்களை எப்பாடுபடுத்திவிடுவானோ! அத்துஷ்டனோ வெகு மாயவித்தைக் கற்றவனாயிற்றே! நமக்கோ யாதொன்றுந் தோன்றவில்லையே யென்று துக்கித்துக்கொண்டு, அவள் அக்குகையைவிட்டு வெளியில்வந்து பார்த்தனள். (இங்கு இப்பெண்ணரசி குகையைவிட்டு வெளிவந்து நின்றது எவ்வாறிருந்ததெனில், பாண்டவர்களும், அவர்கள் தேவியாகிய பாஞ்சாலியும் அக்கியாதவாசத்தைத்தொலைத்து யாவருமறிய வெளிவந்ததையொத்திருந்தது.)

சீடர்களே! அங்கு வெகு ஆச்சரியமுற்று வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கும் மன்னன் புத்திரியைத் தோழிகள் கண்டு வெகு துக்கத்துடன் சென்று, அப்பெண்ணைக் கட்டிக்கொண்டு கோடுகோடென்றழுது, எங்களரசியே! இத்தனை நாள் இப்பாழடைந்த குகையில் எப்படித் தனித்து இருந்தனையோ! பாவி அரக்கனைக்கண்டு எப்படிப்பயந்து ஒடுங்கியிரு

ந்தேனையே! இனி யுனக்கு யாதொரு துன்பமும் வாராதம்மா, அச்சண்டாளன் இதோ கெம்பீரமாகியும், அதிசூரராகியும் கரத்தில் வில்லையும் வாளையுந் தாங்கி, மேகவர்னத்தையொற்றப் புண்ணியசீலரால் வெட்டுண்டு பாழாய்ப்போனான் பார்ப்பாய் தாயே. அன்றியில் ஐவிதநிறமுடைய இச்சூரருக்கு உனைக்கொடுத்துத் திருக்கலியாணஞ் செய்துவைப்பதற்கு உன் தந்தை முதலிய யாவரும் வெகு குதூகலத்துடன் வந்திருக்கிறார்கள். ஆகையால் நீ யாதொன்றுக்கு மஞ்சாமல் இம்முத்துப்பல்லக்குமீதமருவாய்த்தாயே என்று பணிந்துரைத்தனர்கள்.

சௌந்தரவல்லி அப்படியா! சென்றனை சண்டாளன். அதோ நிற்கும் சூராதிசூரரா எனக்கு மணாளர்! வெகு சந்தோஷம்! இதோ என் தாய் ஏறிவரும் விசித்திர முத்துப்பல்லக்கிலமர்ந்தேன். என்பாக்கியமே பாக்கியம். அடீயம்மா சேடிகளே? இந்த ஒன்னறைவருடகாலமாகத் துன்மார்க்க அரக்கனால் சிறையுண்டு, அனந்தவருத்தப்பட்டேன். என் தாய்தந்தையர்களையும், உங்களையும் நினைந்து நினைந்து மிகு துக்கித்தேன். அப்பாவி யரக்கன் இன்று காலையில் என்னைநாடி பலவாறு கெஞ்சி மன்றாடினான். அச்சமயம் வெளியில் என்னமோ ஓர் சப்தம் பிறந்தது. அதைக்கேட்ட அத்துட்டன் வெளியிற் சென்றான். அப்போர்க்கொற்ற கொடியோன் மாய்கை எவ்வாறு உதவாமற்போயிற்று! ஆ! இது மான்மழுவேந்திய மாசிலாமணியீசனருளென்றே நினைக்கின்றேன் எனைத் தாய்போல்வளர்த்த தாதிகளே என்றுரைத்தனள்.

இதுநிற்க, மன்னன், மந்திரிமார்கள் முதலிய யாவரும் மேகவர்னனைக்கண்டு தனித்தனி ஆலிங்கனஞ்செய்து அப்பா! எங்கள் மிடியைப்போக்கி யுயிர்பிச்சைக் கொடுத்துக் காத்திரக்ஷித்தக் கருணைப்பெருங்கடலே! உமக்கு அனேகதரம் ஆசீர்வாதம் தந்தோம். இனி இந்நகர் சுகப்பட்டது என்று பலதரந் துதித்தேற்றினார்கள். அப்போது மன்னன், அப்பா! நாங்களெல்லோரும் துன்பக்கடலில் ஆழ்ந்திருந்தோம். உன்னாற் சுகமுற்றோம். யானிட்ட முரைத்தச் சத்தியவாக்குப்படி இவ்விரதத்திலே நீ என்கிற துடைக்குவந்து, அவ்வரக்கனைக் கொன்று எனதருமைத் திருமகளை மீட்டுக்கொடுத்த நன்றிக்கு உனக்கு

மணம் முடித்து, இந்நகரைத் தந்து பட்டங்கட்டி வைக்கப்போகிறபடியால் சீக்கிரம் வரவேண்டுமென்று வேண்டினான்.

மேகவர்னன், அங்குள்ள மன்னர் யாவர்கட்கும் போற்றி செய்து, இரதமேறினவுடன் வெகு ஆடம்பரத்தோடு பலவித வாத்தியமுழங்க மேகவர்னனையும், சௌந்தரவல்லியையும் தன் அரண்மனைக்கழைத்துவந்து நல்விருந்திட்டு யாவருங் களிப்புற்றிருந்தனர்கள்.

ஜீவரத்தினபுரத்தரசனாகிய மதிவல்லப மகாராஜன், முகமலர்ச்சியுடன் தன்சபையிலுள்ள வேதவேதியர்களை நோக்கி, வேதப்பிராமணர்களே? இப்போது என் தவப்புத்திரியாகிய சௌபாக்கியவதி சௌந்தரவல்லிக்கும், நமது நாட்டை அப்பாபியாகிய அரக்கன் செய்த கொடுமையையகற்றி அக்கொடியோனையுந் தொம்சப்படுத்தி, அவனாவியையும் வெகுசுலபத்திற்போக்கி, நம்மெல்லோரையும் முன்போல் ஜீவித்து வாழவைத்தக் கனவல்லபனுக்கும் நன்முகூர்த்தம் நடத்திவைத்துக் கண்குளிரக் காணவேண்டியிருப்பதால், நன்னாளைக் குறிப்பிட்டுரைக்கவேண்டுமென்று இனியமொழியா லுரைத்தனன்.

மன்னன் மொழியைக்கேட்ட வேதப்பிராமணர்களி லொருபிராமணர் ஆ! நமது மன்னன் தாருட்டியமே தாருட்டியம்! 'நன்மைக்கடைப்பிடி' எனும் நீதிவாக்கின்படி நன்மைக்குன்றி நவநிதிக்குடைய நமது கோமானின் பெருமையே பெருமை! அ! என்னதயாளத்துவமான நற்குணத்தைப் பெற்றிருக்கின்றார் பார்த்தீர்களா நம்மவர்களே! (யாவரும் ஆம்-ஆம், அதற்கென்னதடை 'கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா' நமது மன்னர், தன் நாமதேயத்துக்குறிய நற்குணமிருப்பதால்தான் அதிபராக்கிரமமுள்ள மாப்பிள்ளை வந்தமைந்தனர். நற்குண நற்செய்கையையுடையோரை ஈசன் என்றுங் கைசோரவிடார். ஆனால் சிலதுகாலம் இப்பட்டினம் நிர்ஜீவியாயிருந்ததற்குக் காரணம் முன்வினையின் கூற்றென்று தீர்மானிக்கவேண்டுமென்றுரைத்தனர்கள்.)

வேதப்பிராமணத்தலைவர், இராஜராஜரே? மிக்க ஆசீர்வாதம். தாங்கள் பாணிக்கிரகண முகூர்த்தம் நடத்த நாளைக் குறிப்

பிடுகின்றேன் கேட்டருளுவீராக. இன்று 7-ம் நாள் சுக்கிரவாரம் காலை 8-மணிக்கு நக்ஷத்திரம், லக்னம், திதி, ஓரை, யோகம், கரணம், கழுத்துபொருத்தம், வயிற்றுபொருத்தம், திருத்தமாகிய விவாகச் சக்கிரத்தைக்கொண்டு சோதித்ததில் மிகநன்மையாயிருக்கின்றது. 'மாவுக்கேற்ற பணியாரம்.' 'பணியாரத்துக்கேற்ற வுருசி.' 'உருசிக்கேற்றத் தெம்பு' ஆகையால் தங்கள் மனம்போல் நாள் குறித்ததைப்பற்றி மிகுசந்தோஷமுறுகிறேன் என்றுரைத்தனர்.

மன்னன், அப்படியா! சரி-சரி! மிகு ஆனந்தங்கொண்டேன். மந்திரிமார்களே? மணத்துக்காக நன்னாளைக் குறிப்பிட்ட இவ்வேதப்பிராமணர்கட்கு வேண்டியசன்மானங்கொடுத்தனுப்புவீர்கள் என்று கட்டளையிட்டனர். (சயல்) உடனே மந்திரிமார்களை நோக்கி அறிவிலுயர்ந்த அமச்சர்களே? யான் கொண்டிருக்குஞ் சந்தோஷத்தைப்போல் நீங்களுமடைந்திருப்பீர்களென்று நம்புகின்றேன். ஆகையால் இனி தாமதிக்காமல் இவ்வாறுநாட்களுக்குள் சிற்பிகளை வரவழைத்து மணவறைக்காக சுழற்பந்தல் யாவருங்கண்டு வியப்புறும்வாறு அமைக்கச்செய்யவேண்டும். மணத்துக்காகவேண்டுஞ் சாமான்கள் ஒன்றுங் குறைவுபடாமற் சித்தப்படுத்தவேண்டும். நமது நகர் முழுதும் பச்சைப்பந்தல் போட்டுவைக்கவேண்டும். வரும் அரசர்களிருக்க விடுதி தயார்செய்து வைக்கவேண்டும். தூதரிடம் இங்கு நடக்கப்போகும் திருமணத்தைக்குறித்துப் பலதேசத்து மன்னர்கட்குக் கிள்ளாக்குக் கொடுத்தனுப்பவேண்டும். நமது நகர் வீதிமுழுதும் பொழுதுவிடியும்வரையில் நிலமத்தாப்புப் போடச்செய்யவேண்டுமென்று கட்டளையிட்டனன்.

அக்கட்டளையை மந்திரிமார்கள் அதியூக்கத்துடன் கவனித்துப் பலதேயத்துச் சிற்பிகளை வரவழைத்து, அய்யா சிற்பசாஸ்திரிமார்களே? வருகிற சுக்கிரவாரதினம் நமது மன்னர் புத்திரிக்குத் திருமண வைபோகம் நடத்தப்போகிறபடியால், நீங்களெல்லீரும் ஒன்றுகூடி ஆலோசித்து மணவறைப்பந்தலைச் சுழற்பந்தற் போடவேண்டும். அப்பந்தலின் நான்குபக்கங்களிலும் பலவித ஒவியந்தீட்டிய பதுமைகள் கட்டவேண்டும். அப்பதுமைகள் ஒன்றுக்கொன்று வார்த்தையாடுவதுபோலும், சில

மணவரைமேடைச் சிறப்பு.

இப்பால் கலியாணமேடையில் சில மாங்கல்யப் பெண்கள் அகமகிழுடன் சாலுங்கரகம், முளைப்பாலிகை, தழல்வளர்க்கும் மேடைமீது அருமையுள்ள மாக்கோலந் தீட்டி, குடவிளக்கு, அரசு, ஆல், முருக்கு, இம் மூன்றுஞ்சேர்ந்து அரசாணிக்கால் நாட்டுவதர்க்குத் தயார்செய்து, உடனே மாவிலை, தருப்பை, அறுகு, மஞ்சள், குங்குமம், வாசனைபொருந்திய சந்தனம், தாம்பூலம், வாழைப்பழம், தேங்காய், புட்பம், வெல்லம், அட்சதை, சாம்பிராணி, சூடம், சமித்து, நெய், பாலோடுதயிரும், பயரோடு பொரியும், குழவியோடுகூட அமிக்கு மஞ்சள்பூசி ஆங்காங்கு குங்குமமிட்டு ஒன்றுகுறைவுபடாமல் தயார்செய்து வைத்தனர்கள்.

மணக்கோலச் சிறப்பு.

சிடர்களே? இனித் திருவீதி மணக்கோலச்சிறப்பைக்கூறுவேன். மன்னனும் மந்திரிமார்களும் கலியாணப்பந்தலின் வைபோகத்தையும், வீதிகளெங்கும் அமைத்திருக்குஞ் சிறப்பையுங் கண்டு பேரானந்தங்கொண்டு மன்னன், ஏ! மந்திரிமார்களே? இப்போது நமது நகரைக்காணில் இந்திரலோகத்தையொற்றிருப்பதால், மிகு ஆனந்தங்கொண்டேன், எனதிஷ்டம்போல் இந்நகரை யலங்கிரதஞ் செய்துவைத்த உங்கள் திறத்தைப்பற்றி என்னென்று புகழ்வேன்! ஆ! என்னவிந்தையான சிறப்புப்பெற்றேன்! வாழ்வென்றால் இவ்வித வைபோகத்தைக் கண்டுகளிப்பதே பேரானந்தவாழ்வு.

மந்திரிமார்களே? நாளையதினம் முகூர்த்தநாளாகையால், இனிதாமதிக்காமல் சூரதீர பராக்கிரமம்பொருந்திய நமது மாப்பிள்ளையை அதிவிமரிசையாய்ச் சிங்காரித்து, நமது பட்டினத்து யானைமீதேற்றி வீதிக்கோலம் வரச்செய்வீர்கள் என்று கட்டளையிட்டவுடனே, மந்திரிமார்கள் மாப்பிள்ளைக்குப் பொங்குந்தடத்துப் புதிதநந்நீரைத் தங்கக்குடத்திலெடுத்துவந்து, சங்கையிலாமல் சாஸ்திரவிதிப்படி நீராட்டி வெண்பட்டாடையால் ஈரந்துவட்டி சிகையைச்சீவிச் சிணுக்கறுத்து, சிலபணிபுனைந்து, தேமலரணிந்து, நெற்றியில் திருநீறேடுங்கூடி திலர்தமிட்டு, குண்டல்மாட்டி பச்சைக்கல் முருகிட்டு, முத்தார முதலிய பத்

தாரமும் விஸ்தாரமாய் பலவித பதக்கமுந்தரித்து, திருமுடி யொருந்தி, தங்கச் சஞ்சந் தரித்து, பாஜிபந்து இருகரத்திலும் கட்டி, நாககங்கணங் கடககங்கணையாழி பூட்டி, அரைஞாண் வீரகண்டை முதலியவைகளையுந் தரித்து, திவ்வியமஞ்சள்பட்டு உடுக்கச்செய்து, பட்டத்துயானைமீதேற்றி, இருபுரமும் வெண் சாமரம்வீச, சந்திரவட்டக்கொடை பிடிக்க, இருபக்கமும் மத் தளதாளமேளத்துடன் நாட்டிய மாதர்கள் நடிக்க, கட்டியக் காரர்கள் மாப்பிள்ளையின் வீரப்பிரதாபத்தை யெடுத்துக்கூறி வர, பலதேயத்தரசர்களும் அந்நகர்குடிகள் யாவரும் புகழ்ந்து கொண்டாடிவர, எங்குகாண்கினும் காஸ்லைட்டு வெளிச்சமும்; நிலைமத்தாப்பின் பிரகாசமும் எவ்வாறிருந்ததெனில், (சந்திரன் ஒன்றாயிருக்கினும் அப்பிரகாசத்தைக் காணில் ஆயிரஞ்சந்திரர் கள் ஒன்றுகூடி பிரகாசத்தைதந்ததுபோ லிருந்தது) நகர்புரத் தில் பலவித பாணவேடிக்கைகள் நடந்தேறிவரும் சமயத்தில் மணப்பிள்ளையாகிய மேகவர்னனுக்குக் கிஞ்சிற்று மனவருத்த முண்டாயிற்று.

சிடர்களே? ஒருவன் எவ்விதத் துன்மார்க்கனு யிருக்கி னும் அதிக துன்பமுறுங்காலத்திலும், நல்வினைவினல் சுகமுறுங் காலத்திலும், தன் தாய்தந்தையர்கள் உரைத்த நீதிவாக்கியங் களை புன்னியுன்னித் துக்கிக்காமலிரான். அதுபோல், நிஷ்கள ங்கமற்ற மேகவர்னன், தானடைந்துவரும் ஏகபோகபாக்கியங் களைச் சற்றுங் கவனியாமல், தனது நாட்டின்கண்ணே இல்லா தவைத யுண்டென்று வீணேமதித்து, மதிமயக்கால் மானமிழந்து யாவரையும் விடுத்துப் பாவியைப்போ லிங்குற்று, பராசத்தியி னருளால் சகல பாக்கியமுமடைந்து யாவராலும் புகழ்கொண் டாட இவ்வீதிக்கோலத்துடன் மணத்தை முடித்துக்கொள்வதி னல் வரும்சந்தோஷத்தை யொன்றுங் காணப்போகிறதில்லை யல்லவா. தாய்தந்தை தங்கை இவர்கள் கண்காணித்து மகிழா க்கலியாணம் ஓர் கலியாணமா!

ஆ! என்ன யன்புடன் பெற்றுவளர்த்து ஆதரித்துவந்த தா ய்தந்தையர்களே! அன்று அனியாயவழியிற் புத்தியைச் செல விடுத்து வீண்மயக்கத்தால் மதிமயங்கி உங்கள் மனதுக்கும் அதிவருத்தத்தையும் அவமானத்தையும் உண்டாகும்படியே செய்து

வந்த இப்பாவியை நினைந்து இன்னமும் எவ்வளவு துக்கப்படுகின்றீர்களோ! அல்லது இவ்வளவு அவமானக்கேட்டை விளைவித்துச் சென்ற கொடியோனைச் சற்றும் நினைக்கொணுதென்று திடச்சித்தஞ் செய்துகொண்டீர்களோ! அய்யோ! உங்கண்மீது சற்றுங் குற்றமில்லையே. யான் செய்துவிட்டுவந்த கொடியசெய்கையால் இங்கு உங்கள் பாசத்தை யுன்னி மெய்மறந்து வாடி தவிக்கின்றேன். ஆ! எனதன்பார்ந்த சகோதரீ! என்மீதிருக்கும் அன்பு உனக்கு அளவுகடந்து மெய்மறந்து சிற்றுண்டியையுமருந்தாமல் நீ கற்றிருக்கும் சன்மார்க்க நெறியை ஆசானுரைப்பதுபோலுரைத்துவருவையே! எனதன்புக்கினிய தங்கா! இப்போது எனக்குநடந்தேறிவரும் வைபவத்தை நீயும் எனது பெற்றோர்களும் இங்ஙனம் இருப்பீர்களாகில் எவ்வளவு மகிழ்ச்சியடைவீர்கள். ஆ! விதியே! என் நாட்டோரையும், பெற்றோரையும், உடன்பிறந்த அன்புள்ள சகோதரியையும், இன்னும் மற்றுமுள்ளாரையும் கண்டுகளிப்புறச் செய்யாமல் எனைத் தன்னந் தனியேயாக்கி இப்படியும் துக்கப்படச்செய்யலாகுமா! என்று பலவாறு வருந்திவருஞ் சமையத்தில், அந்நாட்டுக்கு வந்து ஓர் மூதறியாட்டியைக் கண்டு அவளாதரவால் அன்னம்புசித்துப் பிறகு அந்நகரின் உலாவைத் தெரிவித்தப் புண்ணியவதியைக்கண்டுவிட்டனன்.

அப்போது, தன்வருத்தமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீக்கிப் பேரானந்தங்கொண்டு இப் புண்ணியவதியின் அன்னம் அன்று கிடைக்காவிடில் அன்னக்களை தாங்கி எக்கதியாயிருப்போமோ, ‘அன்னமயம் பிராணமயம்’ இது சோற்றிலெடுத்தச் சுவரல்லவா, நாம் இவ் வம்மணிக்கு என்றும் பூஜிதை செய்யவேண்டும் என்று தீர்க்க அன்புடன் யோசித்துத் தன்னருகில் வரும் மந்திரிமார்களி லொருவரிடம் அய்யா மதிமந்திரியாரே? அதோ கண்ணை யிமைவிடாமல் வாயுவின் சம்பந்தத்தால் சிமிட்டிக்கொண்டே வேடிக்கைப் பார்த்துநிற்கும் பெருமாட்டியை வெகு மரியாதையுடன் நம தரண்மனைக்குக் கொண்டுசேர்ப்பீர். அப்புண்ணியவதி யெனக் குயிர்பிச்சைதந்து ஆதரித்தவள். அவ்வம்மணியின் சேதியைப் பின்னிட்டுரைப்பேனென்று கட்டளையிட்டனன்.

உடனே மதிமந்திரி! அக்கட்டளையைச் சிரசிற்றாங்கினது போல் அப்பெருமாட்டியினிடஞ்சென்று தாயே? இதோவீதிக் கோலம் வருகின்ற மணப்பிள்ளைக்கு ஏதோ ஒருசமயம் பெரும் உதவி செய்திராம். அந்நன்றிக்கு உமக் கேதும்செயவோ உம்மை மன்னர் அரண்மனைக்கு இட்டுச்செல்ல வுத்திரவு ஆயிற்று. ஆனதால் தாயே? யான் இன்னு மனேக காரியங்கள் பார்க்க வேண்டியிருப்பதால், தாங்கள் எனைப் பின்தொடர்ந்து வர வேண்டுமென்று வெகு மரியாதையுட னழைத்தனன்.

கிழவி, அய்யா யானோ ஒண்டிமரம், அனாதி, கூலிக்குப் புஷ்பங்கட்டி ஜீவித்துவருபவள். யான் இம்மாப்பிள்ளைக்கு யாதொருவுதவி யெவ்விதக் காரணத்தானுஞ் செய்தறியேனே! இவர் என் சிறுகுடிசைக்கு என்னகாரணத்தைப்பற்றி வந்தார். ஈதெல்லாம் விண்மயக்கமாய்த் தோற்றுகின்றதே! அய்யோ! இந்த ஒண்ணாறை வருட காலமாக அப்பாபி அரக்கனால் காலை தொட்டு மாலைவரையில் இவ்வூராருடன் யானும் பிரேதம்போ லிருந்தேன். இப்போது யாவரும் உயிர்பெற்றிருப்பதுபோல் யானும் உயிருடனெழுந்துவாழ்கின்றேன். அ! அ! சரி, சரி, இப்போது ஞாபகத்துக்கு வந்துவிட்டது. நமது குடிசையை மதி ந்து ஓர் வாரத்துக்கு முந்திவந்து நம்மைக்கண்டு அன்னங்கேட்டுப் புசித்தச்சிலர் இப்போது மணப்பிள்ளைக் கோலத்துடன் செல்லுபவர்தான் இவர் என்று என் சிற்றறிவில் தட்டப்படுகின்றது. அ! இவர் என்னநன்றி குன்றாச்செல்வந்திரர்! சரி-சரி, இனி நமக்கு யாதொருதீங்கும் வாராதென்று தீர்மானித்து மந்திரியுடன் அரண்மனைக்குச்சென்று இருந்தனள்.

அப்பா சிட்டர்களே? இனி மேகவர்னனாகிய மணப்பிள்ளையைப்பற்றிக் கூறுகின்றேன் கவனிப்பீர்களாக. மேற்கூறியபல விதவைபோகத்துடன் ஒருவீதியும்விடாமல் வீதிக்கோலம்வந்து கடைசியாக மன்ன னரண்மனைவாயலில் யானை நிற்கக்கண்டச் சிலசீமாட்டிகள் நானாவித ஆலத்திகளைக்கொணர்ந்து மாப்பிள்ளைக்குத் திருஷ்டிகழித்துக் கணிகைமாதர்கள் லாலி மங்களம் பாடிமுடிந்தபின், மன்னன் மாப்பிள்ளையைக் கைலாகுகொடுத்து மெத்தெனக் கீழிறக்கிக் கலியாண மண்டபத்துக்கு இட்டுச் சென்று யாவருக்கும் சந்தனம் புஷ்பம் செண்டு தாம்பூலமீய்ந்.

நுடனே பலமன்னர்கட்கும் அரியம்பெரிய பிரபுக்கட்கும், மற்று முள்ள யாவர்கட்கும் மணவிருந்து செய்ய யாவரும் உண்டுகளி த்து அவரவர் விடுதிக்குச்சென்று நித்திரை போந்தனர்கள். இனி நடந்தேறிய வைபவத்தைக் கவனிப்பீர்கள்.

பிறகு மாப்பிள்ளையும் மந்திரிமார்களும் விருந்துண்டு தங் கள் தங்கள் விடுதிக்குச்சென்று துயிலுற்றனர்கள் (அச்சமயம் மணி பதினொன்றாயிற்றென் றறிவீர்கள்.) அன்றிரவு கழிந்து பொழுதுவிடிந்த நான்குமணிக்கு வேதவேதியர்கள் திடுக்கென் றெழுந்து, காலைக்கடனை முடித்துக்கொண்டு, நதிக்குச்சென்று நீராடி, நீறணிந்து காயத்திரிமந்திரத்தைச் செபித்து, யாவரும் மணவறைப்பந்தலுக்கு வரக்கண்ட மன்னன், மாப்பிள்ளைக்குப் பன்னீரால் ஸ்நானஞ்செய்து ஈரமுலர்த்தி, நீறணிந்து, பட்டு மஞ்சள் உடுக்கவும், வாசனைத் திரவியங்களும் பல ஆபரணங்க ளுந் தரிக்கச்செய்து பூமாலையுடன் மாப்பிள்ளைத்தோழர் துணை ப்பற்றி நல்லலக்கினத்தில் ஆறுகாற்பீடத்தின்மீ தமரச்செய்து உடனே தன்புத்திரியை அதி சிறப்புடன் அழைத்துவரும்படி உத்திரவு அளித்தனன்.

தோழிப்பெண்கள் தங்கள் பெண்ணரசிக்குத்தகுந்த மாப் பிள்ளை வாய்த்ததைப்பற்றி மிகு கொண்டாட்டத்துடன் பன் னீர்கலந்த மஞ்சள்நீரால் ஸ்நானஞ்செய்வித்து, ஈரந்துவட்டித்த லைமயிரைச் சிக்கறுத்துப் பின்னலிட்டு, சிரசில் சந்திரபிறை சூரியபிறை, கிட்டி, சடைநாகம், ஜடைபில்லை, பின்னலுக்குப்ப ட்டுரோஜாபுஷ்பமும் வாசனைபொருந்தியமல்லிப்புஷ்பத்தாலல ங்கரித்து, முகஜம்மல், காதுக்குக்கம்மல், ஜிமிக்கை, பச்சைக் கல்முருகு, இன்னும் மற்றுமுள்ள ஆபரணங்களைப்பூட்டி, நெற் றிக்குநீறணிந்து, யாவருங்கண்டு வியப்புறத் தனுக்குப் பொட் டிட்டு, கழுத்துக்கு நவரத்தினமிழைத்தக் கிள்ளட்டிகை, மார் புக்குப் பலவித பூஷணமாலைகளும், இருகரத்துக்கும் வங்கி, காப்பு, கொலுசு, அவல்வளையல், இரத்தினப்பாட்டில், சிற் றிடைபிடிப்புக்கு நாகபூஷண ஒட்டியாணம், இருகாலுக்கும் தண்டை, கொலுசு, பாடகம், பத்துவிரலுக்கும் பலவிதநாணய முள்ள மோதிரங்கள், கைவிரலுக்குக் கல்லிழைத்த மோதிரங் கள்பூட்டி, பூமாலைசூட்டி, வாசனைத்திரவியங்களைப்பூசி, அன்ன

ந்தைப்பழிக்கும் நடையையொற்ற நடையுடன் மெத்தென நடத்திவந்து மணப்பந்தலை அலம்வரச்செய்து மாப்பிள்ளை வலது பக்கம் இருக்கவைத்தனர்கள்.

இவ்விதக் கோலத்துடன்வந்து ஆசனப் பீடத்திலமர்ந்த மணப்பெண்ணையையும், மாப்பிள்ளையையும் அங்கிருந்த வேதப் பிராமணர்கள் யாவருங்கூடி பூமாரிப்பொழிந்தது அவ்விருவரையும் மூடிற்றென்றால் அம் மணவரைப் பந்தலிலிருந்த பிராமணர்களின் கூட்டத்தின் தொகையை எண்ணெடுத்துரைக்கக் கூடாமையால் நீங்களே அதனை விசாலப்படுத்தித் தெரிந்து கொள்ளவேண்டும்.

உடனே வேதப்பிராமணர்கள் யாவரும் எழுந்து வேத நான்கும்மொழிந்து, மன்மதனும்வெட்கித் தலைசாய்க்கும் அழகுடையமேகவர்னனெனும்நாமம்படைத்தமாப்பிள்ளையையும், இரம்பையுநாணவொற்ற சௌந்திரவல்லியெனும் மணப்பெண்ணையும் மந்திராக்ஷதையுடன் வாழ்த்தி, அவரவர் ஆசனத்தின்மீதமர்ந்து, நடவிளக்கேற்றி கணபதியைப்பூசித்து, அரைசாணிக்கால்நாட்டிநந்தாதீபமிட்டு, மறைவிதிமுடித்து, பிரமச்சாரி விரதங்களைந்து வைதீகச்சடங்கு வழியைக்காட்டிக் கங்கணங்கட்டிக் கால்விரலுக்கு மெட்டிபூட்டி, மேற்பட்டுடையை விரித்துமேன்மூடி, இனிக்கும் விதிமுறைமந்திரத்தை மாப்பிள்ளைசெவியில் விளம்படவுரைத்து, தேங்காய், வாழைப்பழம், புஷ்பம், அக்ஷதை, மஞ்சள், குங்குமம், அடைக்காய், கண்ணாடி, சந்தனம், திருமாங்கலியமிவைகளெல்லாம் நவரத்தினமிழைத்தப் பொற்றாம்பாளத்திலிட்டு, நற்றவர், சுற்றவர்பலரும், உற்றார் பெற்றோருறவினர் எவரும் இருகரத்தாலும் பரிசித்து இரு கண்களிலும் பக்தியுடன் ஒற்றிக்கொண்டு, இஷ்டதெய்வப் பிரார்த்தனையுடன் மன்னனும் தேவியும் மனதில் யாதுகளங்கமில்லாமல் பஞ்சபூத சாக்ஷியாகத் தங்கள் புத்திரியை மாப்பிள்ளைக்குத் தத்தஞ்செய்துகொடுத்தனர்கள்.

மேகவர்னன்மாங்கல்யந் தரித்தல்.

சீடர்களே! அவ்வாறு தத்தஞ்செய்தபின், பெண்ணும்பிள்ளையும் வல இடமாக இருக்கவைத்து, ஓமவிதி நடத்தி, அக்கினியிற் பொரியிறைத்து, பூர்ணாகுதி கொடுத்து, பிரதக்ஷணம்

வந்து மாலைமாற்றி, மறைவாணரைப்போற்றி, பெண்ணும்பிள்ளையும்கண்டு மங்களாசனங்கொண்டு, ஒருவருக்கொருவர் விரல் மாட்டி, நிறைகுடம், வெண்சாமரம், கண்ணாடி, யானைக்குடாரி, மணிமுரசு, விளக்கு, விருதுக்கொடி, இணைக்கால் இவைகளாகிய அட்டமங்கலமெடுப்பித்து, அம்மிமிதித்து, அருந்ததியைத்தரிசித்துப்பூசித்து, அரசாணிக்காலையும், ஆயிரவிளக்கின் ஜோதியையொற்றக் குடவிளக்கை நைவேத்தியத்துடன் தொழுது, மற்றப்பேர்களையும் பணிந்து, திருவணைய மாதரெடுத்துவராநின்ற திருவிளக்கெடுத்துப் பெண்ணின்பின்புறக்கழுத்திற் காட்ட மாப்பிள்ளை திருமங்கிலியத்தையெடுத்து மூன்று பிரமமுடியிட்டு, திருநீற்றையும் அம்முடிமீ தழுத்தச் செய்தனர்கள் வேதப்பிராமணர்கள்.

அவ்வாறு இராஜவிவாகச்சடங்கின்வண்ணப்படி முடித்து, சேஷ அரிசி யாவரும் இட்டு, ஆசிர்வதிக்கப் பெற்று, உடனே மன்னன் யாவருக்கும் அதிவணக்கத்துடன் சந்தன-புஷ்பம்-தாம்பூலம்-சுகந்த நிறைந்த பந்திச்செண்டும் ஆரமும்கொடுத்து யாவருக்கும் வந்தனந்தந்து களித்தனன். அவ்விதத் திருமணச்சிறப்பைக்கண்டு புகழ்ந்து கொண்டாடினதன்னியில், சுழற்பந்தலின் பெருமையைக் கண்ட ஒவ்வொருவரும் சிற்பிகளின் வித்தைசாதுரியத்தினருமையை வாயாரப்புகழ்ந்தார்கள். சிலர் பிள்ளை யழகுக்கேற்றப் பெண் வாய்க்கவில்லையென்று கின்சிற்று மனஞ் சலித்தார்கள்.

பிறகு, மன்னன் பிள்ளையையும் பெண்ணையும் எழுப்பச் செய்து பந்தி பந்தியாய் வரிசை வரிசையாய் மன்னர்கள் பந்தி வேறு, இன்னும் மற்றுமுள்ள பெரியோர்கள் பந்தி பிரித்து, தலைவாழையிலையிற் பலவித பலகாரப் பழங்களிட்டு அறுசுவையுடன் அன்னம்படைத்து ஆயாசந்திரப் பாயசமும் வார்த்து யாவரும் மெச்சத்தக்க விருந்திட்டனன்.

அப்போது கலியாணச்சடங்கு முடிந்தவுடன் மந்திரிமார்கள் வேதப்பிராமணர்கட்கும், மற்றுமுள்ள புரோகிதர்கட்கும் பூரிமுதலிய தானங்கள் அமோகமாகக் கொடுக்க, யாவருங் கொண்டாடிச் சென்றபின், ஏழைகட்கும் பரதேசிகட்கும் வஸ்திரதானங்கொடுத்து, அன்னமும் படைத்து ஆதரித்தனர்.

மேகவர்னனுக்குத் திருமுடிச் சூட்டல்.

அவ்விதமாக ஓர்மாதம்வரையில் சகலருக்கும் முக்கனி பலகாரத்துடன் விருந்துநடாத்தி, அன்றுடம் மாலை ஆறுமணி முதல் ஒன்பதுமணிவரையில் ஆடல்பாடல்முதலியக் கச்சேரிகளும் நடத்தி, முப்பத்தோராம்நாள் இரவு பெண்ணையும் பிள்ளையையும் வெகு விமரிசையுடன் சிங்காரித்து ஓர்பள்ளியறையில் ஒன்றுகலந்து மகிழும்படிச்செய்தனன். (இதனைப் பலதான முகூர்த்தமென்றுரைப்பது முண்டு.) பிறகு, முப்பத்து இரண்டாம்காலையில் மாப்பிள்ளையை நன் னீராடச்செய்து, நீறணிந்து அரசர்உடுக்கும் உடுப்பையுடுத்தி, நற்சுப முகூர்த்தத்தில் தனது சிம்மாதனத்தின்மீ தமரச்செய்து நவமணிகளிழைத்தத் தன் திருமுடியைச்சூட்டி, தனது செங்கோலையுமீய்ந்தவுடன், அங்கிருந்த யாவரும் ஜெயா விஜீபவாவென்று பலதரம் வாழ்த்தி மாமலரைச் சொரிந்தனர்கள்.

அப்போது மன்னன் பேரானந்தமுற்று சபையிலிருப்போரைக்கண்டு, ஏ! சபையோர்களே யான் அன்று வாக்களித்தபடி எனதுநாட்டை எனதருமை மருகருக்குத் தந்து யாவருங்கொண்டாடும்படி அரசராக்கி வைத்துவிட்டேன். இனி இந்நாட்டைப்பற்றி யாதொரு சம்பந்தமுமில்லை. இவரே இந்நாட்டுக்கரசர். யாவரும் இவரைக்கீழ்ப்படிந்து நீங்கள் நடப்பதே பெருங்கீர்த்தி, அன்றியில் யானும் என்தேவியும் மரவுரிதரித்துக் கானகம்புக்கித் தவமியற்றி யீசனருளைப்பெற்று வாழச் செல்கின்றோம். ஒருவருக்குத் தத்தஞ்செய்த நாட்டில் ஓர் நிமிஷமேனுந் தங்கப்படாதென்று மநுநீதி யுரைப்பதால் இனித் தங்கலாகாதென் றுரைத்து மன்னனும் தேவியு மரவுரிதரித்து மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் இல்லறதருமங்களையுரைத்து, அன்புடன் ஆசீர்வதித்துக் கானகம்புக்கினர்கள்.

பிறகு மேகவர்னமன்னன் தன் மணத்துக்காகவந்த இராஜராஜர்களுக்கும், பிறகு மற்றுமுள்ளோர்கட்கும் நல் விருந்தளித்தனன். யாவரும் உண்டுகளித்து மன்னனைப்புகழ்ந்து அவரவர் நாடுசென்று சுகமுடன் வாழ்ந்துவந்தனர்கள்.

மேகவர்னராஜன் சிம்மாதனமீதேறி யமர்ந்தவுடன் மதிமந்திரியையழைத்து அய்யா! அன்று விதிக்கோலத்தினம் ஓர்

மூதறியாட்டியை அரண்மனைக்குக் கொணர்ந்து சேர்க்கும்படிக்குக் கட்டளையிட்டேனல்லவா, அப்பெருமாட்டியை இங்கு அழைத்துவரச் செய்யவேண்டும் என்றுரைத்தவுடனே மதிமந்திரிச்சென்று அப் புண்ணியவதியைக்கண்டு, அம்மா தாயே? நமதிளவசர் உமைப்பார்க்க விரும்புகிறார், ஆனதால் சிக்கிரம் வரவேண்டுமென் றழைத்தனன்.

கிழவி, ஆ! அப்படியா! இதோ வருகிறேனென்று மதிமந்திரி பின்னுகச்சபைக்குவந்து சேர்ந்தனள். அப்போது மேகவர்னராஜன் கண்டு ஆனந்தங்கொண்டு மந்திரிமார்களே? சபையோர்களே? சற்று கவனிப்பீர்கள். யான் ஓர்மன்னன் புதல்வன், என் விதிப்பயனால் யாவரையும் விடுத்து டிகம்பரியாய் என் மனதுக்கொற்றவாறு காடு வனம்வனாந்திரங்கடந்து மாலைப்பொழுது சமீபத்தில் இந்நகருக்குவந்தேன். வீதிவீதியாய்த்திரிந்தேன். எவ்வீடுந் தாள்பூட்டியிருந்தன. ஒருவரும் நடமாடக்கண்டேனில்லை. இந்நகரிருக்குங் கோலத்தைக்கண்டு மனவியாகூலங்கொண்டேன். அப்போது தீபம்வைக்கும் வேளையாயிருந்தது. அச்சமயம் இவ்வம்மணியார் வீடுதிறந்திருக்க உள் நுழைந்து பார்க்குமளவில் இந்தத்தாய் தீபமேற்றி சமையல் வேலையிலிருந்தனர். அங்கிருந்தபடியே வீதியைப்பார்த்தேன். பலஜெனங்கள் வருவார் போவாரைக்கண்டேன்.

அய்யா? இன்னுங் கவனியுங்கள். அப்போது இம்மன்னனரண்மனையிலடிக்கும் நகார்சத்தங்கேட்டது. இதற்குள் எனக்கு அன்னக்களைவந்துகப்பியது. சற்றுநேரஞ்சென்று எழுந்து காதடைப்புடன் இப்புண்ணியவதியை யழைத்து அம்மாதாயே? கொஞ்சிற்று அன்னங்கிடைக்குமா வென்று கேட்டேன். பெற்றதாயைப்போல் அன்புடன் அன்னம்படைத்தனர். உண்டு சற்று இளைப்பாறி இந்நகரின் சேதியைக் கேட்டேன். வெகு துக்கத்துடன் துட்ட அரக்கனால்நேரிட்ட துன்பத்தை ஆதியோடந்தமாய்க் கூறினர். உடனே என்மனங் கொதிப்பேறி எனக்குமாதுலராகிய இம்மன்னரைவந்து கண்டேன். அதுமுதல் என்னால் நடந்தேறிய நன்மை தின்மைகளை நீங்களே கண்டிருக்கிறீர்களல்லவா. அதைக் கூறுவதிற் பிரயோசனமில்லை. இதுநிற்க, அன்று. இவ்வம்மணி அன்னங்கொடாதிருந்தால் என்கெதி

யென்றருமோ எனக்கே தெரியாது அல்லவா, இந்நகரின்விபத்
தைக் கூறிவிட்டால் இவ்வித வைபோகத்தை யானடையக்
கூடுமோ! என துயிரையும் பிழைக்கச் செய்து, இச்சம்பத்தையு
மடையச் செய்த இத்தாயிக்கு என்னவுதவி செய்கில் ஒக்குமெ
ன்று என்சிற்றறிவிற் படவில்லையே. நீங்கள் தான் யோசித்து
ரைக்க வேண்டுமென்று கட்டளையிட்டனன்.

அவைகளைக் கேட்ட மந்திரிமார்களில் ஒருவர் ஏ! பிரபூ?
அன்று தாங்கள் அன்னமில்லாமல் இவ்வம்மணியார் வீடுபுக்கிப்
பசியை யாற்றிக் கொண்டதற்கும், இந்நாட்டின் விபத்தைத்
தங்களிடம் தெரிவித்ததின் மீது அவ்வரக்கனைக் கொன்று இந்
நகரிலுள்ள யாவருக்கும் உயிர்பிச்சைத்தந்து தாங்கள் யாவரா
லும் புகழ்கொண்டாடும்படி மன்னரான பெருமையினாலும்,
இப்புண்ணிய வதியைத் தாயைப்போல் பாதுகாப்பது பெருங்
கீர்த்தியென்றுரைத்த வண்ணம், அப்பெரியாளைத் தன் மனைவி
யுடன் உண்டுகளிக்கவும், தான் அவ்வம்மணியை அன்னையைப்
பார்க்கிலும் மிகு அன்புடன் பாதுகாத்து வந்தனன்.

பிறகு, மேகவர்ணராஜன் மறுநாள் தொடங்கி சிம்மாசன
மீதுற்று, மநுநீதிப்படி குடிகளிடத்தில் ஆறில் ஒருகடமை
வாங்கி யாதொரு வழுவின்றி அரசுபுரிந்து வந்தனன். அப்போ
து வருடம் தசமாயிற்று. அவனுக்குப் புத்திரர்கள் நான்கும்,
பெண்ணொன்றும் பிறந்து வெகுமகிழ்ச்சியுடன் வளரப்பெற்று
வந்தார்கள். அவ்வாறிருக்க, மேகவர்ணராஜன் ஓர் தினம் தன்
தாய்தந்தையரை நினைந்து வெகுதுக்கமடைந்து, ஆ! தாய்தந்
தையர்களே! அய்யோ! அனியாயமாய் ஆணைப் பெண்ணெ
ன்று மதிமயக்கால் யான் உங்களைவருந்த, எனதிஷ்டம்போல்
நீங்கள் செய்து முடித்து, எங்களிருவரையும் பள்ளியறைக்கு
ளனுப்பப் பெண்வேடந்தரித்திருப்பவனை யின்றென்றறிந்து
இனி இங்கு தங்குவோமாகில் நமது மானம் வீணில் அழிந்து
பலருமறிந்து சிரிப்பாசிரித்து கேலிசெய்வார்களென்று நினைத்
துப் பரதேசியா யிங்குற்றுப் பராசக்தியினருளாற் சுகமேயிரு
க்கிறேன்.

அப்படிக்குப் பாவியாகிய யானிங்குற்றுப் பராசக்தியின்
கிருபையால் இந்நகருக் கரசனாகியும், பெண்டு பிள்ளைகளுடன்

சவுக்கியமாகவே யிருக்கின்றேன். பெத்தமனம் பித்து, பிள்ளை மனங் கல்லென்பதுபோல், எனைக் காணமல் எக்கதியானீர்களோ! ஏ! மதியே! இப்படியும் எனைவண்படுத்தினையல்லவா! அன்று தசரதர்வாக்குப்படி ஸ்ரீராமர் கானகஞ்சென்றதையறிந்திருந்தும், புத்திரசோகத்தால் அம்மன்னர் மாண்டனரென்று கேட்டிருப்பதுபோல், என்மீது வைத்த அன்பின் மிகுதியால், யான் தங்களைக் காணமலும், நடந்தவாற்றை யுரைக்காமலும் வந்துவிட்டதைப் பற்றிச் சோகமுற்று ஒருவேளை மாண்டுவிட்டீர்களோ என்னமோ யாதுமறியேன்! ஆ! எப்பாடு பட்டு எனைப்பெற்றெடுத்தீர்கள்! இப்படியும் செய்யத் துணிந்தார்க்குக் காரணம் என்மதிமயக்கே.

அய்யோ! நாம் நாட்டைவிட்டுவந்து வருடம் பத்தாய்விட்டதே. நமது தங்கை நம்மீது அண்ணனெனும் ஆசாபாசத்தை யெவ்வளவுவைத்திருந்தனள். நாம் துஷ்டமதியால் வந்துவிட்ட பிறகு எவ்வளவு துக்கத்தை யடைந்தனளோ! சகோதரபாசம் வெகுதுக்கத்தைத்தருமே! ஆ! சகோதரீ! நீயாரைக்கணவனுகக்கொண்டனையோ! நீ சுகத்துடன் மக்களைப்பெற்று மகிழ்வுடனிருப்ப தங்கூடத் தெரியவில்லையே, சரி, சரி, நாமிங்கிருந்து தயங்குவதிற் பிரயோசனமில்லை. நாம் ஒரு அன்னியனைப்போல் நமதுதந்தை நாட்டுக்குச் சென்று, யாவையு மறிவதே யுத்தமமென்று தீர்மானித்து, மந்திரிகளிடத்தில் தனதரசை யொப்பிவித்து, இன்னும் பத்துதினத்தில் வருவதாகத் தன்மனைவிக்குத் தெரிவித்து, இரதமேறி பிரயாணப்பட்டான்.

சிட்டர்களே! முதன்மந்திரிபுதல்வன் சந்திரகாந்தனுக்கும், புவனேந்திர மகாராஜன் புதல்வி காந்தாமணிக்கும் விவாக நடந்து அவர்களிருவரும் களிப்புற்று இன்பசுகத்தை யனுபவித்து வந்ததால், ஓர் ஆண்குழந்தைபிறந்து சுந்தரவர்ணன் எனும் நாமஞ் சூட்டப்பெற்று மன்னன்வீட்டில் ஐந்துவயதுவரையில் வளர்ந்துவந்தானென்று முன்னங் கூறினேனல்லவா, அவனைச் சற்றுக் கவனிப்போம்.

அச்சுந்தரவர்னனுக்கு வயது ஐந்தானதைத்தெரிந்த மன்னன் 'திருநெறிச்செந்தமிழ்க்காதை களஞ்சியர் மாசிலாமணிப் புலவரிடம்' நற்சுபமுகூர்த்தத்தில்விடுத்து, வித்தியாப்பியாசஞ்

செய்துவைத்தனர். அச்சிறுவன் யாதொன்றின்மீது கருத்தை
செல்லவிடாமல், தானறியவேண்டிய பலசாஸ்திரவழியிற் கருத்
தைச் செலுத்தித் தன் நூலாசிரியருக்குக் கீழ்ப்படிந்து யாவுங்
கற்றுணர்ந்தான். அப்போது அச்சிறுவனுக்குவயது ஒன்பதெ
ன்றறிவீர்கள். ஆனால் தினம்பிரதிதினம் காலையிலெழுந்து நித்
தியக்கடனைமுடித்துக்கொண்டு, கருணாகர மூர்த்தியாகிய தனை
பதியைந் துதித்துப் பிறகு சிற்றுண்டியருந்தி சிறு இரதமேறி
பள்ளிக்குச் செல்வது வழக்கம். அக்கொற்றவன் வரும்மார்க்க
த்தில் எவரும் எதிர்படாவண்ணம் கட்டியர்கள் அதிஜாக்கிரதை
யுடன் தடுத்துவருவது மிகு பழக்கம்.

சிறார்களே? அச்சமயம் மேகவர்னன் அந்நகருக்கருகா
மையுள்ள பலமரங்களடர்ந்த தோப்பில், தன் இரதத்தை நிறு
த்தச்செய்து, தான் வேறுவேடம் பூண்டு, அந்நாட்டுக்குள் பிர
வேசித்து இராஜவீதியோடு வந்தனன். அப்போது கட்டியர்
கள் மேகவர்னனைக் கண்டு ஐயா வெளிநாட்டாரே? எங்கள்
சுந்தரவர்ன வள்ளல் பள்ளிக்குச் செல்கின்றார், ஆனதால் நீர்
மற்றவர்களைப்போல் சற்றுவிலகி நிற்பீர், மீறில் ஆக்கினை நே
ரிடும், உஷார் என்று எச்சரிக்கைச்செய்தார்கள்.

அவ்வெச்சரிக்கையைக் கேட்ட மேகவர்னன் ஐயா கட்
டியக்காரர்களே! யான் வெளிநாடாகையால் எனக்கொன்
றுந்தெரியாது. அதன்றி, உங்கள் கட்டளைக்கு மீறி நடவேன்.
செங்கோலுக்குமிஞ்சி சங்கீதமும் உண்டா, நீங்கள் கோபஞ்
செய்யவேண்டாம். இதோ சிறு இரதத்தில் வருபவன் நாம
தேயம் சுந்தரவர்னன் என்றுரைத்தீர்களல்லவா, அவன் யாரு
டைய மகன்? அதை தயைசெய்து கூறவேண்டுமென்று உள
வறியக் கேட்டான்.

கட்டியர்களிலொருவன் ஐயா வெளிநாட்டாரே! இதோ
சிறு இரதத்தில்வரும் சுந்தரவர்னன் வரலாற்றைக்கேட்பதால்
நீரடையப்போகும் பயன்யாது. ஆகிலும் உரைப்பேன் கேட்
பீர். எங்கள்பெரிய அரசர் தவத்தாலுதித்து, மேகவர்னனெ
ன்று நாமஞ் சூட்டப்பெற்று வளர்ந்தோங்கி, தன் பதினாறாம்
வயதில் வேட்டைக்குச் சென்று வரும் மார்க்கத்தில், முதன்
மந்திரியார் மேன்மாடிமீது நல்லமயிலையாற்றிக் கொண்டிருந்

தச்சிறுமியைக் கண்டு மோகித்துத் தன் அரண்மனைக்கு வரக்கண்ட அவரன்னை யாவுமறிந்து, அரசருக்குரைக்கப் புத்திரவாஞ்சை மிகு பெற்றிருப்பவ ராகையால், முதன் மந்திரியாரை வரவழைத்து அவர்மகளைத் தன்புத்திரருக்குக் கொடுக்கும்படிவேண்ட, சில ஏற்பாட்டுடன் முதன் மந்திரியார் தன் புத்திரியை யீய்ந்து வதுவைசெய்து வைத்தனர்.

அய்யர் வெளிநாட்டாரோ? இன்னுங் கேட்பீர், அப்படிக்கு வதுவைசெய்து கொண்ட இரவில், பெண்ணும் பிள்ளையும் பள்ளியறைக்குட் சென்றார்களாம். மறுநாட் காலை தொட்டு இன்றுவரையில் அவ்விருவர்களையுங் கண்டிலோம். எக்கெதியானார்களோ யாதுமறியோம். பிறகு, தன்மகளை யிழந்த முதன் மந்திரியார் வெகு விசாரமுற்று மன்னரிடம் வாதிட்டார். அதன்மீதி மன்னர் தன் புத்திரியை முதன் மந்திரியார் புத்திரருக்குக்கொடுத்து மணத்தை முடித்துவைத்தனர். இவ்விருவருக்கும் பிறந்த சிறுவர் இவரே. இவர் நாமதேயம் சுந்தரவர்னரென்றழைக்கப்பட்டு வளர்ந்துவருகின்றார். வயதும் ஒன்பதாகின்றதென்றறிவீர். நேரமில்லாததால் சுறுக்கமா யுரைத்தேனையா என்று முடித்தனன்.

மேகவர்னன், அப்படியா! சரி, அய்யா கட்டியர்களே? யாவரும்போல் யானும் ஒதுங்கினேன் என்றுரைத்து விட்டு வருகின்ற இரதத்தருகில் வந்துநின்று, அச்சிறுவனையுற்றுநோக்கி கண்ணீர்விட்டு, பிறகு தைரியங்கொண்டு சற்று மஞ்சாமல் வெகு மிருதுவானமொழியால்,

விருத்தம்.

என்-மனையாட்டிமகனேவாடா இயம்புவேனென் றுகேட்பாய்
எனக்குநீமருகந்தாண்டா இனியேதுவிடிப்பேனப்பா!
உனக்குயானம்மான்போடா உண்மையாய்நீயுஞ்சென்று
கனத்துடனுன்னப்பனைநீ கேட்கியபறைந்துவாராய்.

என்றுரைத்து விம்மி விம்மி வேர்த்து நின்றிருந்தனன். அச்சிலேடைமொழிகளைக்கேட்ட சுந்தரவர்னன் திடுக்கிட்டு, ஆ! இதென்ன தொல்லையான வார்த்தையாடினானிவன்! இவ்வளவு தைரியமாய் நம்மைக் கண்டு இழிவுள்ள வார்த்தைகளாடிய

இவனை, இன்னானென்று குறிப்பிடமுடியவில்லையே! இவனை எதிர்த்து வாதாடுவோமென்றால், இன்னு மேதேதுரைப்பனோ! அதன்மீது நமது மனம் மென்மேலும் புண்படுமே! காயம்பட்டபுண்ணை யாற்றிவிடலாம், மனப்புண்ணை யெவ்வாறு ஆற்றிக்கொள்வது. சரி, நமதுபாட்டனாரைக்கண்டு கேட்டுத் தெரிந்துகொண்டபின், பள்ளிக்குச் செல்லவேண்டுமென்று தீர்மானித்து இரதத்தைத் திருப்பச்செய்தான்.

பிறகு, இரதமும் மன்னன் கொலுமுகவாயலில்வந்துநிற்க, சுந்தரவர்ணன் ஓடோடிவந்து கொலுவில் வீற்றிருக்கும் மன்னனெதிரில் நின்று, எனையன்புடன்பாராட்டிவளர்த்துவரும்மூதறிஞரே? யான் பிள்ளையாய்ப் பிறந்த சுகம் போதும்! என்விதியிப்படியுமிருக்குமா! அய்யோ! யான் யாருக்குப்பிறந்தவன்? என்தந்தையார்? என்றன்னைச் சரியானகற்புடையவள்தானா? இவையாவையும் தாங்கள் உண்மையாயுரைக்கவேண்டும்! இலையாகில் தங்கள்கரத்திலிருக்கும் வாளுக்கே பலியாகி விடுவேன் என்று ஆத்திரத்துடன்கூறி விம்மிவிம்மி யழுதான்.

அதைக்கேட்டமன்னன் அப்பா என் அருமைக்கண்ணே? நீயேனப்படி யரற்றுகின்றாய்? நீ சற்று மனம்பொறுப்பாய். அய்யாமுதன்மந்திரியாரே? நமதுபேரப்பிள்ளையுரைத்த மொழிகளைக் கேட்டீரா? நீர்சிந்திக்க ஆலோசிக்க வேண்டும். அப்பா கண்மணி? சுந்தரக்கிளியே? என் தவப்புத்திரனும், மருமகளும், சென்றுவிட்ட துக்கத்தை யுன்னாலல்லவோ ஆற்றலானேன். அப்பா? நீ என்றும் எனதிடம் உரைக்காத வார்த்தையாடினாய் இதுயாரால் விளைந்த நேர்மை? சற்றுப்பதறாமல் கூறுவாய்சுந்தரா! என்னுயிரே என்று துக்கமுற்றுக் கேட்டனன்.

பேரப்பிள்ளையாகிய சுந்தரவர்ணன், அய்யா தங்களிடம் மெய்யாயுரைக்கின்றேன். யான்பள்ளிக்குச்செல்லும் மார்க்கத்தில், யாரோ ஓர் மனிதன் இராஜவடிவாய்க் காணப்படுகிறான், பார்வைக்கு வெளிநாட்டானைப் போல் தோற்றப்படுகின்றான். அவன் எனைச்சற்றும் மதியாமல் என்னெதிரில்நின்று, அடே என்மனையாட்டி மகனேவாடா என்றழைத்தான், யான் திடுக்கென்றயர்ந்தேன். உடனே அடே எனக்கு நீ மருகன்தாண்டா, என்று மனங்கூசாமலழைத்தான். யான்சிரித்தேன், பிறகுஎன்

தாயுடன் பிறந்த தமயனைப்போல் தானெண்ணி நானுனக்கம்மான்போடா என்று இலேசாய்க் கூறிவிட்டான். அப்போது என்மனம்பதைந்து மிகுகுன்றினேன். கடைசியாக யாவையும் நீக்கி, நான்வரச்சொன்னதாக உன்னப்பனைவரச்சொல் என்று கூறினான். இந்த அநியாயத்துக்கு என்செய்வேன் மூதறிவுடையோரே என்று விம்மி கூறினான்.

பிறகு, ஐயோ! யான்பிறந்து வளர்ந்துவருங் கொள்ளை, விதியிற் சிரிப்பா சிரிக்கின்றதே. எனதெதிரில் நின்று கேட்டவன் எனைமகனென்றழைத்ததால் எனக்குத் தந்தையான்; 2-வது, எனைமருகனென்றும், அவன் எனக்கு அம்மானென்றுங் கூறினான்; அப்போது என்தாயுடன் பிறந்த தமயனென்று குறிப்பிட்டான். மேற்காட்டிய பந்தத்தை நீக்கி, தான்வேறாகி எனதப்பனை அழைத்து வரவுங்கூறினான். ஆகையால் எனதன்னையெனை யாருக்குப் பெற்றனள்? இதை நினைக்கில் பெருமானக்கேட்டுக்கே யிடந்தருகின்றது. ஆ! விதியே என்று மனவருத்தமுற்றான்.

அவை யாவுங்கேட்ட முதன்மந்திரி தீர்க்காலோசனை செய்து சரி, நமது புத்திரனுக்கு ஜாதகமெழுதிய சோதிடருரைத்தவண்ணமின்று தான்பலித்தது. அன்று பாரியாய்ச்சென்ற மேகவர்னன் இங்கு வந்து விட்டான்போற் றோற்றுகின்றது. அவரவர் குற்றம் அவரவரிடமே யிருந்து அதனை யனுபவிக்கத் தான்வேண்டும். அன்று நாம் எவ்வளவோ தடுத்துரைத்தும் மன்னர் கேளாத குற்றம் அவர்பா லிருக்கின்றது. நாமென்ன யோசனைக் கர்த்தரல்லவா, மற்றுமுள்ளசேதி வெளியாகட்டும், பிறகு யோசிப்போமென்று திடச்சிந்தனை யிருந்தான்.

பிறகு, மன்னன் தன் போப்பிள்ளையை நோக்கி அப்பா கண்ணே? நீயுரைத்தச் சிலேடைவார்த்தைகள் ஒன்றும் என் அறிவுக்கெட்டவில்லை. உனதிடங் கூறியவனை இதோ இங்கு அழைப்பிக்கச் செய்கின்றேன். நீசற்று நிதானிப்பா யப்பா என்றுரைத்து விட்டு, அங்கணமிருந்த டலாயத்துக்காரனை விடுத்து இராஜவீதியிலிருக்கும் அயலானை யழைத்துவரச் செய்து, அவன் முகத்தையுற்று நோக்கினன்.

ஆ! இவனைக்காணில் கரத்திற் செங்கோலைத்தாங்கி அரசாளும் மன்னனழகை யொற்றிருக்கின்றான். (இங்கு உற்று நோக்கல்) ஆ! ஆ! இவன் நிறத்தை நோக்கில், ஏனதன்பார்ந்த சுதனைப்போலுந் தோற்றப்படுகின்றதே! உலகில் மனிதனைப்போல் மனிதனிருப்பதையுங் கண்டிருக்கின்றோம். ஒருசமயம் இவனைக்கண்டகண் சென்றவ னிவந்தானென்று நம் மனதை மயங்கச்செய்கின்றதோ! அன்றியில், சாதாரணமாய் நாட்டிலுள்ளக் குடியானவனுடுத்தும் உடையைப்போல் தரித்துமிருக்கின்றான். இவ்வாறுள்ளவன் ஏதோ ஒருகாரணத்தை யுட்கொண்டு நமது பேரப்பிள்ளையைக் கண்டு, சிலேடைச் சொற்களைக்கொண்டு பள்ளிக்குச் செல்பவனைத் தடுத்திருக்கின்றான். எதற்கும் இவனைக் கேட்டறிவதே யுத்தமமென்று தீர்மானித்து, அய்யா வெளிநாட்டாரே? நீரார்? நீரிங்குற்றுச் சற்று மஞ்சாமல் எனது பேரப்பிள்ளையினிடம் உரைத்த மொழியை விபரமாய்க் கூறவேண்டும், இலையாகில் விணில் நீர்மாளுவீர் என்று கடிந்துரைத்தனன்.

மேகவர்ணன், என் தந்தைக்கொப்பற்ற இராஜசிங்கமே? கேட்பீர், உலகில் உள்ளதையுரைத்தால் யாவருக்கும் வருத்தந்தானே. இன்னொருவன் தங்கள் பேரப்பிள்ளையைக் கிட்டி மட்டிலாவார்த்தையாடுவானோ! இதனை யறிந்துகொள்ளாமல், எனை விணில் மாளுவாயென் றுரைத்தீர். பதராதகாரியஞ் சிதறாது. நெற்களைக்காற்றில் தூற்றினால் நெல்வேறு பதர்வேறாகிவிடும். அதுபோல் தாங்கள் உரைத்தவார்த்தைப் பதரையொற்றிருக்கின்றது. யான் தங்கள் பேரப்பிள்ளையினிடம் உரைத்த மொழிகள் நெல்லென்றறிவீர். அன்றியில், யானின்னானென்றும் உமது பேரப்பிள்ளையைக்கேட்டது தகுமென்றும் நீரே ஒப்புக்கொள்ளப்போகின்றீர்.

மன்னன், அய்யா முதன்மந்திரியாரே? யான் இவ்வெளிநாட்டாரைக்கேட்டகேள்விக்குப் பதிலுரைக்காமல், ஏதேதோ சுட்டதும் சுடாததுமாய்க் கூறுகின்றதற்குக் காரணந் தெரியவில்லையே! நீராகிலும் இவரிட மக்கருத்தைத்தெரிந்து எனக்குரைப்பீர். எனக்கோ என்புத்திரனும்மருமகளுஞ்சென் றுபத்து வருடமாயிற்று. அக்கியாபகம் இன்றுதான் என்மனதிலூன்றி வாட்டுகின்றது என்று துக்கித்தனன்.

"முதன்மந்திரி— அப்படியா, ஆரையாநீர்?

மேக—யான்வெளிநாட்டிலிருந்து வாழ்ந்துவருபவன்.

மு-மந்—அப்படி வெளிநாட்டி லிருப்பவர் இந்நாட்டுக்குவந்து எங்கள்பேரப்பிள்ளையைக் கேட்டகேள்வி சரிதானா?

மேக—கேட்கத் தகுந்த கேள்விதான் கேட்டேன். அதில் யாதொருகுற்றமு மில்லையே.

மு-மந்—அப்படியா, நல்லது! அக்குழந்தையை நீர்பெற்ற மகனென்றும், அவன் தாயை உமக்குப் பெண்டென்றுரைக்கலாகுமா? இது என்ன துணிவு.

மேக—யானுரைத்ததுபோல் மற்றவருரைக்கத் துணிவாரா, ஏதோ எனக்குக் கிஞ்சிற்றுப் பாத்தியமிருக்குமென்று நீர் ஏன் அறியாமற்போனீர்.

மு-மந் அய்யா? அப்பந்தத்தைச் சற்று வெளியிடுவீர்.

மேக—அப்பந்தத்தை வெளியிடத் துணிகில், என் நா குளறுகின்றதே! ஆகிலும் யான் அரையிலாடிய விந்தையை அம்பலத்திற் கூறாமல் முடியாது. ஒருவன் பத்து வருடத்துக்கு முந்தி ஆணுருவைப் பெண்ணுருவென்று மதிமயக்கால்மயங்கிப் பள்ளியறையில் மானங் கெட்டு ஓடிசென்றவனுக்கு, அவ்வாணே பெண்ணாயிருக்கில் கூடிக்கலந்தபின், ஓர் பிள்ளையுதிக்கில் அப்பிள்ளையை மனையாட்டி மகனென் றழைக்கொண்ணுதா? அப்படியோடிச் சென்றவனுக்குச் சகோதரி யிருக்கில் அவளை எவனுக்காகிலும் வதுவைசெய்து கொடுத்த பிறகு பிறந்த பிள்ளையை அவன் மருகனென் றழைக்கானா? அப்பிள்ளைக்கு அம்மானகானா? யாவையும் மானக்கேட்டால்விடுத்துப் பரதேசியைப்போல் வேறுதேயஞ் சென்றவனுக்கு இங்கு என்ன சுவதந்திர மிருக்கிறதென் றெண்ணி மனங் குண்ணித் தன்னை வேறுபடுத்தி, அப்பிள்ளையைக்கண் டுன்னப்பனை வரச்சொல்லென்றுகூறானா? ஆகையால் மதிமயக்கு யாரையும்விட் டகலாதென் றறிவீர் அய்யா பெரியோரே.

மு-மந்—அ! அப்படியா! நீரெங்ஙனமிருந்து பராரியாய்ச்சென்றனை? உமதுநாமதேயமென்ன?

மேக—அய்யா! யானே புண்பட்டவன். ஒருவாறு தணிந்திருக்குங் கும்பியைத் தங்கள் வார்த்தையென்னுங் கோலால் தூண்டி விட்டீரே! ஆகிலும் விதிப்படி முடியட்டும் அணிந்தவனுக்குத் துக்கந் தோன்றுவாறுரைக்கின்றேன். என்பிதா மைந்தனில்லாமல் அரிய பெரிய புத்திரகாமேட்டியாகஞ் செய்து, மெய்யனருளால் வந்த அமிர்தத்தை யென் அன்னையுண்ண, யானும் ஓர்பெண்ணும் பிறந்தோம். எனை மேகவர்ன னென்றும், என் தங்கையை காந்தாமணியென்றும் அழைப்பதுண்டு. யான் காலவித்தியாசத்தால் மானத்துக்கஞ்சி இந்நாட்டைத் துறந்தேன் என்றறிவீர்."

மன்னன் மேகவர்னன் உரைத்தமொழிகளை யாவுங்கேட்டு, சிம்மாசனத்தை விட்டிறங்கி அடா மகனே! மேகவர்னு! ஆ! கண்ணே! இப்படியும் எங்களை மங்கிவாடச் செய்துவிட்டுச்செல்லலாகுமா! அடாசுதனே! எங்களைவிட்டுச்செல்ல எவ்வாறு மனந் துணிந்ததோ! ஆ! நீ சென்று பத்துவருடமாயிற்றே! நீ எங்கெங்குசென்று அன்னத்துக்கலைந்தனையோ! அடேகுழந்தாய்! உன்விதியை இப்படியும் மதியிழுத்துச் சென்றதல்லவா! என்று பலவாறு துக்கித்துக் கீழ்விழுந்தனன்.

பிறகு, அந்தப் புரத்திலிருந்த மன்னன் தேவி குணபூஷணி தன்மகன் வந்துவிட்ட சேதியைக்கேட்டு, மன்னன் சபைக்கு ஓடோடிவந்து ஆ! மகனே! நான்பெற்றசெல்வமே! என்னிரு கண்ணே! எங்களரிய தவத்தில் வந்த என்அன்பே! பிள்ளைகலி தீர்த்த பெம்மானே! எங்களை யாருமற்ற பாபிகளாக்கி, அண்டிபிழைக்க எந்நாடு சென்றனை? போட்ட இடத்தில் தேடுவது உத்தமமல்லவா, அதுபோல் நீபிறந்த இடத்திலிருந்து சுகத்தை யனுபவிக்க என்ன தடையடா மைந்தனே! நீ ஆசையுற்று மணஞ்செய்துகொண்டவுன் அருமைமனைவி யெங்கடா! அவள் கதியென்னாயிற்று? அவளைத்தனியே நீ விடுத்துவரலாகுமா! அந்தோ! அன்று நீ கோரியபடி மணத்தை ஏதன்மந்திரியார் மகளைமுடித்து வைத்தேனே!

அடா மேகவர்னு! நீ உன்மனைவியுடன் இங்ஙனமிருந்து சுகித்து வாழாமல், எக்காரணத்தை முன்னிட்டு எங்களைத் துக்

கத்தி லிருக்கச் செய்து வெளியிற் சென்று விட்டீர்களடா! அவளழைக்க நீ சென்றனையா? அலது நீயழைக்க அவள் உன்னுடன் தொடர்ந்தனளா? உலகில் ஒருவன் ஓர் பெண்ணை வதுவை செய்துகொளில், அவள் மயக்கத்தில் ஈடுபட்டுப் பெற்றோ ருற்றோரை மறந்து, அவள்சொற்படி நடப்பவன்போல் நீநடக்கத் துணிந்தனையா! நீயோ அறிவாளியாயிற்றே! உன்மதி இப்படியும் பத்துவருடகாலம் வேறுபடச்செய்த தல்லவா! நீங்களிருவருஞ்சென்ற பிறகு உன் தங்கையை இதோ இருக்கும் முதன் மந்திரியார் புத்திரர் சந்திரகாந்தருக்குக்கொடுக்க, அவர்கள் கருவிலுத்தவன்தான் இதோ இருக்குஞ்சிறுவன். இவனால்தான் நீங்களிருவரும் நீசென்றுவிட்ட துக்கத்தைச்சற்று நீக்கினோம். இனியாகிலும் இங்ஙனமேயிருந்து வாழ்வாயப்பா என்று பலவாறுவேண்டியழுதனள்.

மேகவர்னன், அம்மணீ? தாங்களிவ்வித மழுவதினால்வரும்பயன் ஒன்றுமில்லை. தாங்களன்று யான் ஆணைப்பெண்ணென்று மதிமயக்காலுரைத்த வண்ணம், என்மனம்போல் நடத்தினது உண்மையே. அன்றிரவு நாங்களிருவரும் பள்ளியறைக்குட்சென்றபின், அப்பெண்ணை ஆணெனவறிந்து மிகவும் வெட்கி இந்நாட்டாரறிகில் சற்றும் மதிக்கார்களென்றெண்ணி, மனம் புண்ணிட்டு, வெளியிற்சென்று விட்டேனேயொழிய வேறொன்றுமில்லை தாயே, பிறகு அவ்வரையிலிருந்தவன் கதியென்னாயிற்றோ யானறியேன் அம்மணியென்று துக்கித்துநின்றழுதான்.

மன்னன் தேவி முகவாய்க்கட்டின் மீது தன்கரத்தைவைத்து, அ! இதென்ன அனியாயம்! அப்பா சுதனே? நீகண்டுரைத்தபெண் ஆண்! அய்யோ! உலகமயக்கின் பெருமையே பெருமை! அடாமேகவர்னா? அப்படிக்கு நீ கண்டபொழுதே எனதிடந் தெரிவித்திருப்பா யாகில், உடனே வேறுதேய அரசன்மகளைப்பேசி உனக்கு மணத்தைமுடித்திரேனா! தாயிக்குப் பிள்ளை மர்மஞ்சாதிக்கலாகுமா. இது ஊழ்வினையென்று மதிக்கவேண்டுமடாகண்ணே. நீகாணமல்சென்றநாள்தொட்டேயானும், உன்தந்தையும் பட்ட துக்கத்துக்கு அளவுண்டா! உலகி லிறந்தவனை நினைந்து சிலதினந் துக்கித்துப் பிறகு மறப்பதுண்டு. நீ

செய்துவிட்டுச் சென்ற துக்கம் சற்று மாறுதே! ஆ! மதியே! என் மைந்தனை யிப்படியுஞ் சதிசெய்யலாகுமா! சரி - சரி, மதியென்செய்யும். மாய்கையெனும் பெண் துறவிகளையும் விடவில்லை யாதலால், உன்மீது குற்றமென்பதில்லை மகனே.

அப்பா என்னருமைபாலா! இன்னும் ஓர் சேதி கேள். நீ அன்றயர்ந்து சோகமுற்று கூறியவண்ணம் யான் உன் தந்தையிடந் தெரிவித்தேன். அவரும் பதிலுரையாமல், இம்முதன்மந்திரியாரை வரவழைத்து உன்சோகத்தைத் தணிப்பதற்கு இவருக்குப் புத்திரியிருப்பதாகவெண்ணி வெகு மன்றாடிக் கேட்டனர். அதர்க்கிவர் தனக்குப்புத்திரி பிறக்கவில்லையேயென்றுரைத்தும், உன் தந்தை வியசனமுற்று அய்யோ! அருமையாய்ப் பிறந்தமகன் அநீதமாயிறப்பான்போலிருக்கின்றதேயென்று அழுதுமென்மேலுமிவரைவேண்ட, இவர் சற்றுநேரந்தயங்கி, இச்சமயம் யாதாம் ஒருதந்திரஞ் செய்யாவிடில் மன்னன் மகனது தலைக்கேறிய மதிமயக்குச் சற்றுமிறங்காதென்றும், இத்தருணம் நமதுமகனை மகளெனக்காட்டி அம்மாயமயக்கத்தைத் தவிர்க்கச்செய்யாவிடில் நீ மாண்டுவிடுவாயென்று தீர்மானித்து இருக்கவேண்டும்.

அடா கண்ணே? அவசரக்கலியாணம் அள்ளிதெளியென்பதுபோல், அதேதினமிரவில் தன்மகனைப் பெண்வேடந் தரிக்கச்செய்து மாதர்களுங்கண்டு மயங்கத்தக்க அழகுடையபெண்ணொன்று இங்குகொணர்ந்து விடுத்தனர். யானும் அப்பெண்ணழகைக்கண்டு மயங்கினேன். வேதப் பிராமணர்களும் வேதம் ஓதுவதை மறந்து சற்றுசொக்கி வாடினார்கள். நீயும் அவளைக் கண்டு உயிர்பெற்றாய். அன்றிரவில் நீங்களிருவரும் பள்ளியறைக்குட்செல்ல, நீ மர்மந்தெரிந்து வெளியிற் சென்ற சேதியாவருமறியோம். அன்று நமது முதன்மந்திரியார் இவ்விதத் தந்திரஞ் செய்யாவிடில், அவ்வெறியால் நீ கண்டிப்பாயிறந்துவிட்டே இருப்பாய். நாங்களிருவரும் புத்திரசோகத்தால்மாளநேரிடும். ஆகையால் நமது மூவரையும் பிழைப்பூட்டிய புண்ணியவானிவராகையால், இவர்மீது குற்றங்கூற என்மனஞ்சற்றுந் துணியாதென்றெடுத்துக் காட்டிப் புத்திரபாசத்தர் லவனைக் கட்டி முத்தமிட்டுப் பல ஆசி கூறினள்.

சீடர்களே? அவைநிற்க, மேகவர்ணன் தங்கை காந்தா மணியின்தோழி ஒருவர் மேகவர்ணன் மன்னன் சபையிலிருப் பதைக்கண்டு, ஆனந்தங்கொண்டு தன்சேலே விலக எதிரில்வரு பவர்களின்னு ரினியாரென்றுகூட கவனிக்காமல், காற்றிலும் அதிவேகமாய்ச்சென்று காந்தாமணியின் பாதத்தில் வீழ்ந்து அம்மணீ? தாங்கள் இன்று எழுந்த வேளேயே வேளே! அ! என்னபாக்கியம்பெற்றீர்! உமதுபிறவிக்குப் பலதரமும் வந்த னஞ்செய்கின்றேன் தாயே என்று ஆனந்தக் கண்ணீர் பெருகி அமர்ந்து நின்றனள்.

இதனேக் கண்டுங் கேட்ட சந்திரகாந்தன் மனைவி காந்தா மணி, என்னடி அம்மா தோழி! நீயிப்படி யோடிவந்து எனேக் கண்டு ஆநந்தசாகரத்தில்மூழ்கியென்னென்னமோகூறிப் பூஷி க்கின்ருய். உலகிற்பெண்கள் புருஷனுடன் ஒற்று வாழ்வது போல், பாவியாகியயான் புளியம்பழ ஓட்டை யொக்க எனது நாயகரிட மனதுக்கு வருத்தம் வாராமற்படி ஓர் மைந்தனையு மீன்று வாழ்க்கையி லிருக்கின்றேனே யொழிய, எப்போ என் அருமைப்பிறவியையும், தாயையொற்றஎன் அண்ணியையுங்கா ணுமற்போனேனே, எனக்கென்ன உன்னேப்போல் சந்தோஷ மிருக்கின்றதா? அதிலும் என்பிறப்பைப் பற்றிப் புகழ்ந்துரை த்தனேயே தவிர, நீ குதூகலிக்குங் காரியாகாரியம் யாதொன் றுந் தெரியவில்லேயடி அம்மாவென்று கேட்டனள்.

தோழி, சகலசம்பத்தைப்பெற்று வாழும் தாயே? சற்று கவனிப்பீர். யான் சிலகாரியமாக மன்னர் சபைக்குச் சென்றி ருந்தேன். அப்போது தங்கள் அருமைப் புதல்வர் வழக்கம் போல் பள்ளிக்குச்செல்லும் மார்க்கத்தில், உமது சகோதரர் வெளிநாட்டானேப் போல் வேடந்தரித்து, உங்கள் குலத்தை விளக்க வந்திருக்கும் அருமைக் குழந்தையை எதிர்த்து என் னென்னமோ சிலேடைமொழிகளாடியதைக்கேட்ட சுந்தரம் தன் பாட்டனுராகிய உமது தந்தைபாற்கூறி விம்மியழுதனர்.

அம்மணி? உமது தந்தை வெகுகோபத்துடன் ஓர்தூதனே விடுத்து, வீதியிலிருக்கும் வெளிநாட்டானே யழைத்து வரும்படி கட்டளேயிட, உடனே சென்றழைத்துவர அரசர் வந்தவரைக் கண்டு அதி ஆயாசத்துடன் விசாரிக்க, அதற்குத்தக்க வுத்திரவு

கொடாமல் இருப்பதைக்கண்ட உமது மாதுலர் வெகுநேரம் வருந்திட்டார். அதன்மீது உண்மை வெளிவர, மகனென்றறிந்த மன்னர் துயருற்று அவரருகிற்சென்று, கட்டியழுது, பிறகு தேறினர். அப்போது,—

தாயே! எவ்விதமாகவோ உமது அன்னையறிந்து ஓடோடி வந்து, அவரைக்கண்டுகதறினச் சிறுமையால், கண்ணீர் ஓர்வாய்க்கால்போலோடிற்றென்றால், அத்துயரத்தைத் தாங்களே மதிக்கவேண்டும், உமதுசோதரர் இங்குமுன்னிருந்ததைப்பார்க்கிலும் இப்போது வருடம் பத்தாகியும், மிகு அழகுடையவராகவேயிருக்கின்றார். அச்சமயம் தங்கள் குழந்தையாவையுங் கண்டு திப்பிரமைக்கொண்டு திகைத்துநிற்கக்கண்ட யான் தங்களிடந் தெரிவிக்க இவ்விதக்கோலத்துடன் மகிழ்ந்து இங்குற்றேன் தாயேயென் றுண்மையைக் கூறினாள்.

காந்தாமணி, அடிதோழீ? நீயுரைத்தது உண்மைதானா! என்தமயனார் எனது தந்தை சபையில் இருக்கிறது திண்ணமென்றுகூறினையல்லவா! யான்பெற்றபாக்கியம்யாவர்பெறுவாரமை! உடப்பிறப்பிலா வுடம்பும் ஓர் உடம்பாகுமா! உப்பில்லாக்கூழும், நெய்யில்லாவுண்டியும், ஆளில்லா வரண்மனையும், தீபமில்லாவீடும், குருவில்லாச் சீடனும் யாதொன்றுக்கும் பிரயோசனப்படாதல்லவா! அம கார்மேக மில்லாப் பயிர் வாடியிருப்பதுபோல், எனதுசகோதரர் சென்றுவிட்ட தீவினையால் வருந்தி மங்கி கிடக்கும் எனக்கு இச்சமயம் அமிர்தத்துக்கும் மேலான சேதியை யான்கேட்டச் சந்தோஷத்துக்கு, இதோ விலையுயர்ந்த முத்தாரந்தந்தேன். இதனைப் பெற்றுக் கொண்டு யானேறும் பல்லக்கைக் கொண்டுவரச் செய்வாய் என்று கட்டளை யிட்டனள்.

உடனே மூடுபல்லக்குவந்த சேதியைக் கேட்டு, அதன்மீதமர்ந்து தனதுமாதுலர் அரண்மனையைக்கடந்து தனது, தந்தையரண்மனையையடைந்து தன்னைப்பெற்றத் தாயைத்தேடியெங்குங்காணமல், சரி-சரி, சபையில்தானிருப்பாரென்று இரண்டு தோழிகளுடன் அச்சம், நாணம் என்பதைவிடுத்துத் தன்சோதரரைக்கண்டு களிக்க, அன்னை முன்னிட்டுச் சபையை நாடிவந்து தன்சோதரர்பாதத்தில் விழுந்து, பத்துவருட காலமாக

நீங்கியிருந்து இப்போது கண்டதினால் துக்க மதிகரித்து விம்மி விம்மி அழத்துடங்கினாள் அது எவ்வாறெனில் :—

ஆ! எனது தந்தைக் கொப்பற்ற என்னன்பிற்கினிய ஏ! அண்ணா? இதுகாறும் மெங்ஙனஞ்சென்றிருந்தீர்? யானும்முடன் பிறக்கவில்லையா! நாமிருவரும் ஒற்று வளர்ந்து வித்தைகளைக் கற்றுணரவில்லையா! அய்யோ! தங்கையெனுமாசையை யெப்படிமறந்தீர்! இந்நாட்டுக்குச்செல்லப்பிள்ளை நீரல்லவா! உடப்பிறப்பில்லாவுடம்பும் ஓர் உடம்பாகுமா! அதுபோல் அண்ணாவைத்துறந்த என் திரேகமும்ஓர் திரேகமாகுமா! ஆ! என்பிறவீ! இப்பத்துவருடகாலமாக எனையும், நமைப்பெற்றத் தாய் தந்தையரையும் மறந்து, எப்படி மனந்துணிந்து உயிர் பிழைத்திருந்தீர்! ஆ! இப்படிக்கும் உமது மனந் துணிந்ததல்லவா! சிவ சிவா! சம்போ! சங்கரா!—ஏ! அண்ணா?—

இன்னொருநிந்தனைவந்தனுகியித்தனைவருடகாலமாக எனை வருத்தமுறச்செய்தது. அதனை யும்மைக்கண்டவுடன் முற்றும் நீக்கினேன். அதாவது, அண்ணனைத் துறந்த அருமைத்தங்கை இக்காந்தாமணி சற்றும் வருந்தாமல் மணத்தைமுடித்துக்கொள்ள எப்படி மனந்துணிந்தனள் பார்த்தீர்களா! என்று சில பெண்கள் கூடிக் கூடிப் பேசத் தலைப்பட்டனர்கள். அவ்வித வார்த்தையாடினமங்கையர்களை யான்கண்டித்தவளுமல்லேன். ஈதிருக்கட்டும், என் தாயையொற்ற அண்ணி எங்ஙன மிருக்கின்றார்? அவ்வம்மணியைநோக்கில் எனதருங்குணாளர் அழகை யொற்றிருந்தனரே! அப்படிக் கொற்றப் புண்ணிய வதியை யேனிங்கு தாங்களழைத்துவரவில்லை. தாங்கள் அன்னை, தந்தை, தங்கையாகிய எனைப்பார்க்க விருப்பங் கொண்டு வந்தவாறு, எனதண்ணிக்கும் தன் தாய்தந்தை சோதரராகிய எனதாளரைப் பார்த்து மகிழ எண்ணமிராதா என்றுகேட்டு உடனே;—

அண்ணா? ஓர்தினம் எனைப்பார்த்து ஓர் விஷயத்துக்காக மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாமென் றுரைத்த நீர் எப்படி எங்களைவிட்டுச்செல்ல மனந்துணிந்தீர்! படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது சிவன்கோயிலா? குரங்கென்னு மனதைக் கட்டிப்பிடிப்பவரே இல்லறத்தாரென்று கூட எனக்குப் போதித் திருக்கிறீரே, அன்று நீர் கொண்ட மாயவெறியால்

ாயென்றுந்தங்கையென்றுமமக்குத்தோற்றாமற்போயிற்றே.
ஈர், இனியேனும் இந்நாட்டின் செங்கோலைக் கைக்கொண்டு
குடிகளையும், எங்களையும், இன்னுமற்றுமுள்ளவர்களையுங் காக்
குங்கடமை யுமதாக்கும் அண்ணாவென் றடிபணிந் துரைத்து
ஆற்றொணாத் துயரத்துடன் தொழுது வாடினாள்.

சீடர்காள்! அப்போதுமேகவர்னன் தன்தங்கை காந்தா
மணி தன்னைப்பற்றித் துக்கிப்பதைக் கண்டு சற்றும் மனந்தா
ளாமல் தன்மதியை வெறுத்து அவள் கண்ணில் நின்று வரும்
நீரைத் தன்வேட்டியால் துடைத்து, அம்மா எனதன்பிற்கினிய
தங்கா! யானன்றுசெய்துவிட்டுச் சென்ற குற்றம் என்மீதிருக்
கினும், இவ்வாறுநீகண்ணீர்விட்டுத்துக்கித்து உன் மிருதுவான
திரேகத்தை வீணே பாழ்படுத்திக்கொள்வது எனதாவிமேனோ
க்கிவிடும்போ லிருக்கின்றதே! அம்மா! நீபொறுமைக்கு வித்
தாயிற்றே. என்னிலும் நீ அதி மேன்பாடாய் வளர்ந்த கண்
ணம்மா நீயல்லவா. ஆ! குழந்தாய்! உலகில்மானிடரைக்காலப்
பிடித்தச்சனியன் ஓடவிட்டடித்து, பிறகு அவனைவெட்கிவாழ்த்
திச் செல்லுஞ்சேதியை நன்குணர்ந்தவளாயிற்றே:—

அம்மா சகோதர வாஞ்சையைப் பெற்றச் சுந்தரக்
கண்ணே! யான் உங்களெல்லோரையும் விடுத்துச் செல்வதற்
குத்தானோ பிள்ளையாய்ப்பிறந்து இந்நாட்டிற்பலருங்காண வளர்
ந்தது. அறிவுவிளங்கியபின் பலவிதச்சாத்திரங்களு முணர்ந்து,
பலருங் கொண்டாடப் பதினாறு வயதுவரையில் ஜீவித்து வந்
தேனே! இது அரவமெனும்வினையின்கூற்றென் றறிவாயம்மா.
ஸ்ரீராமர், நளன், பஞ்சவர்கள் அவர்களெல்லாம் எக்கொற்றத்
தினதயாளர்கள் அவர்கள் காரியால் பட்ட கேட்டை நீ நன்கு
ணர்ந்தவளாயிருந்தும் என்பொருட்டுச் சற்றுந்துக்கிக்கவேண்
டாம் அம்மாவென்று அவள்மனதைத்தேற்றலுற்றான்.

பிறகு, மன்னன் பேரப்பிள்ளை சுந்தரவர்னன், யாவையுங்
கேட்டறிந்து, திடீலென்றெழுந்து மேகவர்னன் பாதம்பணிந்து
எனதருமைமாமா? தாங்கள் எனைச்சிலேடைவார்த்தையாலாடி
னது எனக்கொக்கும் ஒக்கும். அய்யோ! பலவித சாத்திரங்க
ளும், இதிகாசபுராணங்களுங்கற்றுணர்ந்தவராயிருந்தும், உலக
மயக்கு யின்னதென்றும், அது இன்ன வழியிற் றள்ளுமென்

றும், நீர் உணராததைப்பற்றி மிகு வியசனமுறுகிறேன். ஊரி லுள்ளசிறுவர்கட்குத் தங்கள்தாயுடன்பிறந்தோரை நல்லம்மா வென்றழைத்து மகிழ்வதுபோல், யானும் மகிழ்ந் தழைப்பதற் கில்லையே யெனும் ஏக்கம் உம்மால் நீங்கிற்று. என்பாக்கியமே பாக்கியம். இனிதாங்கள் வேறுயோசனைசெய்யாமல் இச்செங் கோலைத்தாங்கி எங்கள்யாவரையும்பாதுகாக்கவேண்டும்மாமா வென்று அடிபணிந்தனன்.

அப்போது சுந்தரவர்னன் வார்த்தையைக் கேட்ட மேக வர்னன் பேரானந்த மடைந்து அடா சீராளா? அறிவுள்ள கிளியே? உன் அருமைக்குணத்தைப்பற்றி என்னென்று கூறு வேனடா! எனதாருயிரே? இனி யென் பாதத்தை விடுத்து, யாதொருவருத்தமின்றி யெழுந்திருப்பாய், உன் அன்பையென் றும் மறவாமற்செய்த என திருகண்ணே! என்னிலும்மிகுகனத் துடன் வாழ்வாய் அழகனே! உனைவீதியில் யான் ஒருவாறு கேட்டக் கேள்வியைப்பற்றிச் சற்றும்மனந்தளராதே. அப்பா குழந்தாய்? உன்னை யவ்வாறு கேட்டதைப்பற்றிதான் யானு னக்கு இன்னானென்றும், நீ யெனக்கு இன்னானென்றும், உன் பாட்டனுருக்கும், உன்தாயிக்கும், என்தாயிக்கும் இன்னானெ ன்று இங்குள யாவருமறிந்தனர்களென்றுகூறி மகிழ்ந்து மென் மேலும் ஆசிகூறினன்.

(ஆரிய அன்பர்காள்? பத்துவருடகாலமாகக் காணாதிரு ந்த மேகவர்னனைக்கண்ட மன்னன்முதலிய யாவருங்கொண்ட மகிஷியின்சிறப்பை யிங்ஙன மேன்பாட்டுடன் கூறாமல் விடுத்த தற்குக் காரணம் யாதெனில், அன்று நெடுநாளாய்ச் சென்று வந்த மேகவர்னனைக் கண்ட கண்கள் ஆனந்தித்தபோதினும், அவன் சென்றநாள்தொட்டுக்காணாமலவரவர்மனம்புண்பட்டு வருத்தமடைந்தமையால், யானும் அவ்வருத்தத்தை மென்மே லும் உன்னி, அச்சமயமடைந்த சந்தோஷத்தைச் சற்று மதிக் காமல் ஒருவாறு விடுத்தனன். உலகில் மாந்தர்கட்குத் துக்கந் தான் பெரிதே யொழியக் குதூகலம் சற்றும் பெரிதல்லவென் றறிவீர்களாக.)

சீடர்களே? இப்பூனையும் பால் குடிக்குமா என்னும்வாறி ருக்கும் முதன்மந்திரியை மன்னன்நோக்கி, அய்யா முதன்மந்

கிரியாரே? எனதருமைமைந்தனுக்குவந்தவிபத்து, அவன்மதிமயக்கென்றும், யான்வீணில் இல்லாததையுண்டென்று உமதிடம்வாதிட்டது, அவரவர் குற்றமென்று என்மனைவியெடுத்துக்கூறினது உண்மையே. அது விஷயத்தி லுமதுமீது குற்றங்கூற முடியவில்லை. ஆகிலும் அரசர்க்குரிய ஞாயநுட்பங்களைத் தெரிந்திருந்தும், அன்றுயான்வருந்திய வண்ணம், நீர் ஆணைப் பெண்ணெனக் கொணர்ந்து விடுத்து, அன்று மறுதினம் எனதிடம் வாதிட்ட திறமையை நீரேயறிவீர். அப்படிச் செய்தும் அத்துடன்விடாமல் என்னருமைப் புதல்வியை உமது புத்திரனுக்கு வதுவையுஞ் செய்து கொண்டீர். அது உமக்கு நன்மார்க்கந்தானோ என்றுகேட்டுப்பின், மேகவர்னனைப்பார்த்து, அடாநான் பெற்றுப் பெயரிட்டு வளர்த்த மேகவர்னா! ஈதெல்லாம் உன் மதிமயக்கால் வந்தத் திருக்கூற்றென் றறிவாய் மகனேயென்றயர்ந்தனன்.

முதன்மந்திரி, இராஜாதிராஜரே சற்றுக் கவனிக்கவேண்டும். நீர்எனைவருந்திக்கேட்டுக்கொண்டதை யித்தருணம் உமது மகனைக்கண்ட மகிழ்ச்சியால் யாதொன்றுந் தோன்றாமல் மனங்கொண்டது சமுத்திரமென்பதுபோல், இச்சமயம்சற்றும்மதியாமல் எனை வீண்தோஷத்துக்கு ளாளாக்குவது உமது நீதிக்கழகா? அவ்விதகாரியஞ்செய்யாவிடில் உங்கள்மூவருடையகதி யென்னாய்விட்டிருக்குமோ! அதனை முற்றும் தாங்கள் கவனிக்கவில்லையல்லவா! அவ்வாறு செய்ததால் தான், உமது புத்திரர் மேகவர்னர் அன்றிரவே மாய்கைவிண்டு, இதுவரையில் உயிர்பெற்று இங்ஙனம் வரலாயினர். அன் நன்றிசெய்த எனக்கு ஈசன் எனதறிவில்நின்று, உமதுபுத்திரியைக் கேட்கத் தூண்டினதும், உமக்கும் அவ்வீசன் என் புத்திரனுக்குக் கொடுக்கச் சம்மதிக்கச் செய்தவருமவராகையால், ரொனாணுசம்பந்தப்படிமுடிந்தது. இனிவெறுப்பதிற்பிரயோசனமில்லை. உமதுபுத்திரருக்கு இச்செங்கோலையீய்ந்து, இந்நாட்டையாளச்செய்வது தான் நீதி. நாவிதன் குப்பையைக் கிளறினால் ஏதேதுவருமோ என்றுரைத்தான்.

மன்னன், அ! அப்படியா! சரி, அப்பாமேகவர்னா? உலகில் காலைப்பிடித்தசனி ஓடவிட்டடிப்பதுபோல், நீ கொண்ட

மயக்கால் வெளியிற்சென்றதினால் இதுவரையில் துக்கத்திலிருக்கும் எங்களைநீயிங்குற்று மகிழச் செய்தனை. இனி உன்னரசைக் கைப்பற்றி, யாவரையுங் காப்பது உன்கடமை. என்னைக் காடு வாவென் றழைக்கின்றது. வீடு போவென்று தள்ளுங் காலமாய்விட்டது. ஆனதால் நீ வேறு எண்ணங்கொள்ளாமல் என் சித்தத்தின்படி நடப்ப துன்கடமை. தந்தைசொன்மிக்க மந்திரமில்லை. அ! என்வாய்குளிர மகனேயென்றழைத்து எத்தனைநாளாயிற்றதடா! வென்றுரைத்துத் துக்கித்தனன்.

மேகவர்னன். ஆ! என் தந்தையே? அறிவிலுயர்ந்தமந்திரிமார்களே? யான் திரிகரண சத்தியுடன் தெரிவிக்குஞ் சேதியாதெனில், யானன்றுமதிமயக்கால் வெளிநாட்டுக்குச்சென்று பலதுன்பம் பட்டுக் கடைசியாக நமது நகருக்கு மேற்பாரிசத்தில், நூறுயோசனை தூரமுள்ள ஜீவரத்தினபுரியையடைந்தேன். அந்நகரையாளும் மன்னன் புதல்வியை ஓர் அரக்கன் கொண்டு சென்று தானிருக்குங்குகையில் வைத்திருந்தனன். அதனையறிந்த மன்னன் வெகுபடைகளுடன் சென்று போராடினும். அவ்வரக்கன் அவர்கள் யாவரையும் பகல் முழுதும் நிர்ஜீவியாயிருக்கவும், இரவெல்லாம் ஜீவந்தரராகச் செய்துவிட்டிருந்தனன். பிறகு யான் அவ்விபத்தையறிந்து பராசத்தி யருளைப் பெற்று, அவனைக்கொன்றதன்றியில், அக்குடிகள் யாவரையும் முன்போல் ஜீவித்திருக்க அவள் கிருபையும் பெற்றுச் சுகப்படச் செய்தேன்.

சபையோர்களே! இனி கவனியுங்கள். உடனே அக்குகையிலிருந்த கற்புடையபெண்ணை மீட்டினேன். அந்நகர் மன்னன் எனதருமையறிந்து, தன்புத்திரியை எனக்குக்கொடுத்து, அந்நாட்டையுந் தத்தஞ்செய்ய, எனக்குப் பிள்ளைகளும் பெண்களும்பிறந்து, அதிமேன்பாட்டுட னரசுபுரிந்து வரும் யான் ஓர் தினம் தனியேயிருந்து உங்கள் யாவரையும் நினைந்து, யானடைந்த துக்கத்துக்கு அளவே கிடையாது. பிறகு உங்களைக்கண்டு யான் செய்துவிட்டுச் சென்ற குற்றத்தை மன்றாடிக் கேட்டுக் கொள்ள வேண்டி இங்கு மாறுவேடத்துடன் வந்துற்றேன். உங்கள்சேதி முழுமையுந் தெரிந்தேன். யான் மிக்க சந்தோஷமுங் கொண்டேன். என்மனதில் யாதொருத்ரோதமு

மில்லை. ஆகையால் என்னுடன் நேசித்துப் பள்ளியில் வாசித் திருந்த 'சந்திரகாந்தன்' நமது குழந்தைக்குக் கணவனுகி ஓர் அருமைப்புதல்வனையும் பெற்றிருப்பதால், எனக்குப்பதிலவனை இச் செங்கோலைத்தாங்கி அரசாளச் செய்விப்பது எனக்கு முழு சம்மதம் என்று கூறினான்.

அவ்விதம் மேகவர்னன் அன்புகூர்ந்து மிகு கெம்பீரமாய் யாவரு மறியக்கூறிய மொழிகளைக்கேட்டச் சபையோர்கள், ஆ! இம்மேகவர்னன் எக்கொற்றத் தன்மையுடையவனெனில், சிபி சக்கிரவர்த்திக்கும் மேன்பாடுடையவனென்றும், கௌரவருக்கும் பாண்டுமக்களுக்கும் உயுத்தம் நேரிட, அதி பராக்கிரமம்பொருந்திய பரசுராமர் சீடனையும், சூர தீரனையும், முன் வைத்தகாலை பின்வாங்காக் கொடையாளியும், சூரியன் புதல்வனாகிய கன்னன் சவிசாசி விஜயனுடன் போர்செய்யுங்காலத்தில், கன்னன் பலமொடுங்கக்கண்ட தருமதேவதைகள் முன் நின்று அருச்சுனன் விடும் பாணங்களைக் கௌளீகரஞ்செய்யுந் திறமையை மகானுபாவனுகிய ஸ்ரீகண்ணபிரான் பிராமணனைப் போல் அக் கன்னனிடஞ் சென்று, ஏ! வள்ளலே? என்று புகழ்ந்து அத்தருமத்தைத் தானங்கேட்க, அப்போது நிஷ்களங்கமற்றக் கன்ன மகாராஜன்கொடுத்த ஈகை பெரிதல்ல, ஆ! இப்போது இந்நகர் செங்கோல் தனதென்றறிந்த மேகவர்னன் தன் மைத்துனர் 'சந்திரகாந்தருக்குத்' தந்து ஆளக் கட்டளையிட்டதுதான் மிகவுமாச்சரியம்! ஆச்சரியம்! என்று புகழ்ந்தாடினார்கள்.

மன்னன், சபையோர்களே? கோட்டையிற் பிள்ளைபிறக்கினும் அன்று போட்டபுள்ளி மாறுதென்பதுபோல், என் தவத்தால்வந்த தனயன் மதியையும் விதியையும் உற்றுநோக்கில், மதியைக்கு இவனை இங்குவாழ்ந்திருப்பதைக் கெடுத்தமையால், விதியும் மதியும் ஒன்றுகூடி வெளிநாட்டையாள வழிவிட்டது. ஆனதால் என்புத்திரன் கூறினதுபோல் என் மருகனாகிய 'சந்திரகாந்தனை' இந் நாட்டை யரசாளச்செய்வித்து, யானும் என் மனைவியும் எனது புத்திரனுளப்பட்ட ஜீவ ரத்தினபுரிக்குச் செல்லத் துணிந்துவிட்டேன். எனக்குப் புத்திரன் பெரிதேதவிர பொருள் பெரிதல்லவென் றறிவீர்கள்.

சந்திரகாந்தனுக்குத் திருமுடிசூட்டல்.

• அய்யா முதன்மந்திரியாரே? இனி தாமதிக்கப்படாது. இத்தினமே சுபதினமாகையால், உமது புத்திரனை யலங்கரித்து இங்கழைத்து வரவேண்டும். இந்நாடுமுதலிய சகல சுதந்தரமும் அவனதாகச்செய்து என் திருமுடியையுஞ்சூட்டி, ஆசிர்வதிக்க வேண்டும். ஆகையால், சீக்கிரம் என்றுரைத்தவுடனே, முதன் மந்திரி தன்புத்திரனை நன் நீராட்டி, நெற்றியில் நீறணியச்செய் வித்து, இராஜவுடுப்பு உடுக்கச்செய்து, மன்னன் சபைக்கு அழைத்துவந்தான். (அத்தருணம் சந்திரகாந்தன் தன்மைத்து னனாகிய மேகவர்னனைக்கண்டு ஆலிங்கனஞ்செய்தனன். ஆனல் மேகவர்னன் சந்திரகாந்தனுக்கு நல்வார்த்தைக் கூறுமல், தலை வணங்கி வெட்கி யிருந்துவிட்டனனென்றறிவீர்கள்.)

மைத்துனனாகிய மேகவர்னனை ஆலிங்கனஞ்செய்தும், சற் றுங் கவனிக்காம லிருப்பதற்குக் காரணம் ஏதாயிருக்கும், சரி-சரி, அறிந்தேன். அன்று நம்மைப் பெண்ணென்றுமதித்து வதுவை செய்துகொண்டு, அப்பள்ளியறையில் நமதுகரத்தைப் பற்றியிழுத்து, இக்கரத்திலிருக்கும் நாமதேயத்தைக்கண்டு மதி விண்டு, பிறகு நம்முகம்பார்க்க வெட்கி மானத்துக்கஞ்சி இத் தனைவருடகாலஞ் சென்றுவந்தமையால், இன்னும் அவ்வெட்க த்தையுட்கொண்டு, இங்கு நம்மைக்கண்டு வார்த்தையாட மன ங்கூசி இருக்கின்றூர்போ லிருக்கின்றதென்றெண்ணிய சந்திர காந்தன் அதிதுக்கமுற்றுப் பின்னும் மேகவர்னன் பாதத்தைப் பற்றிக்கொண்டு ஆ! ஆ! என தத்தியந்த நண்பரே? சரணம் சரணம்.

ஆ! என்ன நேர்மை! நாமிருவரும் மகாதேவனருளா லுதித்தோம். வளர்ந்தோம். ஒரே பள்ளியில் வாசித்தோம். பற்பல சாஸ்திர வுண்மைகளையறிந்தோம். நாமிருவரும் வேறு எண்ணங்கொண்டதில்லை. இப்போது யுக்தவயதுமடைந்தோம். கலங்காச் சித்தர்களையும் பொல்லாமாய்கை வந்தணுகிடில், நல் லறிவொழிந்து [illegible] கலங்கி, பிறகு உண்மைப் பொருளையறிந்து நடப்பதுபோல், நீரும் நடந்தீரேயொழிய உமது [illegible] றுமொன்றுமல்லவா. எப்போது நாம் மண்மீதிற் பிறந்தோமோ, நம்முடன் பெண் மாயைக்

கெடுக்கும்வாறு பிறந்ததென்றறிவீர் என்றுகூறி மேகவர்னன்
லஜ்ஜையைப் போக்கடித்தனன்.

அப்போது சந்திரகாந்தன் தக்க சமாதான நன்னெறிகூறி
யதைக்கேட்ட மேகவர்னன் அகமகிழ்ந்து, முகமலர்ந்து, அன்
புபாராட்டி, ஆ! என்னருமைத் தங்கைக்கு அன்புடைய மணா
ளராய் வாய்ந்தது சந்தோஷமே. யான்விண்மயக்கால் ஓடிச்செ
ல்ல, அச்சமயம்எனைப்பெற்றோர்கள் எனைக்காணமற்பட்டுக்
கத்தை யாற்றும்பொருட்டு ஓர் நற்சுதனைத்தந்து அவர்களாவி
யைக்காற்ற அன்புடைய மைத்துனரே? வந்தனம் வந்தனம்.
மதிதான் உயர்ந்ததென்றும், விதிதாழ்ந்ததென்று ஆன்றோர்
கூறினது உலகில் உண்மையாயினும், எனக்குமாத்திரம் மதியும்
விதியும் ஒன்றுகூடி வீண்மாய்கையி லகப்படச் செய்துவிட்
டது. ஆகிலும் பெரிதல்ல, யான் எவருமெண்ணற்கரிய வெண்
ணத்தை உமதுபால் எண்ணிப் பத்துவருடங்கழித்து இங்கு
யாவரையுங் கண்டதுபோல் உம்மைக் கண்டதால், கிஞ்சிற்று
வெட்கமுற்றிருந்தேன். அதனை மன்னித்து இச்செங்கோலைத்
தாங்கி, யாவராலும் புகழவோங்கி வாழ விரும்புகின்றேனென்று
கூறி யாலிங்கனஞ் செய்தனன்.

சீடர்களே? பிறகு மன்னன் தானிருந்த சிம்மாசனத்தை
விட்டிறங்கி, சந்திரகாந்தனைச் சிம்மாசனத்தி லிருக்கவைத்து
மாசிலாமணி பதத்தை பிணைந்து, ஜெயா விஜீபவா என்று
மூன்றுதரங் கூறித் தன் திருமுடியைத் தரித்து, செங்கோலையு
மீயக்கண்ட சபையோர்களும், மற்றுமுள்ள குடிகள் யாவரும்
பூமாரி பொழிந்து சந்திரகாந்தன் செங்கோல் நீடூழிவாழ்க
வாழ்கவென்று கொண்டாடினார்கள். மன்னன் உடனே அறு
சுவை பதார்த்தத்துடன் யாவருக்கும் விருந்தளித்து, மன்ன
னும், மன்னன்தேவியும், தங்கள் புத்திரி காந்தாமணிக்கும்,
பேரப்பிள்ளை சுந்தரவர்னனுக்கும் பல ஆசிகள்கூறி, அரண்
மனையைவிட்டு வீதிக்கு வந்துவிட்டனர்கள்.

அச்சமயம் மேகவர்னன், தன் சகோதரியைக் கண்டு
அம்மா குழந்தாய்! உன் சகோதரன் இங்கில்லையேயெனு மேக்
கங்கொள்ளாதே, அடிக்கடிக்கு யானிங்குற்று உனையும், உன்
குழந்தையையுங்கண்டு மகிழவருவேன். ஆ! கண்மணே? உன்ன

ழகுக்கும், உன்குணத்துக்குந் தக்க கணவன்தான் வாய்த்தனன். அவனோ மிகுநல்லவன். அறிவாளி. இராஜநீதி நன்குணர்ந்தவன். ஆகையால் இராஜசபையில் அரசுக்குரிய காரியங்களைநடத்துங் கால் சிலசமயம் வருத்தமடைந்து உன் ஆளன் உனதிடம் வருவானாகில், நீ அன்புபாராட்டி சமயோசித வார்த்தையாடுவாய். இதுதான் பதிவிரதா விரதம். கணவன் உண்டுகளித்தபின் நீ உண்பாய். பதி நித்திரைபோந்தபின், நீ நித்திரைசெய்வாய். உன் சேடியர்களையும், இன்னு மற்றுமுள்ளவர்களையும் சற்றும் மனம்நோக வார்த்தையாடாதே. அம்மா? நமது தாய் தந்தையர்கள் இவ்வரண்மனையை விடுத்து வெளியிற்சென்றிருப்பதால், யான் போய்வருகின்றேனம்மா! வாழி-வாழி என்றாசீர்வதித்து விட்டுத் தாய்தந்தைய ரிருக்குமிடம் வந்துசேர்ந்தான்.

சீடர்களே? உலகிலுள்ள ஆன்மாக்களை வினை யெவ்வித வழிக்கு இழுத்துப்போவதைக் கவனியுங்கள். யாரைவிட்டது சனி. மன்னாதி மன்னனாயிருக்கினும் வினையை யனுபவித்துத் தான் தீரவேண்டும். சரி, பிறகு நடந்தவாற்றைக் கூறுவேன் கேட்பீர்கள். மேகவர்னன் தாய்தந்தையரிடம் வந்துசேர்ந்தவுடன், சந்திரகாந்தன் இரதத்தைச் சிங்காரித்து வரச்செய்ய, மன்னனும், மன்னன்தேவியும், மேகவர்னனும் யாவருக்கும் வந்தன வழிபாடுசெய்து மூவரும் இரதத்தி லாரோகணித்துச் சாரதியை இரதத்தை நடத்த வுத்திரவு கொடுத்தனர்கள்.

அப்போது மேகவர்னன், அப்பா சாரதி? இரதத்தைச் சற்று மெத்தென நடத்திக்கொண்டுபோய், இந்நகர் வெளியிலிருக்கும் தென்னந் தோப்புக்கு நேராய்விடுவாயென்று கட்டளையிட்டவுடனே, இரதம் அங்குசெல்ல, உடனே மேகவர்னன் இரதத்தைவிட்டிறங்கி, தன் இரதத்தின் மீது ஆரோகணித்துத் தன் சாரதிக்கு எச்சரிக்கைச்செய்தான்.

பிறகு, அவ்விரண்டு இரதங்களையும் சாரதிகள் வனம், வனாந்திரம், மலைகள், குன்றுகளையுங் கடந்து ஐம்பதுயோசனை தூரத்தில் நடத்திவந்தனர்கள். அங்கு குன்றுகள் முட்செடிகள், பலவிதமரங்கள் ஆகாயத்தையளாவிய காடாயுமிருந்தது. ஜீவரத்தினபுரியினரசன் புத்திரியை குகையிலடைத்துவைத்திருந்த அரக்கன் தங்கையாகிய ஜின்மூகியெனும் பெண்ணரக்கி அங்

கோர் பாறைமீதிருந்து, "அய்யோ! நாம் நரமாமிசம் தின்று நெடுநாளாயிற்றே. இங்கு யாரும் வரக்காணேனே. நமது அண்ணனிருந்தாலும் நாம் கேட்டதைக் கொணர்ந்து கொடுப்பான், அவனும் ஒரற்பமனிதனால் மாண்டனன். ஆ! ஆ! இதென்ன பூமி கிடுகிடென்றாடுகின்றது. சரி, யாரோ இரதக்காரர்கள் வருகிறார்கள்போற் காட்டுகின்றன. நமததஷ்டத்தின்பலனே பலன்! (உற்றுக்கவனித்தல்) அடடா! அதோ இரண்டு இரதங்கள் வருகின்றன. அவைகளில் எத்தனை மனிதர்களிருப்பார்களோ! அவர்கள் யாவரையுந் தின்று களிப்பதே சரி! எமன் நம்மெண்ணத்தை யறிந்துதான் அவ்விரண்டு இரதங்களையும் இம்மார்க்கமாய்த் திருப்பியிருக்கவேண்டும் என்று தீர்மானித்திருந்தனள்.

சீடர்களே? இரதங்களும் அருகில்வரக்கண்ட அரக்கி ஆ! முன்வரும் இரதத்திலிருக்கும் மனிதன் எவ்வளவு அழகாயிருக்கின்றான். அ! இவன் மன்மதனாயிருப்பானா! அ! அம் மன்மதன் ரூபமில்லாதவனாயிற்றே. இவன் இரதங் கிட்ட நெருங்க நெருங்க என்மனம் வாடி வதங்குகின்றதே! ஐயோ! இவனழகு எத்தேவர்கட்கு மில்லையே! ஆ! என்ன காந்தியுள்ள தேகம்! இவன் இவ்விதநிறத்தைப் பெற்றிருக்குங் காரணந் தெரியவில்லையே! தேடக்கிடையாத் தேவனைப்போ லிருக்கின்றானே! இவன் செல்லும்வழி நாம் நாடிப்போய், இவன்மனைவியின் பாதம்பணிந்து, இவனுடன் சேர்ந்து கலவியை முடித்து வரலாமென்று யோசிக்கில், அவள் தின்னும்பழத்தை மற்றொரு பெண்ணுக்குத் தருவாளா! நாமே ரூபத்தைமாற்றி இரதிரூபங் கொண்டு இவனெதிற்சென்றால், நம்மைக்கண்டு கலந்தாட வருவானா! ஒருசமயம் ஏகபத்தினி விரதங்கொண்டவனாயிருந்தால், நாம் நாடியிருக்கும் எண்ணம் வீணாய்விடுமே! இதர்க்கென் செயலாம் என்று கலங்கி வாடித்திகைத்து நின்றிருந்தனள்.

சீடர்களே? அவ்வரக்கி மேகவர்னனைக் கூடிக் கலந்தாட வெண்ணங்கொண்டு துணிந்தவளுக்குத் துக்கம் ஏதென்று தீர்மானித்து நமது அரக்கிரூபத்தை மாற்றி பிரமன் சிருட்டியிலகப்படாத பெண்ணுருவெடுப்போம். அப்போது நமதழகைக் கண்டு மதிமயங்கி நம்மை நாடிவருவன். அச்சமய மவனை எங்

கும்விடாமல் நமது காரியத்தைப் பூர்த்தி செய்துகொள்வதே யுத்தமமென்று தீர்மானித்து, தேவர்களும், மகரிஷிகளுங் கண்டு மயங்கத்தக்கப் பெண்ணுருவெடுத்து, அன்னநடையுடன் ஓர் செடியின் பக்கம் மறைகிறதும், எட்டிமுகத்தைக் காட்டுகிறதுமா யபினயித்துக் கொண்டிருந்தனள்.

மாதாசெய்தது மக்களைக் காக்குமென்பதுபோல், அன்று புத்திர காமேஷ்டியாகத்தில் உண்டாகிய அமிர்தத்தை யுண்ணுந்தருணத்தில் மன்னன்தேவி மோகித்தபலனால் மேகவர்ணன் எதைக்கண்டிடினும் மதிமயங்கி வாடுபவனாகையால், அப்பெண்ணரக்கியி னழகைக்கண்டு வெறிகொண்டு தன்னைத்தான் மறந்து பிறகுதேறிச் சற்று நிதானித்து, இம்மாது சிரோன்மணியார்! இவளழகை யாருக்கொப்பிடலாம்! அ! இவள் வன தேவதையா! மேனாட்டு மங்கையா! அலது இந்திரன் சபையில் நடிக்கும் மாதர்களில் ஒருத்தியா யிருப்பாளா!

முத்துவீராயிச்சிந்து.

மேனகைரம்பை திலோர்த்தமையோ-மலர்
மீதிலிருக்கின்ற விலக்ஷுமியோ
வானமளாவியக் கானகந்தன்னிலே
வர்னமயிலாரோ தெரிந்திலேனே.

அய்யோ! பல துட்டமிருகங்கள் வாழ்ந்துவரும் இக்கானகத்தில் தன்னந்தனியே யிங்குற்றிருப்பவள் எவளாயிருப்பள்! (உற்றுநோக்கல்) சரி-சரி, முற்றுமறிந்தேன்.

இதுவுமது.

கால்கள்நிலத்தில் படுதலினால்-இரு
கண்கள்நிமையிங்கு கொட்டுதலால்
பூலோகமாதரி லிவளொருத்தியென்
றுரைக்குதேயென்மதி பராயரியே.

அய்யோ! ஓர்சமயம் நாம் கெடுவிட்டுவந்த நாள் தவறினதென்று நம்மீதிருக்கும் அன்பின் மிகுதியால், நமதுதேவி நம்மையழைத்துச் செல்லவந்தனளோ! இப்படிக்குத் தோழிகளிலாமல் தன்னந்தனியே மிருகங்களுலாவுங் காட்டிற்குவாராளே! இரவில் ஏதேனும் ஓர்சப்தங் கேட்பாளாகில் சற்றுத்திடுக்கிட்டு

அருகிலிருக்கும் தோழிகளையாவது, நம்மையாவது கட்டிக் கொள்வளே! பின்பு யாராயிருப்பள்? அலது, இக்காட்டில் வாழும் வனதேவதையா! அப்படிக்கிருக்கில் ஓர் கோயிலையுங் காணேனே! இதுவும் மதிமயக்கத்தின் கொடுமையா! ஒன்றுந் தோன்றவில்லையே யென்று கண்மூடி மானதபூசையால் தன் குலதேவதையாகிய பராசத்தியைத் தோத்தரித்தனன்.

அத்தருணம் எவ்வுயிரையுங் காத்திரக்ஷிக்கும் ஜெகதீஸ்வரி அன்புகூர்ந்து அசரீரியாய்த் தோன்றி, ஏ! பாலா? நீ யாதொன்றுக்கு மஞ்சேல். நீ யாரைக்கண்டு பலவிதவார்த்தைகளாடினையோ, அவள் மானிடப்பெண்ணல்ல. நீ முன்பு எந்த அரக்கனைக்கொன்று சாதித்தனையோ, அச்சண்டாளன் தங்கையென்று இவளை யறிவாய். இவளைக்காணுந் தேவர்கள் நடுங்குவாரெனில் மற்று யார்தான் நடுங்கார்கள். இவள் மிகு மாயவித்தைகள் கற்றவள். நரமாமிசந் தின்னக் காத்திருப்பவள். உங்களெல்லோரையுங் கொன்றுதின்ன வெகு ஆசைகொண்டு வந்த இவள் உன் அழகைக்கண்டு மோகித்துத் தன் நிஜரூபத்தைமாற்றி, உனைக் கலந்தாடி பிறகு கொன்றுதின்று களிக்கவந்த பெருஞ்சண்டாளியென் றறிவாயடா கண்ணே. நீ சற்று மஞ்சாமல் உனதிடமிருக்கும் பஞ்சாட்சர மந்திரத்தை மூன்று தரஞ் செபிப்பாயடா மகனே. அதிரூப வதியைப்போல் உருவெடுத்துவந்தவ ளிவளென்றறிவாய். ஆ! இவள் மகாசமர்த்தி. இவ்வனத்தில் தவஞ்செய்யுந் தபசிகளின் கருத்தைக் கெடுக்கின்றவள். இவள் பெருஞ்சண்டாளி. இவள் அரியபெரிய தவஞ்செய்து பரமசிவனிடம் பற்பல வரங்கள்பெற்றவள். இவள் செய்துவருந் துன்மார்க்கச் செய்கைகள் ஒன்றுசேர்ந்து இத்தினம் ஒழியப்போகின்றாள்.

அமிர்தமகிமையினால்வந்த அருமைப்பாலா? நீ இவளுடன் சமர்புரியும்போது சற்று மிளக்காதே. அத்தருணம் எனநினைந்து பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜெபிப்பாயாகில், அவள் மாய்கை சற்றும் நில்லாது. அச்சமயந் திகிலடைந்து பற்பல யோசனைசெய்து, உன் இரதத்தைப்பற்ற உன் அருகில்வருவள், அப்போது எனைநினைந்து உன் கரத்திலிருக்கும் வாளையோங்கி வெட்டுவாயாகில், தடையின்றி இம்மண்ணாசையை விடுத்து

ரௌரவாதி நகரஞ்சேர்வள். அன்றியில், உன் அன்னையால் அன்றடைந்த தோஷம் உனைச்சூழ்ந்து எதைக்காணினும் மயங்கி வாடச்செய்வது இன்றே முற்றும் ஒழிந்தது. இனி யுன் னாடுசென்று யாவராலும் புகழ்பெற்று நற் கீர்த்தியுடன் வாழ்வாய், வாழி வாழி சுதனேயென்றுரைத்து அந்தர்த்தியானமாய்ச் சென்றனள்.

அப்போது மேகவர்னன், தாயே? சரணம் சரணம் என்று போற்றிசெய்து, தன் மதியையும் விதியையும் வெறுத்துச் சாரதியைநோக்கி, அப்பா சாரதீ? நீ இச்சமயம் வெகு ஜாக்கிரதையுடன் இரதத்தை நடத்துவாய். யான் இக்கானகத்தில் வாழும் பாபி அரக்கியுடன் சமர்செய்து இவளைப் பாழ்படுத்தப் போகின்றேன். இவள் மாய்கையில் மிகு சிறந்தவளாம். இவள் நரர்களையே தேடிக் கொன்றுதின்பவளாம். முன்பு நமது நகரத்தைப் பாழ்படுத்தி, என்தேவியை யெடுத்தேகி குகையில் சிறைவைத்திருந்த அரக்கனுக்கு இவள் தங்கையாம். இவள் நம்மெல்லோரையுங் கொன்று தின்னவந்தவளாம். ஆகையால், நீ சற்றும் அஞ்சாமல் இரதத்தைச் சமயோசிதப்படி நடத்துவாய் என்று கட்டளையிட்டனன்.

சாரதி, அய்யனே? போற்றிபோற்றி, அப்படியே தங்கள் கருத்துக் கிசைந்தவாறு இரதத்தை நடத்திக் காட்டுவேன். தாங்கள் இக்கொடிய அரக்கியை யெங்குஞ் செலவிடாமல் நாசஞ்செய்வீர் என்றுரைத்து வெகுஜாக்கிரதையுடன் குதிரைகளின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டிருக்க, அச்சமயத்தில், ஜின்முகியெனும் அரக்கி அன்னத்தைப் பழிக்கும் நடையோடுங்கூடி மிகு நாணமுடையவள்போல் மேகவர்னன் இரதத்தைக்கிட்டித் தன் காலின் பெருவிரலினால் நிலத்தைக்கிண்டிக்கொண்டே, ஏ! மன்னர்கோமானே! வந்தனம் வந்தனம். யான் இவ்வனத்தில் தவஞ்செய்யும் ஓர் மகரிஷியின் புதல்வி. எனக்கு இன்னும் மணமாகவில்லை. இவ்வழியாக அனந்த இராஜாக்கள் வருவதையும் போகுவதையுங்கண்டுமிருந்தும், என் மனதுக்கு இச்சைப் படவில்லை. யானே தேடி வலியவந்ததால் என்மீதில் சந்தேகம்வேண்டாம். பெண்கள் மனதுக்கிசைந்த மணாளனைக்காணில் மயங்கி வாடார்களா.—

ஆ! என் கருத்துக்கிசைந்த கண்ணாளரே! என் அழகுக்கேற்ற மணாளர் நீரே யாக்கும். கைநிறைந்த பொருளைப்பார்க்கிலும், கண்ணிறைந்த புருஷனைத் தேடவேண்டுமென்பது தங்களுக்குத்தெரிந்ததாகையால் அடியாள் மனம் தங்களைப் பாணிக்கிரகணஞ் செய்துகொள்ளப் பிரயத்தனப் பட்டுவிட்டது. அதோதோன்றும் மரங்களடர்ந்த தோப்பில்தான் என்பிதா தவஞ்செய்கின்றார். மாசிலாக்குணம்படைத்த என்கண்ணாளா! என் பிதாவைக்கண்டாகிலும் பேசித் தீர்மானித்து மங்கிவாடும் மங்கையாகிய என்னைச் சேர்த்தணைத்து என்காரியத்தை முடிக்க வேண்டுந் துரையே! அ! அ! என்சாமி! உமது அழகைக் காணக் காண யாதொன்றுமீதுங் கருத்து நாடவில்லையே! இப்படிக்கு உம்மை நாடிவருந்தியும், என் மீது கிருபைவையாமல் மௌனஞ் சாதிப்பது தங்களைப் போன்ற கன்னியர்கட்கு அழகல்லவே துரையே—

ஏ! சோமனை நிகர்த்தச் சுந்தரக் கடலே! யானிவ்வாறு வருந்தியும் வாய்பேசாம லிருப்பது தருமமல்லவே. அன்றியில் யான் சிறுவயதா யிருக்கும்போது எனதருமைத் தந்தை அனந்த மாயா வித்தைகள் கற்பித்து மிருக்கின்றார். என்னைச் சாதாரணப் பெண்களிலொருத்தி யென்று நினைக்கவே வேண்டாம். எவ்வுருவெடுக்க யான் நினைத்தபோதிலும் தடையின்றி யெடுப்பேன். ஆ! என் அன்பே! இங்கு அடியாள் மனம்போல் தாங்கள் நடக்காவிடில் தங்கள் முன்னிலையிற்றானே என் ஆவியைப் போக்கடித்துக்கொள்வேன். அப்போது பெண் ஹத்தியும்மைச் சூழ்ந்து வாட்டும். எனக்கு என் தந்தையைவிட திக்கு வேறொருவரு மில்லை பிராணநாதா. ஆகையால் நீர் என்னைக்கலியாணஞ்செய்து கொள்வதற்கு முன், எட்டுவித விவாகத்தில் காந்தர்வ விவாகம் நடத்திக்கொள்ளலாம் வாரீர் என்றடி பணிந்து வாடிநின்றிருந்தனள்.

அவள் உரைத்த வார்த்தைகளைக் கேட்டு மேகவர்னன், ஆ! இவளுரைத்த வார்த்தைகளை மற்றொருவன் கேட்பானாகில் இன்னமுந் தாமதித்திருப்பானா! இத்துஷ்டியும் அவனை அக்ஷணமே வாயிற்போட்டுங் கொண்டிருப்பாளல்லவா! நாம் இப்பாபியின் முழுசரித்திரந் தெரிந்து கொண்டிருந்தும், இவளைச்

சற்றும் மதிக்கப்படாதென்று மதித்து, அடகொடிய வம்சாவளியிற் பிறந்த கோதுளபாபீ? என்னை யாரென்று மதித்து என்னருகிலுற்று யாதொரு பயமிலாம லணைந்து சுகத்தைப்பெற வந்தாய்! சபாஷ்! உன்னைரொம்பவும் மெச்சினேன் அடி குலநாசக்காரியென்று கடுங்கோபத்துடன் கூறினான்.

அப்போது அவ்வரக்கி மிகவும் வாடி, அய்யோ! நாம் நாடிவந்த வெண்ணம் பழுதாய்ப்போய் விடும்போற் றோற்றுகின்றதே! இன்னொருவனா யிருப்பானாகில் நாம் வலியவந் துரைத்ததைக்கேட்டு அகமகிழ்ந்து, புத்தி தடுமாறி, நமது பாதம் பணிந்து எவ்வித அவஸ்தைப் படுவான்! ஒரு சமயம் இவன் நபுன்சகனா யிருப்பானா! சி-சி, அப்படிக் கொற்றவனல்லன். இவன் மகா சூரனாகக் காணப்படுகிறான். இவனழகுக் கேற்றப் பெண்ணை இதுவரையில் வதுவைசெய்து கொள்ளாமலிரான். அ! இன்று நாம் எழுந்தவேளையின் இலக்ஷணமா! நம்மைப் பெண்ணென்று மதிக்காமல், நமது ஜாதியையும் நம்மையும் கடீரமொழியால் தூஷிக்கலானானல்லவா! நமது குணஞ்சற்றும் இவனுக்குத் தெரியவில்லை. இன்னுமிவனுடந் தாழ்ந்து வார்த்தையாடி நமது கருத்தின்படி முடித்துக் கொள்வதுதான் நல்வழியென்று தீர்மானித்து—

ஆ! என் துரையே! ஏன் என்னைபித்தருணங் கடிந்துரைக்கலானீர்? யானோ அழகில் மிக்கவள். இதுகாறும் எவரையுங் கண்ணெடுத்துப் பாராதவள். நீர் என்மீதில் என்ன மாயப்பொடி போட்டீரோ! என்னறிவு முற்றுங் குன்றிவாடி திகைக்கின்றேனே! அல்லது யானே உமது இரதத்தின் மீதேறி வந்து ஓர் திறைச்சீலையை இரதத்தின் குத்துக் கால்களுக்குக் கட்டி என்னைச்சேர்ந்தலையை என் அறிவு தூண்டுகின்றதே! அன்புடையானை ஆளன் சேர்ந்து சுகிக்கப் பகலென்றும் இரவென்றும் வேண்டுவதில்லையே! அந்தோ! யான்பெண்ணாய்ப் பிறந்து என் தந்தையால் பற்பல வித்தைகளைக் கற்றுக்கொண்ட சுகம் இன்று கண்கலங்கி மனம் புண்பட்டு வாடுகின்றேனே யென்று துயருற்று மேகவர்ணன் இரதத்தின் மீதேற முயர்ச்சி கொண்டனள்.

அப்படி அவள் முயற்சியைக்கண்ட மேகவர்னன், ஆ! இவள் தூஷியே துணிபு. இவளுக்குக் காலமுடிவாகிவிட்ட படியால்தான், நன்மை வழிமறித்துத் தன்கருத்தில் நாடியதைப் பூர்த்திசெய்துகொள்ள வெண்ணங் கொண்டனள். சரி, பராசத்தியை மானதபூசை செய்து, பஞ்சாக்ஷரத்தை யெடுத்து அவள்மீது படும்படி தூவினன். உடனே அவ்வரக்கியின் பெண் ரூபமாறி, அரக்கி ரூபங்கொண்டு வெகு ஆர்ப்பாட்டஞ் செய்யத் தலைப்பட்டனள். அப்போது பகல் இரண்டு மணியாகவே இரதத்திற் பூட்டிய அசுவங்கள் ஜலமருந்த எண்ணங் கொண்டதை யறிந்தசாரதி அசுவங்கட்கு அருகிலிருந்தக் கடாகத்தில் நீரை யருந்தச் செய்தனன்.

ரீடர்களே? பின் இரதத்திலிருக்கும் மேகவர்னன் தந்தை, ஓர் ரூபவதிபோல்வந்ததும், தன்புத்திரன் மேகவர்னனிடம்பேசியதும், பிறகு அவ் அரிய ரூபஞ்சென்று இராக்ஷசி ரூபங்கொண்டுவெகுஆர்ப்பாட்டஞ்செய்யும் தீமையைக்கண்டுதிகைத்துத் தன் மனைவியைநோக்கி அடிமாதே? ஈதென்ன விபரீதம்! நமது குழந்தை மேகவர்னன் முன்னாகவும் நாம் பின்னாகவும் வர, யாரோ ஓரழகுடைய மாது முன் இரதத்திற் செல்லாநின்ற நமது மகனைக்கண்டு எதைப்பற்றியோ வெகு தாபந்திரியப் பட்டுக்கொண்டிருந்தவள், இப்போது அவ்வரியரூபம் மாறி, அரக்கிரூபங்கொண்டு அவள் மகனையெதிர்க்க ஆயித்தப்படுகின்றனளே! யாம் வரும்வழி இக்கொற்றக்காடா யிருக்குமென்றறிந்திருப்பனேயாகில், வில்லும் அம்புங் கொணர்ந்தே யிருப்பேன். நமது மகன் அவளுடன் போர்செய்து ஜெயக்கொடி நாட்டுவதற்கு யாதொரு பக்கபலமில்லையே என்றயர்ந்து, அய்யோ! என்செய்வேன்! அரசர்கள் வெளிநாட்டுக்குச் செல்கில், நிராயுதபாணியாய் வரப்படாதென்று இன்றுதா னறிந்தேன். ஆ! விதியேயென்று துக்கமுற்றனன்.

பிறகு மன்னன்தேவி தன் மன்னனைத்தேற்றி, ஏ! நாதா! தைரியம் புருஷலக்ஷணம். வல்லவனுக்குப் புல் ஆயுதமல்லவா. நமதுநாட்டில் தாங்கள் சிம்மாசனத்தி லிருக்கும்போது, அங்கிருந்த யாவருங்கேட்க, நமது மேகவர்னன் உரைத்ததைக் கவனித்தீரில்லைபோல் தோற்றுகின்றது. மகிமையக்கால் நம் யாவ

ரையும் விடுத்து, நாமிப்போது செல்லாநின்ற ஜீவரத்தின புரியை, முன்பு நிர்ஜ்ஜீவி புரியாக்கிய அக்கொடிய வரக்கனை இலேசில் பராசத்தியின் கிருபையினாற்கொன்று ஜெயம்பெற்ற விபரத்தைக் கூறினதைத் தாங்கள் நன்குணர்ந்திருந்தும், என் இப்படிக்குத் துக்கப்படுகின்றீர். அப்பரமேஸ்வரிதான் இன்றும் நமது மகனைக் காக்கப்போகின்றாள். தாங்களே மேகவர்னன் ஜெயுத்தைக்கண்டு களிக்கப்போகின்றீர் என்று தைரியவார்த்தைக் கூறினாள்.

மன்னன், அப்படியா! ஆம், ஆம். இப்போது நீ ஞாபகப்படுத்தினதினால் எனதறிவிற்கு நன்கு விளங்கிற்று. அடி பேதாய்? அதோநிற்கும் அகோரரூபமுடைய துஷ்டியை நீ பார்ப்பாயடீ! அப்பேர்க்கொற்ற அகங்காரியுடன் நமது குழந்தை மேகவர்னன் தனியேநின்று யாதொருவர் உதவியிலாமல் எவ்வாறு சமர்புரிந்து ஜெயம் அடைவானென்று சந்தேகித்துத் துக்கித்தேனே யொழிய, இவன் பராசத்தியி னருளைப் பெற்றிருப்பவனென்று சற்று முணராமற்போனேன். சரி, சரி, யாவரையுங் காப்பவளும் அவளே, அழிப்பவளுமவளே, ஆதலால் இனி அவள் மாளும்விந்தையைக் கவனிக்கவேண்டுமென் றுரைத்தனன்.

சீடர்களே? பிறகு நடந்தேறிய காக்ஷியைக் கவனிப்பீர்கள். நரரூபமாயிருந்து பஞ்சாக்ஷர மகிமையினால் அரக்கிரூபங்கொண்டு, அகோரசேஷ்டைகளைச்செய்து அகங்கரித்துநிற்கும் அரக்கியோசிக்கலானாள். எவ்வாறெனில்:—ஆ! நாம்கொண்ட வெண்ணம் சற்றும் முகிவுபெறாமற் போயிற்றல்லவா! இவ்விரதத்திலிருக்கும் மன்மதனிலும் மிக்க வழகுடையதீரன், நம் மாயவித்தையைப் பார்க்கிலும் அதி மேன்பாட்டை யுடையவனாகக் காணப்படுகின்றான். இனியிவன் சற்றும்நம்மனம்போல் இணங்கி மகிழ்ந்தாடவாரான். ஆனதால் இவனைச் செல்லவிடாமல் துவம்சப்படுத்தி அங்கம் மகிழத் தின்பதே சரியென்று தீர்மானித்து மேகவுர்னனை கடுகடுத்து நோக்கினாள்.

அப்போது, அவ்வரக்கியின் நோக்கத்தைக்கண்ட மேகவர்னன், அதிகோபாவேசங்கொண்டு, அடீபாபி! நீயோர் தபசியின் மகளென்றும், மாயவித்தையில் மிகு தேர்ச்சியுடையவ

ளென்றும், கன்னிகழியாப் பாவையென்றும், எனை வதுவை செய்து மகிழ்ந்தாட வந்தவளென்றும், தாசி, வேசி, குடிசெட்டிகளிடங்கூடக் காணக்கரிதாகிய அபிநயஞ்செய்து, எனை யழைத்தாயல்லவா! இக்கானகத்தில் இன்னாள் இனியாளாக வந்திருக்கிறாள் என்று முன்பேதெரிந்தேன். இப்போது பழைய கந்தலே கந்தலாய் நின்றாயல்லவா. உன் சாமர்த்தியம் எனதிடம் ஒன்றேனுஞ் செல்லாதடீ. யானின்னானென் றுனக்குத்தெரியாதல்லவா. இப்போது தெரிவிக்கின்றேன் கேளடி அகத்தாலழியப்போகும் இராக்ஷசி யென்று அவ்வரக்கி திடுக்கிட அதட்டியுரைக்கலானான்.

கேளடீ மகா பாவங்கள் யாவும் ஒன்றுசேர்ந்து உருவெடுத்து எனைத்தடுத்து, உன் நல்உயிரைப் போக்கிக்கொள்ள ஆசையுற்று நிற்கும் கள்ளீ? உன்குலத்துக்கு வித்தாய்த்தோன்றி ஆயிரத்தெட் டண்டங்களையும் ஆண்டு அகங்கரித்திருந்த சூரபத்மனை யெவ்வாறு ஓர்வேல்சென்று பிளந்தெறிந்ததோ அதுபோல், ஜீவரத்தினபுரியை நிர்ஜ்ஜீவி புரியாகச்செய்து, அப்பட்டினத்தரசன் புத்திரியைக் களவாடிச்சென்று, தான்வாழ்ந்து வரும் குகையின்கண் வைத்துக் காத்திருந்த கொடிய அரக்கனை, இதோ என்கரத்திலிருக்கும் அரியவாளுக்குப் பலியாக்கிய தீரசூர பராக்கிரமம் பொருந்தியவன் யான்தானென் றறிவாயடீ. இதன்றியில் இவ்வாளே உனைக்கொல்லக் காத்திருக்கின்றதடீ என்று கூறினான்.

அத்தருணம் மேகவர்னன் மொழிந்த வார்த்தையை அரக்கிகேட்டுத் திரேகம்பதைத்து, ஆ! அண்ணா! இவ்வர்ப்ப மனிதனாலேயா நீவீணாய் மாண்டாய்! என் தந்தையையொத்த அண்ணலே! உனைக்கண்ட தேவர்கள் யாவரும் அஞ்சி நடுங்குவாரெனில், இவ் வர்ப்பப்பயலால் மாண்ட சேதியைக்கேட்டயானினும் மூளாமலிருப்பது நமது குலத்துக்கு அழகல்லவே. ஆ! யாருக்குமடங்காத ஆணழகுடைய அண்ணா! இம்மண்ணைபாளுஞ் சிறுமனிதனை இதோ கொல்வேன். பழிக்குப்பழி வாங்காமலுயிர்தரிக்கேன். இவன் ஏதோ கிஞ்சிற்று அழகாயிருக்கின்றானல்லவா வென்றெண்ணிக் கட்டியணைய நற்றினேன். உனைக் கொன்ற துஷ்டனென்று முன்பே யறிந்திருப்பேனாகில்

இவன் கெதி யென்னய்விடுமோ. ஆகிலும் பெரிதல்லவென்று தீர்மானித்து—அடே பெண்களைமயக்கும்பெரும்பேயே! நீயா என்னருமை அண்ணனைக்கொன்றனை! சரி-சரி, பழிக்குப்பழி வாங்காமல் உன்னையும் உன்னுடன்வந்திருப்பவர்களையும் விடேன். எனதண்ணனை அக்கிரமமாக நீ கொன்றதினால்தான் உன் மதி வேறுமார்க்கமாய்ச் செலவிடாமல் இவ்வழியாய்வந்து என்கரத்தால்மாள இங்குகொணர்ந்தது. அய்யோ! பெண்ணால்மாளவா நீ பிள்ளையாய்ப் பிறந்தாய்! எனதண்ணன் சேதியைக்கேட்டுத் துக்கித்திருப்பதை, உன் திருமேனியினழகு அத்துக்கத்தை யாற்றப் பார்க்கின்றதே! ஆகிலும் உனை விடுவதில்லையென்று கோட்டாவி வாயைத்திறந்து விடுத்தனள்.

நேயர்களே! அவ்வண்ணம் அவ்வரக்கி விடுத்தர்க்குக் காரணம் யாதெனில்,—அவள் கோபங்கொண்டு கோட்டாவிவிட வாயைத்திறந்தால், உடனே வாயினின்று பலவித அரக்கர்கள் வெளியில்வந்து அவளுடன்சேர்ந்து யுத்தம் புரிவார்கள். இது ஈசன்தந்த வரமென்றறிவீர்கள். அதுபோல் அவள் வாயினிடமிருந்து ஓரரக்கனேனும் வாராமையைப் பற்றிக் கண்ணீர்விட்டழுது, ஆ! ஜெகதீசா! இச்சமயத்தில் நீர்தந்தவரம் தவறிப்போயிற்றே! என் மரபிற்குறிய மாய்கைகூட இவனிடம் உதவாததுபோற் றோற்றுகின்றதே! இனி யாதுசெய்வேன் என்று மிகு துக்கித்து வாடிநின்றனள்.

அப்போது மேகவர்னன் வில்லைவளைத்து டங்கார ஓசை செய்து, இடியாஸ்திரத்தை யெடுத்து மானதபூசைசெய்து விடுத்தனன். அரக்கி ஆ! ஆ! இவனகம்பாவத்தை யென்னென்று சொல்வேன்! நாமென்னமோ பலவித யோசனையிலிருக்க, மிஞ்சி பாணத்தை விடுத்தானல்லவா! அப்பாணத்தின் வல்லமையையொடுக்குகின்றேன் பாரென்றுகூறி, ஆவேசங்கொண்டவள்போற் கிளம்பி, அவள்கரத்தால் அதனைப்பிடித்து இருதுண்டா யொடித்தெறிந்தனள். அவள் செய்கையைக்கண்ட மேகவர்னன் சூரியாஸ்திரத்தை யெடுத்துவிடுத்துச் சிங்கனாதமியால்செய்தனன். அவ்வஸ்திரத்தைக்கண்ட அரக்கி நம்மையெரிப்பதற்குச் சூரியாஸ்திரத்தை விடுத்தானல்லவா! இது

நமக்கு வாழைப்பழந்தானே யென்று சந்தோஷித்து, அதனைப் பிடுத்து வாயிற்போட்டுக்கொண்டு ஏப்பமிட்டனள்.

இவ்வாறு செய்துவரும் அரக்கியைநோக்கி, அடீ துஷ்டப் பிசாசே? நீகற்றிருக்கும் வித்தை எனதிடஞ் சற்றுஞ் செல்லாது. இதோபார் உன்மார்பைப்பிளக்க ஓர் திவ்யாஸ்திரம் விடுகின்றேன். அதனுடன் உன் சாமர்த்தியத்தைக் காட்டித் தப்பித்துக்கொள்வாயடீ யென்றுகூறி, பாசுபதாஸ்திரத்துக்கொப்பற்ற சிலீமுகாஸ்திரத்தையெடுத்து மானதபூசைசெய்து வில்லின் நாணியிற்பூட்டி குறிபார்த்து விடுத்தனன். மின்மினிப்போல் வெளிச்சத்தைக்காட்டி வருவதைக்கண்ட அரக்கி அ! இது என்ன காலவித்தியாசமா யிருக்கின்றது. இப் பகற்காலத்தில், மின்மினிப்பூச்சியைக் காண்கின்றோம் என்று! ஆச்சரியமுற்றுத் திகைத்து நிற்குஞ்சமயத்தில், அப் பாணம் படாலென்றுவந்து அவள் மார்பைத்துளைத்து ஊடுருவிச்சென்றுவிட்டது.

அப்போது அவ்வரக்கியின் ஆவிதத்தளித்துப் பெருமூச்சுவிட்டு, இரத்தம் ஊற்றினின்று வெளிப்படுவதுபோல் குபீல் குபீலென்று வருவதைக்கண்ட அரக்கி, வெகு கோபத்துடன் சென்று, ஓர் மலையைப்பிடுங்கி மேகவர்னன் இரதம்பொடிபட வீசியெறிந்தனள். மலைவரும் வேகத்தைக்கண்ட மேகவர்னன், வெகு ஜாக்கிரதையுடன் வேலாயுதத்தை யெடுத்து அதிபக்தியுடன் பூசித்துவிடுத்து, அம்மலையை இருகூறாக்கித்தள்ளினன். அதை யரக்கிகண்டு மனம்பொங்கி, இவனைச் சற்றும்விடப்படாதென்றெண்ணி அருகிலுற்று, இரதத்தைத் தூக்கி ஆகாயத்தில் விட்டெறிய வெண்ணங்கொண்டு எடுக்க இசைந்தனள்.

அவள் குறிப்பையறிந்த மேகவர்னன் இதுவே தக்கசமயமென்றெண்ணி, பராசத்தியை மானதபூசையாற் பூசித்துத் தன் கரத்திலிருந்த அரியவாளை யோங்கிவெட்ட, அவ்வரக்கி அவ்வாளால் துண்டுபட்டு மண்மீதுசாய்ந்து ஆவியைத் துறந்தனள். அப்போது அவனன்னைதந்தை யிருவர்களுங் கொண்டிருந்த திகிலைநீக்கித் தங்கள் இரதத்தை மேகவர்னன் அருகில் நடத்தச்செய்து, அடா தேடக்கிட்டாக்கரும்பே! எங்கள் திகிலைப் போக்கடித்தச் சுதனே! வாழி-வாழி, உன்வெற்றிக்கு

மிகவுமெச்சினேம். இனி தாமதிக்காமல் ஜீவரத்தினபுரியை நாடிச்செல்லச் சாரதிக்குக் கட்டளையிடுவாய் கண்ணேயென்று ஆனந்த பாஷ்பத்துட னுரைத்தனர்கள். மேகவர்னன் பெற்றோர் பாதம்போற்றி, சாரதிக்கு இரதத்தைத் துரிதமாய்நடத்தக் கட்டளையிட, உடனே சாரதியும் குதிரைகட்கு ஆயாசந் தோன்றாமல் இரதத்தைநடத்தி ஜீவரத்தினபுரியில் மாலை ஆறு மணிக்கு ஓர் நந்தவனத்தில் கொண்டுபோய் யாதொரு துன்பமிலாமல் நிறுத்தினர்கள்.

அப்போது மேகவர்னராஜன் வந்துவிட்ட சேதியைக் கேட்ட மந்திரிகள் யாவரும்வந்து வந்தனஞ்செய்து கைலாகு கொடுத்துமூவரையும் இறக்கினர்கள். மேகவர்னன் தன்தாயை நோக்கி, எனைப்பெற்ற தாயே? நீர் அந்தப்புரஞ் செல்வீர். யானும் என் தந்தையும் சபைக்குச் செல்கின்றோமென்று கூறிவிட்டு, தான் சிம்மாசனத்திலிருந்து தன் தந்தையை மற்றோர் சிம்மாசனத்தி லிருத்தி, தானில்லாத காலத்தில் நடந்தேறிய விஷயங்களை மந்திரிகள் உரைக்கக்கேட்ட மேகவர்னன் மந்திரிகளே? யானும் என தருமைத்தந்தையும் இன்று அலுத்துவந்தமையால், மற்ற விசேடங்களை நாளையதினங் கவனிக்கின்றேன் என்று கொலுவைவிட்டு நீங்கி தானும் தந்தையும் அந்தப்புரத்துக்குச் சென்றனர்கள்.

சீடர்களே? மேகவர்னன்மனைவி சௌந்திரவல்லி தன்கணவனைப்பெற்ற அன்னை வந்திருப்பதாகத் தோழிகளாற் கேள்வியுற்று, அதியாவலுடன் தானும், தன் மக்களுடன்வந்து தன் மாமிபாதத்தில் பணிந்தனள். அப்புண்ணியவதி தன்மருமகளை வாரியெடுத்து மார்புடன்தழுவி முத்தமிட்டு, அம்மா எங்கள் குலம் விளக்கவந்த குணவதி? உனக்கு அநேக வாசீர்வாதந் தந்தேன். நீயும், உன்கணவனும், உன் அருமைமக்களும் சுகமே வாழ்வீர்கள். யானும், உன் மாதுலரும் உங்கள்கையால் பேறு பெறவந்தோம். எங்களுக்கு உங்களைவிட வுற்றதுணை யாரிருக்கிறார்கள், கல்யாணி, கல்யாணியென் றன்புமிகுதியால் வாழ்த்தினள்.

பிறகு, மாதுலரும் தன்கணவனும் வரக்கண்ட சௌந்திரவல்லி அகமகிழ்ந்து மாமா? யானும் என்மக்களும் உங்கள்

அருமைத்திருவடிக்கு நமஸ்காரம் நமஸ்காரம். உலகில்வாழும் பெண்கட்குத் தன்பத்தாவை யன்புடன்பெற்றெடுத்துவளர்த்த வுத்தம தாய் தந்தையர்களை, அப்பெண்கள் மாமாவென்று, வாய்கூசாமல் அழைத்து அவர்கட்குப் பணிவிடைசெய்வதைக் கண்ட என்மனம் ஆற்றொணாத் துக்கமுற்று, அய்யோ! நாமும் விருப்பமுடன் அழைப்பதற்குக் கொடுத்துவைக்காப் பாவியா யிருக்கின்றோமல்லவா எனும் ஏக்கம், இப்பத்துவருட காலமாக வருத்தங்கொண்டிருந்தேன். இன்றுதான் என்ஜென்மம் புனிதமாகி பெண்ணென்றுவரிசைபெற்றேன். அதிலும்யான் தங்கள் புதல்வரை யென்று கணவராக்கிக் கொண்டேனோ, அன்றே, எனைப் பெற்றோர்கள், இந்நாடுமுதலியயாவையும் தங்கள்மைந்தர் பாலீய்ந்து, மரவுரிதரித்துக் கொண்டு கானகம்புக்கித் தவமியற்றச் சென்றார்கள்.

எனை யடிமையாக்கி யாண்டுவரும் என்பத்தாவுக்குத் தந்தையான அன்பார்ந்த மாமா? அவ்வாறு எனைப்பெற்றோர்கள் சென்றநாள்தொட்டு, இந்நிமிஷம்வரையி லுங்களைப்போலொற்றக் கனிவுடையாரிலாமல் மிகு தாபந்திரியப் பட்டேன். இனி எனக்கொரு தாக்ஷியுமில்லை. மாமா? தங்கள்புத்திரர் ஒவ்வொரு சமயத்தில், அதிதுக்கங்கொள்வதுண்டு. அச்சமயம் ஓ! ஹோ! சபையிலேதோ ஓர் காரியத்தைப்பற்றி வழக்குகள் வந்திருக்க வேண்டும், அவைகளின் உண்மைகளை யறிந்துகொண்டு தெண்டிப்பதினால்வருங் காரியத்தைக்குறித்துத் துக்கிக்கின்றார்போலிருக்குமென்று, என் மூடமதியால் சற்றுவிலகினும், யான் அவர் உள்ளாந்திரியத்தை யறிந்தவ ளல்லேன். அம்மா மாமி? நீங்களுங்கவனிப்பீர்கள். சுமார் பதினைந்து தினத்துக்கு முந்தியோர்தினம் உங்கள்புத்திரர் எனதருகில்நின்று, அடீமாதே? யான் என்தேயத்தைச் சற்றும்மதியாமல், டிகம்பரியாகியிந்நகருற்று, உனைமாலைசூட்டி, இந்நாள்வரையில் இங்ஙனமிருந்தரசு புரிந்தும், தாய், தந்தை, தங்கையிலாவாழ்வும் ஓர்வாழ்வாகுமா! யான்வரும் சமயத்தில், யாவரையுங்கண்டுவர்த்தையாடி யவர்களனுப்ப யான் வந்தவனல்லவே யென்றும்:—

என்மாமா? மாமி? இனியவராலுரைக்கப்பட்டதைக் கவனிப்பீர்கள்: என்மணாளர் அதிதுக்கத்துடன், ஆ! தெய்வமே!

எனையிப்படி பெற்றோர்களையும் அருமைத் தங்கையையும் விடுத்துவர மதி விந்தையாய்த்தந்ததே, அவர்களெனைப்பற்றித் துக்கித்துப் புத்திரசோகத்தால் மாண்டனர்களோ! என்னமோ! யாதுந் தெரிந்துகொள்ளாமல், இங்கு மனைவியை யடைந்து, இன்பசுகத்தி லீடுபட்டு, மக்களைப்பெற்று வாழ்வதினால் வரும் பலன் யாதுங்காணேன். பெற்றோர்மனம்பித்து, பிள்ளைமனங் கல்லென்றும், ஆ! நாம்பெற்ற மக்கண்மீது பாசம்வைத்திருப்பதுபோல், நம்மைத் தவத்தாற் பெற்ற அருமை அவர்களுக்கல்லோ தெரியும் என்று பலவாறு துக்கித்து, அடீ மாதே? யானினி யிங்கோர்நிமிஷமேனுந் தரிக்கேன். யான்பிறந்த நாடு சென்று என்பெற்றோரைக்கண்டு, யான்செய்துவிட்டுவந்த குற்றத்தைமன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு, பத்துதினத்துக்குள் இங்ஙனம்வந்து சேருவேனென்றுகூறிச்சென்றவர், தங்களிருவரையும் அழைத்துவந்தெனக்குக் காண்பித்ததுபோல், தங்கள் புத்திரியாகிய எனதன்புள்ளமச்சியம்மாளையேனழைத்துவந்து காட்டவில்லை? உண்டும் பட்டினியாய்க்கிடக்கச் செய்துவிட்டனரேயென் றுயாசமுற்றனள்.

சீடர்களே? அவ்விதமாகத் துக்கித்த சௌந்திரவல்லியை மேகவர்னன் அன்னைகண்டு திரேகம்வியர்த்து, ஆ! கண்ணே? ஏனிப்படி வருத்தமுறலானாய்! நீ இங்கு உன்னைசை மச்சியைப் பார்க்க எவ்வித விருப்பங்கொண்டனையோ, அதுபோல், உன்னைக்கண்டவுடன் என்மகள் அண்ணா? நீர்மாத்திரம் எங்களைப்பார்க்கவந்தவர் எனதன்புள்ள அண்ணியம்மாளையேனழைத்துவரவில்லையென்று மனஸ்தாபம்பட்டனள். அவளுக்கு ஓர் ஆண்குழந்தைபிறந்தோங்கி பள்ளியில் வாசிக்கின்றான். அவன் தந்தைக்கே அந்நகரையாண்டுவர பட்டமுங்கட்டி யுனைக்கண்டு யாங்கள்மகிழ, உன்நாயகனாலிங்குற்றோம். அம்மா குழந்தாய்? அங்குன் நாயகன்வந் துற்றபோது, உனைத் தானடைந்த பெருமையை ஒன்றுவிடாமற் கூறினான்.

அடீ எங்க ளருமை மருமகளே? உன் சேதிமுழுது மறிந்து எந்நாட்டில் மிகுதுக்கித்தேன். ஆ! அப்பாபி அரக்கனால் அன்று எவ்வாறு துக்கித்தனையோ! அக்கொடியதுட்டன் கண்ணுக்கு, நீ எவ்விதங்காணப்பட்டனை? அய்யோ! யாங்கள்பெற்

று திருநாமமிட்டுவளர்த்தவுன்கணவன், இப்பத்துவருடகால மாகக் காணுமல், எவ்வளவு வருத்தப் பட்டோம். அதுபோலு னைக்காணுமல் உன் தாய்தந்தையர்களும், மற்றுமுள்ளாருமெத் தன்மையுண்டாய துக்கத்தை யனுபவித்தார்களோ! ஆ! நாம் பெண்ணுய்ப் பிறந்ததை விட மண்ணுய்ப் பிறக்காமற் போ னேமே! என்றயர்ந்து துக்கித்து வாடி நின்றிருந்தனள்.

அப்போது சௌந்திரவல்லி தன் மாமிமுகம் நோக்கி, எனையன்பு பாராட்டி ஆளவந்த மாமீ? நீங்களேயிப்படி வருத் தப்பட்டு, விம்மி விம்மி, கண்ணீர்விடில், யான் எம்மாத்திரம், தங்கள் மாட்டுப்பெண் எவ்விதத் துக்கத்தையடைய நேரிடும். பெண்ஜெனனத்தைப்பற்றி, தங்கள் வருத்தத்தை முன்னிட்டுத் தாழ்மைப்படபேசினது, சிலபெண்கள் இதுநீதிநெறியுளவார்த் தைகள் தானென்று ஒப்புக்கொள்ளார்களம்மா. ஈதிருக்கட்டும், சற்றுகவனிப்பீர். எனை அவ்வரக்கன் கொண்டுசென்று அவன் வாழுங் குகையில் வைத்திருந்தது முதல், எனைக் கலியாணஞ் செய்து பிள்ளைகளையும், பெண்களையும் பெற்ற வரையில், ஒரு வாறு என் மணுளர் கூறியிருப்பாரே யொழிய, பூரணமாய் மொழிந்திரார் அம்மணீ, யான்பிறந்தக்கொடியவினையால், இந் நகர்பட்டபாட்டை யென்னென்றுதான்கூறித் துக்கத்தையாற் றுவேன்! தீதுள இலக்கினத்தில் யான்பெண்ணுய்ப்பிறந்திருக்க வேண்டும். இல்லாவிடில் எனைப்போல் யார் அனுபவித்திருப் பார்கள் என்று துக்கித்து வாடினுள்.

அவ்வாறு துக்கிக்கும் சௌந்திர வல்லியைக் கண்ட அவள் பெரிய புத்திரன் ஞானேந்திரன் அவனன்னை முகம் நோக்கி விம்மிவிம்மி பெருமூச்சுவிட்டு, கண்ணீர்வடித்துக் கூறலானுன். எவ்வாறெனில்:—

ஞானே—எனைப் பத்துத்திங்களுங் கழித்துப் பெற்று அருமை யுடன் வளர்த்ததாயே? ஈதென்ன கோரம்! எனது தந்தை, பத்து பதினைந்து தினத்துக்கு முந்தி, தங்க ளிடம் எங்ஙனமோசென்று வருவதாகக்கூறிச் சென்ற வர், அவர் தன்னந்தனியேவாராமல், இவ்விரண்டுகிழங் களையிழுத்துக்கொண்டு இங்குவிடக்கலாகுமா? தாங்க ளிவர்களைமுன்பின் பார்த்ததுபோல்வருந்தி வருத்தப்

படுகின்றீர்களே! இவர்களை யெந்நாட்டிலிருந்து என் தந்தை பிடித்துக்கொண்டுவந்தார்? இவர்கள் யாரோ தாயே?

சௌந்—அடா கண்ணே ஞாநேந்திரா? இவர்கள் யாரெனில், நமதுநாட்டுக்குவடதிசையில்போகபுரியெனுஞ்சிறந்த பட்டினத்துக்கரசர். இவர் மகானுபாவர். நற்கீர்த்தி வாய்ந்து வருபவர். இவர்தேவிதான் அருகிலிருக்கும் புண்ணியவதி. உன்னையும், என்னையும், உன் தந்தையையும், அருமைக் குழந்தைமுதலிய யாவரையும் அடக்கி யாளவந்த குணவந்தர்கள் அடா கண்ணே.

ஞாநே—அம்மாபாக்கியவதி? போகபுரியெனும் பட்டினமெங்கிருக்கிறது! நாமெங்கிருக்கின்றோம்! இவர்கள் இங்குற்று நம்மை யாளவேண்டிய பாத்தியதை யென்ன இருக்கின்றது? இவர்கள் யார்? நாம் யார்? அப்படிக்கொற்ற இக்கிழங்களைத் தாங்கள் கண்டு வருத்த முறுவானேன்! அவ்வருத்தத்தை யான் காணக் காண என் மனம் புண்படுகின்றதே! யான் இன்று எழுந்த வேளையின் கொடுமையை யென்சொல்வேன் தாயே!

சௌந்—அடா மகனே? நீயெழுந்தவேளையின் மீது குற்றங்கூற வெணுதடா, இதோ நிற்கும் உன் தந்தையைப் பெற்றெடுத்துவளர்த்து, அநேக ஆசிகள்கூறின தாய் தந்தையர்களென்று இவர்களைத் திண்ணமா யறிவாயடா. (அப்போது மேகவர்னன் புன்சிரிப்புக் கொண்டனனென் றறிவீர்கள்.) அப்பா சுதனே? இவர்கள்தான் எனக்குச்சொந்த மாதுலர் மாமியென் றுணர்வாயடா இனியுனக்கு யாதொருதாழ்வுமில்லை மாசிலாமணியே.

ஞாநே—அ! அ! இதென்ன! இதென்ன! அம்மணீ! இவ்வெனக்கு மூதறியோரா! இவ்வம்மணி எனக்கு மூதறியாட்டியா! இதென்ன அனியாயம்! அந்தோ! சிறுபிள்ளைத்தனத்தால், ஏதேதோவுளறிவிட்டேனே, ஆ! மதியே! எப்பெரியோரைக் காணினும் போற்றிசெய்து அவர்கள் ஆசிபெற்றுவாழவேண்டுமென்று நீதியிருக்க, இப்படியு ிகழ்ந்து கூறினது என் மரபுக்கடு

க்குமா! அய்யோ! நாம் கூறிய தாழ்வான வார்த்தையைக்கேட்டு, இவர்கள் யாது நினைத்தார்களோ! சரி-சரி. அறிவிலுயர்ந்த என்மூதறியோர்களாகிய தாதா? ஆயா? இதோ உங்கள்பாதம்பணிந்தேன். அடிமைக் குற்றத்தை மன்னித்து ஆட்கொள்ள வேண்டும். சிறியேன் உரைத்த தாழ்வான வார்த்தையைச் சற்றும் நினையாமல் மனம் பொறுத்தல் உங்கள் கடமை. எந்தந்தையை யீன்ற மூதறியோர்களென்று முன்னந் தெரிந்துகொள்ளாப் பாவியா யுற்றேன்.

அப்போது, போகபுரியையாண்டபுவனேந்திரராஜன் அகமகிழ்ந்து, அங்கம்பூரித்து, அடா அறிவுபடைத்த ஞானேந்திரக் கண்ணே? என்குலத்தைவிருத்திசெய்யவந்த எங்களரியபௌத்திரனே? வாழி வாழி, நீயும் உன்சோதர சோதரிகளும் சதா வாழி, இனிஎழுந்திருப்பாயென்றுரைத்துக் கட்டிமுத்தமிட்டு, திருஷ்டிகழித்து,மடி மீதிருக்கவைத்து, அடாகண்ணே? நீயோ சிறுகுழந்தை, உன்சொற்கள் யாவையும் மதலைச் சொற்களென்றுநினைத்து ஆசையுற்றேம். அதனால் எங்களுக்கு அணுவளவேனுங் குற்றமில்லை. உன் அறிவை விருத்தி செய்துகொள்ளப் பற்பல சாத்திரங்களையும், செங்கோற் கரத்திற்றுங்கி யாவருங் கொண்டாடும் படிக்கு, இதுமுதல் நற் சகவாசமுஞ் செய்து வருவாயப்பா. உங்களெல்லோரையும் நம்பிவந்த எங்களிருவரையுங் காப்பது உங்கள்கடமையாக்கும். எங்கள் அன்புள்ள சீராளா? இப்போது அன்னமருந்த தேசகால மாய்விட்டபடியால், யாவரும் ஆசாரக்கட்டுக்குச்செல்வோம் வருவாய் கண்ணேயென்றழைத்துக்கொண்டு அந்தப்புரஞ்சென்றனர்கள்.

பிறகு,யாவருந்தனித்தனியே, குளிக்குமண்டபஞ்சென்று வெந்நீராடி, யீரந்துவட்டி, நெற்றியில் வெண்ணீறணிந்து, மாசிலாமணிபதம்போற்றி, அறுசுவைபதார்த்தத்துடன் அன்புடன் உண்டு களித்துப் பின், ஆஸ்தான மண்டபமுற்று நித்திரை போந்து, அன்றிரவைக்கழித்து, அருணோதய காலத்திலெழுந்து, நித்தியகடனை முடித்துக்கொண்டு, ஈசனைப்பணிந்து பின், சபையை நாடிச்சென்று அவரவர் சிம்மாசனத்தில் வீற்றிருந்தனர்கள். அப்போது, மந்திரிகள் முதலிய யாவரும் எழுந்து

பூமாரி பொழிந்து, நமது மேகவர்னராஜர் செங்கோல் தருமராஜன் நீதியையொக்க வாழ்க வாழ்க என்று மனம்பூரித்து வாழ்த்தினார்கள். அச்சமயம் பராசத்தி அசரீரியாய்த்தோன்றி, ஏ! மேகவர்னக் குழந்தாய்? நீயும், உன்செங்கோலும், உன் மக்களும் நீடூழி வாழ்கவென் றாசிர்வதித்துச் சென்றனள்.

ஏ! சபையோர்களே? இப்புவியின்கண் மானிடதேகமெடுப்பதுமிகவுமரிது. அப்படிக்கு இம்மானிடதேகமெடுத்து அரிய பெரிய நன்னெறியில் ஈடுபட் டுழன்று, எதையடையக் கூடியதோ அதையடைந்து நற்கதியடையாமல், பலவாறுமதியைச் சிதறவிட்டுக் கெட்டலைவது மறுபிறவிக்கேதுவாகும். அந்தோ! அம்மதிமயக்கென்னும் பேய், சிலரைப்பிடித்து, வாயல், பெற்றோர், மற்றோர் யாவரையும் விடுத்துக் கெட்டலையும் வழியிற் கொண்டு செல்கின்றது. இது எனதனுபோகத்தை யொட்டியிருப்பதால், நீங்கள்யாவரும் வீணில் மதிமயக்கடையாமல் நல்வினைப்பணிந்து பொல்லாவினைக்கிடுபாடாகாமலிருந்து வாழ வேண்டி திருநெறிசெந்தமிழ்க்காதைக்களஞ்சியர் மாசிலாமணி பதம்போற்றினேன். என்றுரைத்து இராஜகாரியத்திற் பிரவேசித்து யாவராலும்புகழப்பெற்று வாழ்ந்துவந்தனன். சுபம்!

அப்பா சீடர்களே? நீங்களெனைக் கேட்டுக்கொண்டவாறு மதிமயக்கால் மானமிழந்தோடிய மேகவர்னன்காதையை விரிவாயுரைத்தேன். உலகில் மானிட ஜென்மமெடுத்து அதிசெல்வத்தாலும், தரித்திரத்தாலும் கெருவமடைந்து பிறரையிலக்ஷியம்வையாமல் மதிப்பற்றுபேசுமவர்கள் அநேகருளர். அவர்களுள் பிரமகுலத்திலுதித்து, ஆசாரியர்பீடம்வகித்து நன்கீர்த்தியடையாமல் "வாஞானீ வீஞளாக்கிக்கொண்ட வல்லாளகெண்டன்" காதையை நாளையதினம் உரைப்பேன். இப்போதுசந்தியாவந்தன காலஞ் சமீபித்தபடியால் நாமெல்லோருங் கங்கையாடச்செல்வோமென்று எழுந்தருளினார்கள். கல்யாணி!!!

மதிமயக்கால்மானமிழந்தோடிய

மேகவர்னன்காதை

சம்பூர்ணம்.

உ

வேலுமயிலுந் துணை.

வாயுரைவாழ்த்து.

இ-ம். குல்ரோஜ், அல்லது இங்கிலீஷ் நோட்டு.

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க நம்மை யாளும் ஜார்ஜு மன்னன் வாழ்கவே
வாழ்க வவர் தேவி மேரி யம்மாள் வாழ்கவே
வாழ்க நித மவர் மக்கள் மாண்பாய்வாழ்கவே
வாழ்க இட்டா பார்த்த சாரதி வள்ளல் வாழ்கவே
வாழ்க என்றும் நிதி பெருக வணிகம் வாழ்கவே
வாழ்க கன்னன் பின்னாய் வந்த மகிபன் வாழ்கவே
வாழ்க சக்கிர பாணி கீர்த்தி மண்ணில் வாழ்கவே
வாழ்க வானவர் தானவர் புகழ நிதமும் வாழ்கவே
வாழ்க குணமுந் தனமும் யாவும் வகித்து வாழ்கவே
வாழ்க கண்ண னருளைப் பெற்று கனமாய் வாழ்கவே
வாழ்க தாழ்மை யிலாப் பொருளைப் பெற்று வாழ்கவே
வாழ்க மதி படைத்த மங்கை யடைந்து வாழ்கவே
வாழ்க மக்க டனைப் பெற்று மரபும் வாழ்கவே
வாழ்க புலவர் பாட லென்றும் புகழ வாழ்கவே
வாழ்க பெரியோர்சிறியோ ரன்பாய் கொஞ்சி வாழ்கவே
வாழ்க. போரூர் மடாதி பதியின் பாதம் வாழ்கவே
வாழ்க சிவப் ப்ரகாச சுவாமி சித்தம் வாழ்கவே
வாழ்க பத்தர் பலருஞ் சென்று போற்றி வாழ்கவே
வாழ்க வேளாண் குடிகட் பலரும் பெருகி வாழ்கவே
வாழ்க மாரி பெய்து மேழிச் செல்வம் வாழ்கவே
வாழ்க மேக வர்னன் காதை படிப்போர் வாழ்கவே
வாழ்க மாசி லாமணி பதம் மேலாய் வாழ்கவே
வாழ்க தாக்ஷி யிலாம லெவரும் வாழ்க வாழ்கவே

வாயுரைவாழ்த்து

சம்பூர்ணம்.

75

Cond good
checked 10 1 68

குலசேகரன்.

இது ஒரு புதிய தமிழ் துப்பறியும் நாவல்.

இதில் துப்பறிபவர்கள் பாடசாலையில் வாசிக்கும் சிறுவர்களாதலால் இது மற்ற துப்பறியும் நாவல்களினும் மிக்க ஆச்சரியமானது. இதில் குலசேகரன் என்னும் சிறுவன் துஷ்டனான தனது கார்டியன் தனக்கு உண்டாக்க நினைத்த ஆபத்துகளிலிருந்து தப்பித்துக்கொள்ள உபயோகிக்கும் ஆழ்ந்த யோசனையும், மனோதைரியமும். சாமர்த்தியமும் வாசிப்பவர்களுக்கு மிக்க வியப்பையும் சந்தோஷத்தையும் தரும்; மேலும் இவன் தன் உயிருக்குத்துணிந்து தன் பகைவரிடத்திற்குச்சென்று, நெடுநாளாய்க் காணமற் போயிருந்த தன் தாயாரைக் கண்டு பிடித்து அவளைச் சிறையிலிருந்து மீட்பது அவனுடைய மாத்ரு வாஞ்சையை நன்கு விளக்குகிறது. இச்சிறுவனுடைய வீரதீர சாமர்த்தியங்கள் பிரசித்திப்பெற்ற ஒரு வயது முதிர்ந்த துப்பறிபவனுடைய செயல்களைப்போலவேயிருப்பது மிக்க வியப்பைத்தரும். இத்தகைய துப்பறியும் நாவல் இதுகாறும் வெளிவரவில்லை. இதில் சிறுவர்களுக்கு வேண்டிய அநேகம் புத்திமதிகள் அடங்கியிருக்கின்றன. உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் சுத்தமாக பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

விலை அணா 10

விளம்பரம்.

சுந்தரி மனோகரன்	0—12—0
கமலநாதன்	1—0—0
அழகானந்தன்	0—12—0
8 கிரிமினல் கேஸ்	1—8—0
சுந்தர விஜயம்	0—4—0
விகடபூஷணி	0—6—0
ஞானசேகர நிர்தநேஸ்வரி	0—8—0

சக்கிரவர்த்தி அண்டு கோ.

போஸ்ட்டு பாக்ஸ் நெ. 198

மதராஸ்.

P. R. RAMA IYAR & Co., PRINTERS, MADRAS.